# தமிழரசு

1-4-1980 50 காசு.





* முதல் குழந்தையைத் தாமதப்படுத்துங்கள் !

* இரண்டாவது குழந்தைக்கு இடைவெளி தாருங்கள் !!

* மூன்றாவது குழந்தைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள் !!!

# நமது நாட்டில்...

கைத்தறிகளின் எண்ணிக்கை: 38 இலட்சம்

அ) பருத்திக் கைத்தறிகள் 35 இலட்சம்

ஆ) பட்டு, செயற்கைப்பட்டு கம்பளி மற்றும் வேறு ரகங்கள் 3 இலட்சம்

வேலை செய்பவர்கள்: 100 இலட்சம்

1978-ல் உற்பத்தியான கைத்தறி துணி: 27000 இலட்சம் மீட்டர்

1982-83 ஆறாவது திட்டக் காலத்திற்கான உற்பத்திக் குறிக்கோள்-37000 இலட்சம் மீட்டர்

திட்டமிடப்பட்ட செலவு:

| | | |
|---|---|---|
| அ) | மத்திய அரசு | ..ரூ.189.00 கோடி |
| ஆ) | மாநில அரசுகள் | ..ரூ.183.00 கோடி |
| இ) | நிதி அமைப்புகள் | ..ரூ.400.00 கோடி |
| | மொத்தம் | ..ரூ.772.00 கோடி |

துவக்கப்பட்ட தீவிர வளர்ச்சித் திட்டங்கள்—25 (ஒவ்வொன்றும் 10,000 தறிகள் கொண்டது)

துவக்கப்பட்ட ஏற்றுமதிக்கான திட்டங்கள்—21 (ஒவ்வொன்றும் 1,000 தறிகள் கொண்டது)

ஏற்றுமதியான கைத்தறிப் பொருட்களின் மதிப்பு:

| | | |
|---|---|---|
| அ) | 1977-78 .. | ரூ.240.00 கோடி |
| ஆ) | 1978-79 .. | ரூ.274.00 கோடி |




# தமிழரசு

மலர்: 10 இதழ்: 19

1-4-1980






சென்னையில் நடைபெற்ற அனைத்து இந்திய அரசுப் பணியாளர்களுக்குரிய கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு 22.3.'80 அன்று மேதகு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் பரிசளித்தார்.



ஜவ்வாது மலைப்பகுதியில் மலைவாழ் மக்களிடையே சமூகத் தொண்டாற்றிய சென்னை ஸ்டெல்லா மேரிக் கல்லூரி மாணவியருக்கு ஆளுநரின் ஆலோசகர் திரு டி. என். இலட்சுமி நாராயணன் ஐ.ஏ.எஸ்., 20.3.'80 அன்று நற்சான்றிதழ் வழங்கினார்.

# படமும் செய்தியும்

செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த கேளம்பாக்கத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள புயல் பாதுகாப்பு இல்லத்தை 17.3.80 அன்று ஆளுநரின் ஆலோசகர் தலைமையில் ஜெனிவா செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதி செல்வி உஷர்லிராபர்ட் சன் திறந்து வைத்தார்.






# தமிழ்நாட்டில் குடும்ப நலத்திட்ட வளர்ச்சி

**திரு பி. முராரி, ஐ.ஏ.எஸ்.,**
**நல்வாழ்வு குடும்பநலத்துறை,**
**ஆணையர் — செயலாளர்.**

மக்கள் தொகைப் பெருக்கத்தின் வளர்ச்சியைக் குறைத்துக் கட்டுக்குள் நிலை நிறுத்தவேண்டி குடும்பநலத் திட்டத்தைத் தேசியத் திட்டமாக அறிவித்துச் செயல்படுத்திய உலக நாடுகளில் முதல்நாடு இந்தியாவாகும்.

இந்தியாவில் தமிழ்நாடு இத்திட்டத்தை முதன் முதலாகச் செயல்படுத்திய மாநிலம் என்பது சிறப்பான செய்தியாகும். இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலேயே, சமுதாய முன்னேற்றம் கருதி குடும்பநல, தாய்-சேய் நலத்திட்டம் தமிழக மக்களிளிடையே சமுதாய மறுமலர்ச்சியை விரும்பிய தலைவர்களால் பெருமளவு பரப்பப்பட்டு வந்தது என்றாலும் 1952-லே தான் அரசுத் திட்டமாகக் குடும்பநலத் திட்டம் உருவெடுத்தது எனக் கூற வேண்டும். முதல் ஐந்தாண்டுத் திட்டகால இறுதியில்-1956-ல் இத்திட்டம் நம் மாநிலத்தில் வெகுவாக வேரூன்றியது எனலாம். தன்னியக்க நிறுவனங்களும், உள்ளாட்சித் துறை நிறுவனங்களும் குடும்பநலத் திட்ட நிலையங்களை ஏற்படுத்திச் சேவை செய்ய முன் வந்தன. அரசின் சார்பில் குடும்பநலத் திட்ட நிலையங்கள் அமைத்துத் திட்டம் குறித்த தகவல்கள் தந்தும், முறைகள் பற்றிய விவரம் கூறியும், இருபத்தி நாலாயிரம் ரூபாய் செலவில் திட்டம் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செயல்படுத்தப்பட்டது. அதே நேரத்தில் மத்திய அரசில் குடும்ப நல அமைப்பு ஒன்றும், குடும்ப நல ஆலோசனை வாரியம் (Family Planning Advisory Board) ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் குடும்பநல விளம்பரத்திற்கான பொருள்கள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டன. திட்டத்திற்கு ஆதரவாகச் சமுதாயத் தலைவர்களின் பணி பயன்படுத்தப் பட்டது. புத்தறிவுப் பயிற்சி முகாம்கள் நடத்தப் பட்டன. ஊழியர்களுக்குப்பயிற்சி அளிக்கப்பட்டது. தற்காலிகக் கருத்தடை முறைகள் பற்றிச் சொல்லப்பட்டது. 1958-ஆம் ஆண்டுத் திட்டப்படி சென்னை நகரில் குடும்பநலத் திட்ட நிரந்தர சிகிச்சை ஏற்ற தந்தைக்கு ரூ. 15-ம் தாய்க்கு ரூ. 25-ம் ஈட்டுத் தொகையாகத் தரப்பட்டது. 1959-ல் சென்னை நகரைச் சார்ந்த தகுதி வாய்ந்த தம்பதிகள் அனைவருக்கும் நிரந்தர சாகிச்சைத் திட்டம் விரிவாக்கப்பட்டு, ஈட்டுத் தொகை ரூ. 30 என உயர்த்தித் தரப்பட்டது. இப்போது குடும்பநல நிரந்தர சிகிச்சை ஏற்கும் தந்தைக்கு ரூ. 75-ம், தாய்க்கு ரூ. 85-ம் ஈட்டுத் தொகையாக வழங்கப்படுகிறது.



1960-ஆம் ஆண்டு நிரந்தர சிகிச்சைக்கான தீவிரத் திட்டம் மாவட்டங்களில் செயல்படத் தொடங்கியது. குடும்பநல நிரந்தரச் சிகிச்சை ஏற்றவர்களை ''ஊக்குவிப்பாளர்களாக'' (Canvassers ) நியமித்து, தகுதி வாய்ந்த தம்பதியர் நிரந்தர சிகிச்சை ஏற்குமாறு உந்தப்பட்டனர். ஊக்குவிப்பாளர் மூலம் நிறைவேற்றப்பட்ட நிரந்தர சிகிச்சை ஒவ்வொன்றுக்கும் ரூ. 10 அவர்களுக்கு ஊதியமாகக் (canvassers Fee ) கொடுக்கப்பட்டது. மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள், ஆரம்பச் சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள் ஆகியவை குடும்ப நலத் திட்ட நிரந்தர சிகிச்சை செய்வதற்கான நிலையங்களாக அறிவிக்கப்பட்டன. அரசு மருத்துவமனைகளில் 15 நகர்ப்புற குடும்ப நல நிலையங்கள் (Urban Family Welfare Centres ) அமைக்கப்பட்டன. இத்திட்டகாலத்தில் 18.31 இலட்ச ரூபாய் தமிழகத்தில் செலவிடப்பட்டது.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டகாலமான 1961-66-ல் மருத்துவமனைகள் மூலம் பரப்பப்பட்டு வந்த (Clinical Approach ) இத்திட்டம், விரிவாக்க அணுகுமுறை மூலம் ( Extension Approach ) பரப்பப்பட்டது. மாநில குடும்ப நல வாரியம், மாவட்டக் குடும்ப நல வாரியம் போன்ற ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. ஊக்குவிப்பாளரைப் பயன்படுத்தும் முறை (canvassing System ) தேவையற்றது என 1963-ல் அரசு அறிவித்தது. விரிவுபடுத்தப்பட்ட குடும்பநலத் திட்டத்தை அனைத்துஅரசு மருத்துவமனைகளிலும் செயல்படுத்துவதற்கான ஆணையை 1965-ஆம் ஆண்டு அரசு பிறப்பித்தது. மாவட்டக் குடும்பநலத் திட்டச் செயலகங்கள் ஏற்படுத்தப்பட்டன. 125 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் குடும்பநலத் திட்ட நிலையங்கள் அமைக்கப்பட்டன. கிளை நிலையங்கள் ( Subcentres ) திறக்கப்பட்டன. கருத்தடை வளையம் பொருத்தும் திட்டம் 1965-ல் அறிமுகப்படுத்தப் பட்டது. தொடரினச் செலவுக்காக (Recurring Expenditure) 75 சதவிகிதமும், தொடராச் செலவுக்காக ( Non-recurring Expenditure) 100 சதவிகிதமும் மத்திய அரசு நிதி உதவி கிட்டியது. உள்ளாட்சித் துறை நிறுவனங்களைச் சார்ந்த தலைவர்கள், ஆணை



யர்கள் குடும்பநல மாநாடு சென்னையில் நடத்தப்பட்டது. மூன்று குடும்பநலத் திட்டப் பயிற்சி நிலையங்கள் திறக்கப் பட்டன. அடுத்த பத்தாண்டு களில் பிறப்பு விகிதத்தை 1000-க்கு 25 ஆகக் குறைக்க வேண்டுமென்ற இலக்குடன், இத் திட்ட காலத்தில் ரூ. 155.75 லட்சம் இம்மாநிலத்தில் செல விடப்பட்டது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 2922.01 இலட்சரூபாய் செலவில் குடும்ப நலத் திட்டம் முன்னுரிமை அளிக் கப்பட்டுத் தமிழ்நாட்டில் செயல் படுத்தப்பட்டது. 'பேறுகாலத் திற்குப்பின் குடும்பநலம் பேணும் திட்டம் (All India Hospital Post Partum Programme) இத் திட்டக் காலத்தில் தொடங்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. குழந்தை களுக்கு மூன்று நோய்த் தடுப்பு ஊசிபோடுவதும், கருவுற்ற தாய் மார்களுக்கும், குழந்தைகளுக்கும் கூடுதல் சத்துணவுத் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது. தாய்-சேய்-நலத் திட்டம் குடும்பநலத் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப் பட்டுச் செயல்படத் தொடங்கி யது. திட்டம் குறிப்பிட்ட கால வரையறைக்குரியஇலக்குகளுடன் நிறைவேற்றப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டதும் இத்திட்ட காலத்தில்தான், மருத்துவக் கருச்சிதைவுத் திட்டம் (M T.P.) சட்ட சம்மதத்துடன் நிறைவேற ஆவன செய்யப்பட்டது. இத் திட்டகாலத்தில்தான் மாவட் டங்களில் குடும்பநல முனைப்பு இயக்கங்கள் ( Intensive Family Planning campaigns) நல்வாழ்வு நிலையங்கள் ( Health Resorts அமைக்கப்பட்டு, இந்திய அரசின் பாராட்டும் நடத்தப்பட்டன. இத்திட்ட காலத்தில் 1970-71 ஆம் ஆண்டைத் தவிர, தமிழகம் நிரந்தர சிகிச்சையை நிறை வேற்றுவதில் இலக்கு மீறிய சாதனையை ஏற்படுத்தியது.

நான்காவது திட்ட காலத்தில் தான் குடும்பநலத்திட்டப் பிரச் சாரத்திற்கென்று மாநில மட்டத் தில் விளம்பரப்பிரிவும் அதற்கான அலுவலர்களும் ஏற்படுத்தப்பட் டனர். மாவட்டஅளவில் விளம்பர அலுவலர்களும், பிறரும் நியமிக் கப்பட்டனர். ஸ்வீடன் நாட்டு உதவியுடன் மருத்துவ-குடும்ப நலத்துறை இயக்குநரகத்தில் குடும்பநல அச்சகம் நிறுவப்பட் டது. குடும்பநலச் செய்திக் கதிர்' என்ற மாத இதழ் வெளியிடப்பட் டது. அதோடுகூட, துண்டுவெளி யீடுகள், சுவரொட்டிகள் போன் றவைகளும் வெளியிடப்பட்டன. இந்திய அரசின் பாராட்டைப் பெற்றுள்ள குடும்பநல அச்சகம் சிறப்பாகப் பணியாற்றி வரு கிறது.

குடும்பநலச் செய்திக் கதிரில்' திட்டத்திற்கு ஆதரவான மதப் பெரியவர்கள் உள்ளிட்ட பல துறை அறிஞர்களின்பேட்டிகளும், நிரந்தர சிகிச்சைசெய்துகொண்ட பெருவாரியான தாய், தந்தைய ரின் பேட்டிகளும் வெளியிடப் பட்டு திட்டத்திற்கு ஆதரவு தேடப்பட்டது குறிப்பிடத் தக்க தாகும். உலக மக்கள் தொகை ஆண்டு, உலக மகளிர் ஆண்டு, உலகக் குழந்தைகள் ஆண்டு தொடராகவும், மற்ற நேரங்களி லும் வெளிக் கொணரப்பட்ட 'குடும்பநலச் செய்திக் கதிர் மலர்கள் திட்டத்திற்கு ஆக்கம் சேர்த்துத் தந்துள்ளன. அதே போல் குடும்பநலத் திட்டத்தில் தமிழகம் கையாண்டு வரும் விளம் பர உத்திகளை இந்திய அரசு பாராட்டியிருப்பதோடு மற்ற மாநிலங்களையும் பின்பற்றுமாறு சொல்வது நமக்குப் பெருமை சேர்ப்பதாகும். தமிழகம்தான் இந்தியாவிலேயே 17 குடும்பநலத் திட்ட திரைப்படங்களை எடுத்து வெளியிட்டுள்ளது என்பது மற் றொரு சிறப்பாகும். அதேபோல் குடும்பநலத் திட்ட பிரச்சாரத் திற்கென அனைத்துக் கட்சியினர் கலந்து கொண்ட கூட்டத்தை நடத்திய பெருமை நம் மாநிலத் திற்கே உரியது. இதை அறிந்த இந்திய அரசு பிற மாநிலங்களும் இத்தகைய நிகழ்ச்சிகளை நடத்த வேண்டுமென கருத்துஅறிவித்தது குறிப்பிடத்தக்கதாகும். அண் மைக்காலங்களில் நடத்தப்பட்டு வரும் கிராமியக்குடும்பநலக்கலை விழாக்களும், ஊர்வலங்களும், பட்டிமன்றங்களும், சிறந்த விளம் பர உத்திகளாகும். இவை திட்ட வெற்றிக்குப் பேருதவி புரிந்து வருகின்றன.

குடும்ப நலத்திட்ட நாடகப் படிகளை தேர்ந்தெடுக்கவும், குழுக்களைத் தேர்ந்தெடுக்கவும் 'நாடகப் பொறுக்குக் குழு', அமைக்கப்பட்டது. நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், பொம்மலாட்டம், திரைப்படக் காட்சிகள் ஆகி யவை தொடர்ந்து நடக்க ஏற் பாடு செய்யப்பட்டது. இங்கு நடைபெறும் குடும்பநல விளம் பரப் பணிகள், இந்திய அரசால் பிற மாநிலங்களுக்குப் பரிந் துரைக்கும் வகையில் சிறப்பாக நடந்து வருகின்றன.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டமான 1974-79-ஆம் ஆண்டு களில் குடும்பநலத் திட்டம் முன்னுரிமைத் திட்டமாகத் தொடர்ந்து செயல்படுத்தப் பட்டது. இத்திட்டக் காலத்தில் 'உட்கொள்ளும் கருத்தடை மாத் திரை வழங்கும்திட்டம்' (Oral pills programme) அறிமுகப்படுத்தப் பட்டு, பின் அனைத்து மருத்துவ மனைகள், ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஆகியவற்றிற்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 1975



ஆம் ஆண்டு எல்லாக் கிராமப்புற, நகர்ப்புறக் குடும்பநல நிலையங்கள் வாயிலாகவும் திட்டம் செயலாவதற்கு வழி செய்யப்பட்டது. பரம்பரை மருத்துவச்சிகளாக உள்ளவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் (DAIS Training Programme) 1974—75ல் துவக்கப்பட்டு, 78-79 வரை 5146 பேர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். 1976-ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் நாள் நமது நாடாளு மன்றத்தில் தேசிய மக்கள் தொகைக் கொள்கை அறிவிக்கப்பட்டது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 3700 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டு பலமுனை உத்திகளுடன் தமிழகத்தில் குடும்பநலத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைத்துத் துறையினரின் உதவியோடும், தன்னியக்க நிறுவனங்களின் ஒத்துழைப்போடும் திட்ட வெற்றிக்கு உதவி வருகின்றனர்.

இத்திட்டத்திற்குத் துணையாக 1975-76ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் உதவித் திட்டமும், 1978-79ஆம் ஆண்டில் 'டானிடா' உதவித் திட்டமும் கிட்டியுள்ளன.

தமிழகத்தில் அனைத்து அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும் குடும்பநலத் திட்டத்திற்குத் தொடக்க காலம் முதல் ஒத்துழைப்பு நல்கி வருவதால், அரசியல் அரவணைப்புடன் (Political Commitment) திட்டத்தை வெற்றி பெறச் செய்ய முடிந்தது என்பது உண்மையாகும்.

மிகச் சிறந்த முறையில் குடும்பநலத்திட்டத்தைச் செயல்படுத்தி வெற்றி ஈட்டி இந்திய அரசின் தேசிய விருதுகளைத் தமிழ்நாடு பெற்றுள்ளது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். 1961-62, 1962-63, 1965-66, 1966-67, 1973-74, 1974-75, 1975-76 ஆகிய ஆண்டுகளில் இந்திய அரசின் தேசிய விருதுகளை இந்தியாவிலேயே குடும்பநலத் திட்டத்தை மிகச் சிறப்பாகச் செயல்படுத்தியதற்காகத் தமிழ்நாடு பெற்றுள்ளது.

தமிழ்நாட்டில் குடும்பநலத் திட்டம் துவங்கப்பட்ட காலம் முதல் 1979-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வரை 29 லட்சத்து 99 ஆயிரத்து 267 பேர்கள் நிரந்தர சிகிச்சை ஏற்றுள்ளனர். 3 இலட்சத்து 71 ஆயிரத்து 832 தாய்மார்களுக்குக் கருத்தடை வளையங்கள் பொருத்தப்பட்டுள்ளன. பிற முறைகளையும் கையாண்டுள்ளனர். இதன் பயனாக தமிழகத்தில் ஏறத்தாழ 3.4 மில்லியன் குழந்தைகளின் பிறப்பு தடுக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் 1980 பிப்ரவரி மாதம் முடிய 1 லட்சத்து 15 ஆயிரத்து 998 பேர்கள் குடும்பநலத்திட்ட நிரந்தர சிகிச்சை செய்து கொண்டுள்ளனர். 26 ஆயிரத்து 117 தாய்மார்களுக்குக் கருத்தடை வளையம் பொருத்தப்பட்டுள்ளது. மற்ற மற்ற கருத்தடைமுறைகளையும் மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.

எதிர்காலத்திலும் குடும்பநலத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தி தமிழகம் தனக்கென உள்ள புகழைத் தக்க வைத்துக் கொள்ளும் என எதிர் நோக்கலாம்.

(நன்றி : சென்னை வானொலி நிலையம்) 15. 3. 80.



## கைத்தறி
## சில தகவல்கள் !

* கைத்தறி நெசவு, நாட்டின் மிகப்பெரிய கைத் தொழில்.
* நாட்டின் மொத்தப் பருத்தித் துணியில், மூன்றில் ஒரு பங்கு கைத்தறி நெசவாளரால் உற்பத்தி செய்யப்படுகிறது.
* விவசாயத்திற்கு அடுத்தபடியாக, கைத்தறித் துறை பெரும் எண்ணிக்கையிலானோருக்கு வேலை வாய்ப்பளிக்கிறது. அறுபதுக்கு ஒருவர் கைத்தறித் தொழிற்துறையில் வேலை செய்கிறார்கள்.
* கைத்தறியின், லயமடங்கிய ஒலி, ஏறத்தாழ நாட்டின் ஒவ்வொரு கிராமத்திலும் கேட்கிறது.
* நாடு ஏற்றுமதி செய்யும் பருத்தித் துணிகளில் மூன்றில் ஒரு பங்குக்கு மேல், கைத்தறித் துறையிலிருந்து கிடைக்கிறது. ஏற்றுமதியாகும் ஆடைகளில் 60 சதவிகிதத்திற்கு மேல், கைத்தறியில் தயாரானவை.



## தமிழ் நாட்டில்

# கைத்தறித் தொழில் வளர்ச்சி

வி. சங்கரசுப்பையன்,
ஐ.ஏ.எஸ்.,
கைத்தறித்துறை இயக்குநர்.

தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் பழம்பெரும் தொழிலாகும். அது இந்நாட்டின் துணித் தேவையின பெரும்பகுதியைப் பூர்த்தி செய்து வருகிறது. இத் தொழிலைப் பாதுகாக்கும் வகையில் இதன் சரக்குகளுக்கு உள்நாட்டிலேயே நல்ல கிராக்கி இருக்கிறது. தவிர, கைத்தறி ஜவுளிகளில் காலத்திற்கேற்ற நவீன ரகங்களின் பெருக்கத்தாலும், அது கொண்டிருக்கும் அற்புதமான கைவண்ணத்தாலும் உலகச் சந்தைகளில் நல்ல இடத்தைப் பிடித்து ஏற்றுமதியில் முன்னேறியிருக்கிறது. அதன் தொழில் நுணுக்கத்தையும் கைவண்ணத்தையும் பெருக்கினால் இன்னும் அதன் ஏற்றுமதியைப் பன்மடங்கு பெருக்க முடியும். விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிக வேலை வாய்ப்பினைத் தருவது கைத்தறித் தொழில் தான்.

தமிழ்நாட்டில் 5.56 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. அதன் மூலம் 10.00 இலட்சம் பேர் வேலை பெற்று 30.00 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர். கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பினைத் தருவதுதான் இம்மாநில கைத்தறித் தொழிலின் திட்டங்களாகும். நம் நாட்டின் துணித் தேவையின் அளவான 230 கோடி மீட்டரில், ரூ. 150 கோடி மதிப்புள்ள 60 கோடி மீட்டர் துணி தமிழ்நாட்டில் உற்பத்தியாகிறது. அகில இந்திய ரீதியில் 1982-83-ஆம் ஆண்டிற்குள் 370 கோடி மீட்டர் துணி கைத்தறியில் உற்பத்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த உச்ச வரம்பை முன்னிட்டு மாநில அளவில் நமது கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு முயன்று கொண்டிருக்கின்றன. இந்தக் குறிக்கோளின்படி தமிழ்நாடு அரசு கைத்தறித் தொழிலை வளரச் செய்வதற்கும், நெசவாளர்களின் நல்வாழ்விற்காகவும் கீழ்க்கண்ட வளர்ச்சித் திட்டங்களை அமல்படுத்திக் கொண்டிருக்கிறது:

1. தலைமைச் சங்கங்களில் பங்குகள் பெற்றும், அவைகளுக்குக் கடன்கள் கொடுத்தும் கூட்டுறவுக்குள் கைத்தறிகளைப் பெருக்குதல் — (1982-83)-க்குள் மொத்தம் 60 சதவீதம் எதிர்பார்க்கப்படுகிறது.



2. மாநிலத்திலுள்ள தலைமைச் சங்கத்தின் பங்கு மூலதனத்தையும், பிரதம நெசவாளர் சங்கங்களின் பங்கு மூலதனத்தையும் பெருக்குதல்.

3. கைத்தறித் தொழிலில் உள்ளவர்களுக்கும் குறிப்பாக கூட்டுறவுக்குள் இருக்கும் நெசவாளர்களுக்கும் முக்கியமான உபகரணங்களை வழங்குதல்.

4. தலைமைச் சங்கத்திற்கும், பிரதம நெசவாளர் சங்கங்களுக்கும் தொழில் மூலதனத்திற்காகச் சலுகை முறையில் நிதியுதவி அளித்தல்.

5. உற்பத்திப் பெருக்கம், தொழில் நுணுக்கப் பெருக்கம், நெசவுப் பயிற்சி ஆகியவற்றிற்குத் திட்டமிடல்.

6. ஏழை எளியோரின் துணித் தேவைகளைப் பூர்த்திச் செய்வதற்காக 'ஜனதா' வகைகளை உற்பத்தி செய்தல்.

7. பருத்தி ஆடைகளையும், செயற்கை நூல் துணி ரகங்களையும் பதனிடுவதற்குப் போதுமான பதனிடும் சாலைகள் அமைத்தல்.

8. கூட்டுறவிற்குள் இருக்கும் நெசவாளர்களின் சரக்குகளுக்குத் தலைமைச் சங்கத்தின் மூலம் விற்பனைச் சந்தைகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

9. அந்நியச் செலாவணியை நம் நாட்டிற்குக் கொண்டுவரும் நோக்கத்தில் அயல் நாடுகளுக்குக் கைத்தறி ஆடைகளின் ஏற்றுமதியைப் பெருக்குதல்.

10. 'கூட்டுறவு நெசவாளர்களின் சேமிப்புப் பாதுகாப்புத் திட்டம்'நெசவாளர் குடியிருப்புத் திட்டம் போன்ற நெசவாளர் நலத் திட்டங்களை அமல் படுத்துதல.

1978-79,1979-80-ஆம் ஆண்டுகளில் இத்திட்டங்களின் மூலம் பெற்ற முன்னேற்றங்களும், 1980-81-ஆம் ஆண்டிற்கான திட்டங்களும் சுருக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளன:

தறியில்லாதவர்கள் பயனடைய வேண்டி 6 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், உள்ளூர் நெசவாளர்களின் நலனுக்காகப் புதிய 57 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் 1978-79-ஆம் ஆண்டு நிறுவப்பட்டன. 23,040 தறிகள் இந்தச் சங்கங்களுக்கு இணைக்கப்பட்டன.1979-80-ஆம் ஆண்டு 70 புதிய பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும்,27 புதிய தொழிலியியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் 31-3-80க்குள் பதிவு செய்யப்பட இருக்கின்றன. இவற்றில் கூட்டுறவுக்குள் இருக்கும் தறிகள் 20,200 ஆக பெருகும். 21,500 தறிகளைக் கொண்ட 83 பிரதமநெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் 30 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் 1980-81-ஆம் ஆண்டில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

இப்போது செயல்பட்டு வரும் 6 தீவிர கைத்தறி வளர்ச்சி நிலையங்கள் (தீவிர வளர்ச்சி நிலையங்கள் 4, ஏற்றுமதி ரக உற்பத்தி நிலையங்கள் 2). 31-12-79-க்குள் 11,334 தறிகளைக் கொண்டுள்ளன. இது 31-3-80-க்குள் 14,750 தறிகளாக உயருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த இரண்டாண்டுகளில் இந்நிலையங்களில் மேலும் 7,250 தறிகள் கொண்டு வரப்படும். இந்நிலையங்கள் 1977-78-ஆம் ஆண்டு 8 கோடி மீட்டர் துணியை உற்பத்தி செய்துள்ளது.



இது 31-3-79-க்குள் 8.65 கோடி மீட்டராக உயர்ந்தது. இவற்றின் உற்பத்தியில் 1979-80-ஆம் ஆண்டிற்கு 9.3 கோடி மீட்டர் துணி எதிர்பார்க்கப்படுகிறது. இதன் உச்ச அளவு 1980-81-ஆம் ஆண்டிற்கு 10 கோடி மீட்டர் துணியாக உயர்த்தவிருக்கிறது.

தலைமை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும், பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் 1978-79, 1979-80-ஆம் ஆண்டுகளுக்கு இந்திய அரசாங்க வங்கியின் திட்டத்தின் கீழ் கீழ்க்கண்டவாறு சலுகை முறையில் நிதியுதவி அளிக்கப்பட்டது:

| | 1978-79 | 1979-80 |
|---|---|---|
| | (ரூ. இலட்சத்தில்) | |
| பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் | 17.75 | 17.25 |
| தலைமை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் | 9.00 | 12.00 |

'கோ-ஆப்டெக்ஸ்' எனும் பெயரில் பிரசித்திப் பெற்ற தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஒரு தலைமைச் சங்கமாகும். இதில் தமிழ்நாட்டிலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் இணைக்கப்பட்டுள்ளன. தமிழக அரசின் பங்கு மூலதனமான ரூ. 5.92 கோடியையும் சேர்த்து 'கோ-ஆப்டெக்ஸி'ன் செலுத்தப்பட்டபங்கு மூலதனம் ரூ.6.47 கோடியாகும்.

கைத்தறி ஜவுளிகளின் விற்பனையைப் பெருக்குவதற்குத் தமிழக அரசு 1977-78-ல் ரூ. 1 கோடியும், 1978-79-ல் ரூ. 2 கோடியும், 1979-80-ல் ரூ. 57 இலட்சங்களும் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்தது. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சாய, இரசாயனப் பொருள்களையும், மூலப்பொருள்களையும் வழங்குவதும், அவைகள் உற்பத்திச் செய்த சரக்குகளைக் கொள் முதல் செய்து, அவைகளை விற்பனைச் செய்வதும்தான் 'கோ-ஆப்டெக்ஸின் முக்கியக் குறிக்கோளாகும். தமிழக அரசின் உத்தரவாதத்துடன் இந்திய அரசாங்க வங்கி, இசசங்கத்தின் தொழில் மூலதனத்தேவைகளைப் பூர்த்திச் செய்வதற்கு1979-80-ல் குறைந்த வட்டியில் ரூ. 12 கோடிக்கு கேஷ் கிரடிட் வரம்பு அனுமதித்துள்ளது.

'கோ-ஆப்டெக்ஸ்'1978-79-ஆம் ஆண்டு பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து ரூபாய் 27.51 கோடி மதிப்புள்ள கைத்தறி ஜவுளிகளைக் கொள்முதல் செய்து, ரூ. 34.80 கோடி மதிப்புள்ள கைத்தறி ஜவுளிகளை விற்பனை செய்துள்ளது. 1977-78-ஆம் ஆண்டு ரூ. 18.52 கோடி கைத்தறி ஜவுளிகள் கொள்முதல செய்யப்பட்டு, 23.01 கோடி கைத்தறி ஜவுளிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 1979-80-ஆம் ஆண்டு 29.00 கோடி மதிப்புள்ள கைத்தறி ஜவுளிகள் கொள்முதல் செய்யப்பட்டு ரூ. 38.00 கோடி விற்பனை செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புது டிசைன்களை உருவாக்கி, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நவீன மாதிரிகளிலும், புதிய ரகங்களிலும் கைத்தறி ஜவுளிகளை உற்பத்தி செய்ய ஏதுவாக கோ-ஆப்டெக்ஸ் 1977-78-ஆம் ஆண்டு மதுரையில் வடிவமைப்பு நிலையத்தை ஏற்படுத்தியுள்ளது. 1979-80ஆம் ஆண்டில் அது போன்று திருச்சியில் ஒன்றும் ஏற்படுத்தவிருக்கிறது. மேற்கொண்டு 2 வடிவமைப்பு நிலையங்களையும், சேலத்திலும், கோயம்புத்தூரிலும் 1980-81-ஆம் ஆண்டில் ஏற்படுத்துவதற்கான ஆயத்த ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. 'கோ-ஆப்டெக்ஸ்' அதன் தலைமை அலுவலகத்திலேயே ஒரு தலைமை'டிசைனரை' தலைமையாகக்கொண்டுதொழில் நுணுக்க மற்றும் வளர்ச்சிப் பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கைத்தறிகளை நவீனப்படுத்தி, அதன் தொழில் நுணுக்கத்தைப் பெருக்குவதற்காக தமிழக அரசு 1979-80-ஆம் ஆண்டில் ரூ. 15.50 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் எண்ணற்ற கைத்தறிகள் நவீனப்படுத்தப்படும். குறிப்பாக 'பாலியஸ்டர்' ரகங்களை உற்பத்தி செய்யும் தறிகளுக்கும், ஏற்றுமதி ரகங்களை உற்பத்தி செய்யும் தறிகளுக்கும் இத்துறையில் சலுகை வழங்கப்

படுகிறது. உற்பத்தியைப் பெருக்குவதும், கைத்தறி ஜவுளிகளின் தரத்தை உயர்த்துவதும், உற்பத்தி விலையைக் குறைப்பதும், கைத்தறி நெசவாளர்களின் துயரைத் துடைப்பதும்தான், இதன் தொழில் நுணுக்கத்தைப் பெருக்குவதன் குறிக்கோளாகும்.

கைத்தறி ஜவுளிகளின் விற்பனையைப் பெருக்குவதற்காக 1977-78, 1978-79-ஆம் ஆண்டுகளில் கோ-ஆப்டெக்ஸ் 41 புதிய காட்சி அறைகளைத் திறந்திருப்பதோடு, ஏற்கெனவே உள்ள 45 காட்சி அறைகளை நவீனப்படுத்தியுள்ளது. 1979-80-ஆம் ஆண்டில் 88 புதிய விற்பனை நிலையங்களைத்திறப்பதற்கும், ஏற்கெனவே உள்ள 57 விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இத்திட்டம் 1980-81-ஆம் ஆண்டும் தொடர்ந்து நடைபெறும்.

கைத்தறி நெசவாளர்களுக்குச் சட்டப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டும், அவர்களின் வேலை நிலைமைகளை ஒழுங்குபடுத்துவதற்கும், அவர்களின் வேலை வாய்ப்பிற்குப் பாதுகாப்பு அளிப்பதற்கும், அவர்களின் உடல் நலம், வேலை நேரம், குடியிருப்பு, மருத்துவம் மற்றும் வாழ்க்கை வசதி போன்றவைக்கும் (வேலைவாய்ப்பு நிலைமைகள் மற்றும் இதர வசதிகள்)' தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர்கள் விதி 79'' (conditions of Employment and the miscellaneous provision) என்ற பெயரில் ஒரு விதி தமிழக அரசால் தயார் செய்யப்பட்டு, அது ஒரு கூட்டுத்தேர்வுக்குழுவின் பரிசீலனையில் உள்ளது.

**கைத்தறித் தொழிலுக்கு மூலப் பொருள்கள் வழங்குதல்:**

இம் மாநிலத்தில் 3.14 இலட்சம் கதிர்களைக் கொண்ட 12 கூட்டுறவு நூற்பாலைகள் பல தரப்பட்ட எண்களில் கூட்டுறவிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான பருத்தி நூலை மாதம் 7,000 பேல்கள் வீதம் உற்பத்தி செய்து வருகின்றன. கோ-ஆப்டெக்ஸ் இந்த கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும்நூலைக் கொள்முதல் செய்து, தன் 21 நூல் விற்பனை நிலையங்களின் மூலம் 1002 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்து வருகிறது. கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் தமிழ்நாடு ஜவுளி கார்ப்பரேஷன் ஆலைகள் ஆகிய வற்றின் உபரி நூலை கூட்டுறவுக்கு வெளியிலுள்ள நெசவாளர்களுக்கு விற்பதற்காகச் சேலத்திலும் மதுரையிலும் 2 பொது நூல் விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. தரமான நூல் நியாயமான விலையில் வழங்கப்படுகின்றன என்ற பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுதிப்பாடுதான் கூட்டுறவு நூற்பாலைகளின் நூல், கோ-ஆப்டெக்ஸ் நூல் விற்பனை நிலையங்களின் மூலம் ஒழுங்கான விநியோகத்திற்கு ஏதுவாகிறது.

சென்ற 1979-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பருத்தி நூல் விலை பெருமளவில் ஏறியிருந்த போதிலும் கூட்டுறவு நூற்பாலைகள், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முந்தைய குறைந்த விலையிலேயே அதாவது மே 1979 மாத விலையிலேயே நூலை விற்றது. கூட்டுறவில் உள்ள கைத்தறியாளர்களுக்குக் குறைந்த விலையில் நூலை வழங்கியதனால் கூட்டுறவு நூற்பாலைகள், தங்கள் இலாபத்தின் ஒரு பகுதியை இழந்துவிட்டன. அவை 1979-ஆம் ஆண்டு உற்பத்தி செய்த ரூபாய் 3,370.69 மதிப்புள்ள 149.36 இலட்சம் கிலோ நூலில் ரூபாய் 2,791.40 இலட்சம் மதிப்புள்ள 131.12 இலட்சம் கிலோ நூலை கோ-ஆப்டெக்ஸ் நூல் விற்பனை நிலையங்களின் மூலம் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்தன. கூட்டுறவு நூற்பாலைகளால் தரப்பட்ட விலை சலுகையினால் கோ-ஆப்டெக்ஸ் அவைகளிடமிருந்து நூல் வாங்கிய வகையில் ரூ. 50.55 இலட்சம் விலை அனுகூலம் பெற்றது. கைத்தறித் துறையின் நடவடிக்கைகளினால் 'சீமா' கோயம்புத்தூர் தன் உறுப்பினர் ஆலைகளிலிருந்து செப்டம்பர் 1979 மாதத்திய நியாயமான விலைகளில் 3,674 பேல் நூலை வழங்க ஏற்பாடு செய்தது. மேலும், இந்திய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட கட்டாய நூல் வழங்கும் திட்டத்தின் கீழ்


**தமிழரசு**

**சந்தா விவரம்**

**ஓர் ஆண்டு ரூ. 12**

**அரை ஆண்டு ரூ. 6**


கீழ்க்கண்ட விலைகளில் 'சீமா' வின் உறுப்பினர் ஆலைகளும், தேசிய ஜவுளிக் கழகமும் அக்டோபர் 1979 முதல் டிசம்பர் 1979 வரை கூட்டுறவுக்கு வெளியிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குக் கீழ்க்கண்ட விலைகளில் 10,902 பேல் பருத்தி நூலை வழங்கின:

*60 நெ. கார்டட் வரை— செப்டம்பர் 1979 முதல் வாரம் முந்தைய விலையில் 10 சதவீதம் குறைப்பு.*

*60 நெ. கோம்டு மற்றும் மேற்கொண்டு—செப்டம்பர் 1979 முதல் வாரம் முந்தைய விலையில் 15 சதவீதம் குறைப்பு.*

மேற்கண்ட நடவடிக்கைகளின் படி பருத்தி, நூலின் விலை தற்போது கணிசமாகக் குறைந்திருப்பதோடு, கட்டாய நூல் விநியோகத் திட்டம் ஜனவரி 1980-ன் பிறகு திருத்தியமைக்கப்பட்டது.

**பட்டு மற்றும் ஜரிகை:**

தமிழகத்தில் தற்போது 57 பட்டு கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவை மொத்தம் 11,600 தறிகளைக் கொண்டுள்ளன. இந்தச் சங்கங்களுக்கு மாதந்தோறும் 14,000 கிலோ பட்டும், 5,000 மார்க்ஸ் ஜரிகையும் தேவைப்படுகின்றன.

தமிழகத்திலுள்ள பட்டு கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்குத் தேவையான கச்சாப் பட்டை பெரும்பாலும் பெங்களூரிலுள்ள தனியாரிடத்திலும், ஜரிகையை ஆரணி, கும்பகோணம், சேலம், காஞ்சிபுரம் ஆகிய ஊர்களிலிருக்கும் குஜராத் மாநிலத்தின் சூரத் உற்பத்தியாளர்களின் ஏஜெண்டுகளிடமிருந்தே வாங்குகின்றனர். பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களினால் இவ்விதம் வாங்கப்படும் இதே ரகப் பட்டின் விலை பெருமளவில் வித்தியாசப்படுகிறது. இது போன்றே ஜரிகை வாங்குவதிலும் விலை வித்தியாசப்படுகிறது. தரமான பட்டும், பொன் ஜரிகையும் பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு நியாயமான விலையில் கிடைக்கச் செய்வதற்கு, மத்திய கச்சாப்பட்டு மற்றும் ஜரிகை வாங்கும் குழு ஒன்று ஆகஸ்டு 1978 முதல் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

கோ - ஆப்டெக்ஸ் தனி அதிகாரியைத் தலைவராகவும் காஞ்சிபுரம், ஆரணி மற்றும் திருபுவனம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதி



நிதிகளை உறுப்பினர்களாகவும் கொண்டு இக்குழு, தற்போது நல்ல தரமான கச்சாப்பட்டை நியாயமான விலையில் வாங்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் கச்சாப்பட்டின் வகையை ஆதரிப்பதற்காகக் காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு கூட்டுறவுப் பட்டு விற்பனைப் பெடரேஷன் மூலம் பட்டு நூலை மொத்தமாகக் கொள் முதல் செய்வதற்கு இக்குழு ஏற்பாடு செய்கின்றது. அடுத்து, கச்சாப்பட்டு வாங்குவதில் கர்நாடக மாநில பட்டு விற்பனைப் பெடரேஷனுக்கும், கர்நாடகப் பட்டு விற்பனைப் போர்டுக்கும் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. அது போன்றே தமிழ்நாடு ஜரிகை லிமிடெட், காஞ்சிபுரம் தன் எல்லா உற்பத்தி ஜரிகைகளையும் கோ-ஆப்டெக்ஸ் மூலமே அனைத்துப் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி வருகின்றது. மேலும், தேவைப்படும் ஜரிகை, சூரத் ஜரிகை வியாபாரிகள் சங்கத்தின் மூலம் மத்திய ஜரிகை வாங்கும் குழுவினால் கொள்முதல் செய்யப்படுகின்றன.

இந்திய அரசாங்கம் செயற்கைப் பட்டு நூலை இறக்குமதி செய்வதைத் தாராளமாக்கியுள்ளது. அதற்கிணங்க பல கைத்தறி நெசவாளர் சங்கங்களும் கோ-ஆப்டெக்ஸும் தங்கள் உறுப்பினர்களுக்குத் தேவைப்படும் செயற்கைப்பட்டு நூலை, கைத்தறித் துறையின் வட்டார அதிகாரிகளால் வழங்கப்படும் உண்மையாக உபயோகிப்போரின் சான்றிதழ்களின் பேரில், ஏ. ஜி. எல். திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்தன. தவிர நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்வதற்காக ஒவ்வொரு மாதமும் கோ-ஆப்டெக்ஸுக்கு 30 டன் ஒட்டுத் தன்மையோடு கூடிய செயற்கைப் பட்டு நூலை வழங்குவதற்காக 'தென்னிந்திய விஸ்கோஸ்' நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

கூட்டுறவுக்கு வெளியிலிருக்கும் கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்குவதற்காக, 'தென்னிந்திய விஸ்கோஸ்' நிறுவனத்திடம் மரக்கூழ் பெறும் இதர மாநிலங்களிலிருக்கும் ரயான் நூல் நூற்பவர்களிடமிருந்து ஆண்டுதோறும் 420 டன் ஒட்டுத் தன்மையுடைய செயற்கைப்பட்டு நூலைப் பெறுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

**சாய, இரசாயனப் பொருள்கள்:**

கூட்டுறவுக்கு வெளியே உள்ள கைத்தறி நெசவாளர்கள் தங்களுக்குத் தேவையான சாய, இரசாயனப் பொருள்களை வெளிச் சந்தையில் வாங்குகின்றனர். சொந்தமாக சாயத் தொழிற்சாலைகள் வைத்திருக்கும் சில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் தங்களுக்குத் தேவைப்படும் சாய, இரசாயனப் பொருட்களைச் சுதேசிய உற்பத்தியாளர்களிடம் இருந்தும், அவர்களின் ஏஜெண்ட்டுகளின் மூலமும் பெறுகின்றனர். கோ-ஆப்டெக்ஸும் சமீபத்தில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்வதற்காக சாய, இரசாயனப் பொருள்களைச் சுதேசிய உற்பத்தியாளர்களிடமிருந்து பெறுவதற்கு ஏற்பாடு செய்தது.

சாய, இரசாயனப் பொருள்களை நியாயமான விலைகளில் விநியோகிப்பதற்கு, கோ-ஆப்டெக்ஸின் தனி அதிகாரி, ஈரோட்டிலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு ஜவுளி பதனிடும் ஆலையின் பதனிடும் நிர்வாகி மற்றும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியவர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப் பெற்றது.

தேவைப்படும் முழு அளவான சாய, இரசாயனப் பொருள்களை வாங்குவதற்கும், அவற்றை விற்பனை நிலையங்களின் மூலம் விநியோகம் செய்வதற்கும் உத்தேசித்துள்ளது. சாய, இரசாயனப் பொருள்களை உற்பத்தி செய்வதற்காக தென்னார்க்காடு மாவட்டத்தில் கடலூரில் கூட்டு முறையில் 'வானவில் சாய, இரசாயனப் பொருள்கள்' என்ற பெயரில் தமிழ்நாடு தொழிலியல் வளர்ச்சிக் கழகம் ஒரு நிலையத்தை ஏற்படுத்தியுள்ளது. கோ-ஆப்டெக்ஸ் அதில் ரூ. 10,00,000-க்குப் பங்குகள் எடுக்கும். இந்த நிலையம் செயல்படும்பொழுது நெசவாளர்களுக்குத் தேவைப்படும் சாய, இரசாயனப் பொருள்கள் நெசவாளர் சங்கங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் மூலம் விநியோகம் செய்வதற்குக் கிடைக்கும்.

விசைத்தறித் துணிகளோடும் ஆலைத் துணிகளோடும் போட்டியிடும் அளவுக்குக் கைத்தறித் துறைக்குத் தொழில் நுணுக்கமும் உற்பத்தித் திறனும் தேவைப்படுகின்றன. வேகமாக மாறி வரும் நாகரிகத்திற்கும் வாங்குபவர்களின் விருப்பத்திற்கும் ஏற்றவாறு புதிய வடிவமைப்புகளை கைத்தறி ஆடைகளின் உற்பத்திகளை அபிவிருத்தி செய்யப்படும் பகுதிகளில் புகுத்த வேண்டியது அவசியமாகிறது. நெசவாளர்களுக்குத் தொழில் நுணுக்க அறிவுரையும், உதவிகளும் செய்வதற்கு தகுந்த வசதிகள் தேவைப்படுகின்றன. இதற்காக கோ-ஆப்டெக்ஸ் வடிவமைப்பு சேவை நிலையங்களை முக்கியமான பகுதிகளில் அமைக்க முயற்சி எடுத்துள்ளது. கோ—ஆப்டெக்ஸ் ரூ. 3.50 இலட்சத்தில் மதுரையில் ஒரு வடிவமைப்பு சேவை நிலையத்தை அமைத்துள்ளது. தமிழக அரசின், ரூபாய் 3.50 இலட்சம் நிதி உதவியுடன் 1979-80-ஆம் ஆண்டில் திருச்சியில் மற்றுமொரு வடிவமைப்பு சேவை நிலையத்தை அமைத்துள்ளது. 1980-81-ஆம் ஆண்டில் ரூபாய் 7.00 இலட்சம் நிதி உதவியுடன் சேலத்திலும், கோயம்புத்தூரிலும் மேலும் இரண்டு நிலையங்கள் நிறுவப்படும். திருநெல்வேலி, கும்பகோணம் போன்ற மற்ற கைத்தறி நெசவாளர் பகுதிகளிலும் அம்மாதிரியான நிலையம் நிறுவப்படும்.

அக்டோபர் 76 முதல் தமிழகத்தில் ஜனதா வேட்டி, சேலை ரகங்களைக் கண்ட்ரோல் விலை திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யும் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) அதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் பிரதம கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கைத்தறியில் ஜனதா ரகங்களை உற்பத்தி செய்யும் பொறுப்பை மேற்கொண்டு, அவற்றை உள் மாநிலத்திலும், வெளி மாநிலங்களிலும் உள்ள விற்பனை நிலை

யங்களின் மூலம்விற்பனை செய்து வருகிறது.

கோ-ஆப்டெக்ஸ் அதன் பிரதம சங்கங்களின் மூலம் 1977-78-ஆம் ஆண்டு 104.60 இலட்சம் மீட்டர் ஜனதா ரகங்களையும், 1978-79-ஆம் ஆண்டு 143.88 இலட்சம் மீட்டர்களையும் உற்பத்தி செய்தது. 1979-80 ஆம் ஆண்டில் 112 இலட்சம் மீட்டர் ஜனதா ரகங்களை உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது. தற்போது சுமார் பத்தாயிரம் கைத்தறிகள் ஜனதா ரகங்களை உற்பத்தி செய்வதில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன. மூலப் பொருள்களின் விலையேற்றத்தாலும் கூலி உயர்வினாலும் கைத்தறியில் ஜனதா ரகங்களை உற்பத்தி செய்வது நீடித்திருப்பது கடினமாகும். 40 நெ. வரையுள்ள ரகங்களுக்கு 1 சதுர மீட்டருக்கு ரூ. 1.25 ஆச இருக்கும் மானியத் தொகையை ரூ. 1.50 ஆகவும், 40 நெ. மேற்பட்ட ரகங்களுக்கு 0.50 இலிருந்து ரூ. 1.00 ஆகவும் உயர்த்துமாறும் அல்லது எல்லா ஜனதா ரகங்களின் விலைகளையும் நஷ்டத்தை ஈடு செய்யும் அளவுக்கு உயர்த்துமாறும் இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளப்பட்டது. செயற்கைப் பட்டு ரகங்களும், மெல்லிய இழை ரகங்களும் பரவலாக தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதால் அவற்றையும் ஜனதா ரகங்களில் சேர்க்குமாறும் நாம் இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர்களின் அனுகூலத்திற்காகக் கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் இந்த ஆண்டிலிருந்து தொடர்ந்து நடைபெறும். இந்தத் திட்டத்தில் சேரும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின உறுப்பினர்கள் ரூ. 1-க்கு 3 காசு வீதம் தங்கள் பங்கினைச் செலுத்துகிறார்கள். உறுப்பினர்கள் செலுத்தும் பங்குகளுக்கும் அரசு செலுத்தும் பங்குகளுக்கும் சேர்த்து இந்தத் திட்டத்திலிருக்கும் நெசவாளர்களின் நிதி கணக்கிலுள்ள தொகைக்கு 7 சதவீதம் வட்டி அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக நெசவாளர்கள் குரூப் இன்ஸ்யூரன்சிலும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இதனால் அந்த நெசவாளரின் இறப்பு நேர்ந்தால் அவர் கணக்கில் சேர்ந்திருக்கும் தொகையைத் தவிர குறைந்த பட்சம் ரூ. 500ஐ ஆயுள் இன்சூரன்சு கார்ப்பரேஷன் அவருடைய சட்ட ரீதியான வாரிசுக்கு வழங்குகிறது. ரூ. 500-யிலிருந்து ரூ.3,000-க்கு இன்ஸ்யூரன்சு அளவை உயர்த்தும் உத்தேசம் ஆயுள் இன்ஸ்யூரன்சு கார்ப்பரேசனுடன் கலந்து செய்வது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. தற்போது 671 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 66,382 கைத்தறி நெசவாளர்கள் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர். 1980-81-ல் இத்திட்டத்தின் கீழ் மேலும் 20,000 நெசவாளர்களைக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## நெசவாளர் குடியிருப்புத் திட்டம்

1962-ஆம் ஆண்டிற்குப் பிறகு கைவிடப்பட்ட நெசவாளர் குடியிருப்புத் திட்டம் புதுப்பிக்கப் பட்டு 1979-80-ஆம் ஆண்டு முதல் புதிய முறையில் நெசவாளர் குடியிருப்புத் திட்டம் செயல் பட்டு வருகிறது. இந்த மாற்றியமைக்கப்பட்ட திட்டத்தின் கீழ் கூட்டுறவுக்குள் இருக்கும் கைத்தறி நெசவாளர்களின் நன்மைக்காக 1979-80-ஆம் ஆண்டு முதல் 1982-83-ஆம் ஆண்டு வரை 40,000 வீடுகள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளன.

ஒரு வீட்டின் மதிப்பு ரூபாய் 5,000 ஆகும். இதன் 20 சதம் ரூபாய் 1,000 தமிழக அரசால் மானியமாக அளிக்கப்படும். மீதி ரூபாய் 4,000-ஐ (விலையின் 80 சதவீதம்)புதுடெல்லி வீட்டுவசதி மற்றும் புறநகர் அபிவிருத்திக் கார்ப்பரேசனிடமிருந்து கடனாகப் பெறப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் மொத்த நிதியும் தலைமைக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் (கோ-ஆப்டெக்ஸ்) மூலமே பெறப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் உள்ள கடன் தொகை முழுவதும் மாதத் தவணை 20 ஆண்டுகளில் வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்படும். (கோ-ஆப்டெக்ஸுக்கு சர்வீஸ் சார்ஜாக ½ சதம் சேர்த்து 7 சதம்) 1979-80-ஆம் ஆண்டில் 350 வீடுகளைக் கட்டுவதற்காக தமிழக அரசால் 3.50 இலட்சம் மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது.



சமீபத்தில் அக்டோபர், நவம்பர் 79 மாதங்களில் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் குறிப்பாக இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, திருச்சி, கோயம்புத்தூர், தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். கைத்தறி நெசவாளர்களின் வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன். மற்றும் தறிகளில் உள்ள நூல்களும், தயார் செய்யப்பட்ட சரக்குகளும் சேதமடைந்ததால் நிதி இழப்பும் ஏற்பட்டது. கூட்டுறவுக்குள் இருக்கும் நெசவாளர்களும் தனியார் துறையினரும், மாஸ்டர் நெசவாளர்களிடம் வேலை செய்பவரும் பெருமளவில் நஷ்டமடைந்தனர். இந்த வெள்ளத்தினால் 6,728 தறிகளும், 2,400 வீடுகளும் சேதமடைந்தன என்று அதிகாரிகளால் மதிப்பிடப்பட்டிருக்கிறது. இவற்றிற்கு உடனடி நிவாரணம் தரும் பொருட்டு தமிழக அரசு ரூபாய் 6,00,000-க்கு மேற்படாமல் கடனாகவும் ரூ. 16,09,200-க்கு மேற்படாமல் மானியத் தொகையாகவும் வழங்கியுள்ளது. அவை கீழ்க் கண்டவாறு பாதிக்கப்பட்ட நெசவாளர்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டது:

1. ஒவ்வொரு சேதமடைந்த வீட்டிற்கும் ரூபாய் 250-க்கு மேற்படாமல் கடனாகவும் ரூபாய் 250-க்கு மேற்படாமல் மானியமாகவும் வழங்கப்பட்டது.

2. ஒவ்வொரு சேதமடைந்த தறிக்கும் ரூபாய் 150-க்கு மேற்படாமல் மானியம் வழங்கப்பட்டது.

நிலையாக மூலப் பொருள்களை வழங்குதல், கைத்தறி ஆடைகளுக்கு நல்ல விற்பனையைத் தேடுதல், தொழில் நுணுக்கங்களைப் பெருக்குதல், உற்பத்தியை அபிவிருத்தி செய்தல், போதுமான பதனிடும் வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியவை நமது மாநிலத்தில் நிறைவேற்றப்பட்ட பலதரப்பட்ட கைத்தறி வளர்ச்சித் திட்டங்களால் ஏற்பட்ட பயன்களாகும்.

நமது மாநில கைத்தறித் தொழில் நாட்டின் துணித் தேவையை முழு அளவில் தொடர்ந்து பூர்த்தி செய்வதோடு கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் வழிவகை செய்யும்.



# கண்ணில் மிளிரும் வண்ணத்துப் பூச்சி!

நா. சண்முகம், ஐ.ஏ.எஸ்.,
தனி அலுவலர் 'கோ-ஆப்-டெக்ஸ்'

"சிறகடிக்கும் வண்ணத்துப் பூச்சி சீர்மிகும் கைத்தறி யாடைகளுக்குச் சாட்சி'' இன்று இந்தக் குரல் கேட்காத இல்லம் இல்லை என்ற அளவில், எங்கும் தன் வண்ண வண்ணச் சிறகுகளை விரித்துப் பறக்கும் வண்ணத்துப்பூச்சி போன்று, கைத்தறியாடைகளின் புகழ்ப் பெயரான 'கோ-ஆப்டெக்ஸ்' என்ற சொல், எங்கும் ஒலிக்கிறது. அந்த அளவிற்கு மக்களின் எண்ணங்களில்நிறைந்துவிட்டன. 'கோ-ஆப்டெக்ஸ்' என்ற சொல்லும், 'வண்ணத்துப்பூச்சி, வடிவமும்.

ஆலைகள் அண்மையில் தோன்றிபவை. அசுர வேகத்தில் அவை துணிகளை உருவாக்கிக் குவித்தும்விடும். ஆனால், உயிர்த் துடிப்பும், கற்பனை நயமும் கலந்து உருவாகும் கைத்தறித் துணியில் காணும் அழகினையும், கலை வண்ணத்தையும் ஆலைத் துணிகளில் நிச்சயம் காண முடியாது. இது ஒன்றுதான் இத் தொழிலை நசித்துவிடாமல் இன்றும், என்றும் காத்து வரும் உயிர் மூச்சாகும்.

ஒரு கைத்தறியாடையின் உருவாக்கத்தின் பின்னே எத்தனை ஜீவன்களின் உயிர்த் துடிப்பான செயலாக்கம் உள்ளது. சின்னச் சின்ன இழை பின்னிப் பின்னி வரும் சித்திரக் கைத்தறியாடைக்குப் பின்னே பெரிய கைகள் மட்டுமின்றி சின்னச் சின்ன மழலைகளின் பூங்கரங்களும் உண்டு.

காலத்தின் எந்த வேகத்திற்கும், மாற்றத்திற்கும் கைத்தறி ஈடு கொடுக்கும் காரணம் இதுவாகவே இருக்க முடியும்.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிக அளவில் மக்களுக்கு வேலை வாய்ப்பினை அளிப்பது நெசவுத் தொழில்தான்.

கூட்டுறவுத் துறையில் ஈடுபட்டுள்ள நெசவாளர்கள் நல்வாழ்வுக்காகத் தோன்றிய நிறுவனம் கோ-ஆப்டெக்ஸ். 1935-ஆம் ஆண்டு சிறிய அளவு எண்ணிக்கை கொண்ட உறுப்பினர்களுடன் தனது பணியினைத் துவக்கிய கோ-ஆப்டெக்ஸ், இன்று 993 பிரதம சங்கங்களுக்குத் தாய்ச் சங்கமாக விளங்குகிறது. தமிழகத்தில் இயங்கும் தறிகளின் எண்ணிக்கை 5.6 இலட்சம் ஆகும். இதில் கூட்டுறவில் இயங்கும் தறிகள் 2.19 இலட்சம் ஆகும்.

கோ-ஆப்டெக்ஸில் இணைந்திருக்கும் 993 பிரதம சங்கங்களின் அடிநாதமாக இந்த 2.19 இலட்சம் தறிகள் இயங்கி வருகின்றன.

கூட்டுறவுத் துறையில் நெசவாளர்களின்எண்ணிக்கை வருடா வருடம் அதிகரிக்கிறது. அதன் பயனாக உற்பத்தியிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.





*1976-77-ல்* உற்பத்தி மதிப்பு ரூ. *3688* இலட்சம் ஆகும். *1978-79-ல்* உற்பத்தி மதிப்பு ரூபாய் *4485.50* இலட்சம் ஆகும். இதனை முறைப்படுத்தி வகைப் படுத்தி, கைத்தறியாடைகளின் விற்பனைக்குப் பெரும் பொறுப்பேற்று சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது. தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே பெரும்புகழ் பெற்ற நிறுவனமான கோ-ஆப்டெக்ஸ்.

மாறிவரும் சூழல், மாறி வரும் நாகரிகம், மாறி வரும் உடையமைப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மக்களின் தேவைகளை, அவர்தம் விருப்பங்களை அறிந்து அதற்கேற்ப ஆடைகளைத் தமிழகக் கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர்கள் தயாரித்தளிக்க தோன்றாத் துணையாக நிற்பது கோ-ஆப்டெக்ஸ்.

புதுப்புது ரகங்களில், மாதிரிகளில் கைத்தறித்துணிகள் உருவாக, நெசவாளர்களுக்கு உதவும் பொருட்டு, வடிவமைப்பு நிலையங்கள் மதுரை, சேலம், கோவை ஆகிய ஊர்களில் துவக்கப்பட்டு நெசவாளர்களுக்குப் புதிய புதிய மாதிரிகளில் டிசைன்களை வடிவமைத்துக் கொடுத்து வருகின்றன. இதன் விளைவாக, கைத்தறியில் பழைய ரகங்கள் மாறி, புதுப்புது ரகவகைகள் உற்பத்தியாக வழி வகுக்கப்பட்டுள்ளன. இதனால் கைத்தறித் துணிகள் தேவையான வடிவத்தில் எளிதான விலையில் விற்பனையாக ஏதுவாக உள்ளது. மேலும், விரைவில் திருச்சியிலும் ஒரு வடிவமைப்பு நிலையம் துவக்கப்படவிருக்கிறது.

நெசவாளர்களுக்கு உதவும் பொருட்டுசென்னையில் தொழில் நுணுக்கப் பிரிவு ஒன்றும் துவக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவின் மூலம் நெசவாளர்களுக்கு நல்ல தொழில்நுணுக்கஆலோசனைகள் புதுப்புது மாதிரிகளில் வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டு நெசவாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

நெசவாளர்கள் உருவாக்கும் கைத்தறியாடைகளின் கூடுதல் விற்பனைக்கு *77-78, 78-79*-ஆம் ஆண்டுகளில் புதிதாக *67* விற்பனை நிலையங்கள் தமிழகத்திலும், தமிழகத்திற்கு வெளியேயும் திறக்கப்பட்டுள்ளன. மேலும், திறக்கப்படும் விற்பனைநிலையங்களும், ஏற்கெனவே செயல்படும் விற்பனை நிலையங்களும் *77-78, 78-79* ஆண்டுகளில் *90* விற்பனை நிலையங்கள் நவீனமயமாக்கப் பட்டுள்ளன. நாடு முழுமையும் *390* கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலம் கைத்தறித் துணிகள் மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. *1977-78*-ஆம் ஆண்டில் ரூ.*23* கோடி அளவிலும், *1978-79*ஆம் ஆண்டில், ரூ. $34\frac{1}{4}$. கோடி அளவிலும் கைத்தறித் துணிகள் விற்பனையாகியுள்ளன. இது முந்தைய ஆண்டுகளின் விற்பனையை விட குறிப்பிடத்தக்க அளவு கூடுதல் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

ஏழை எளிய மக்கள் உடுத்தும் ஜனதா ரக ஆடைகள் *10* ஆயிரம் தறிகளில் *77-78*-ல் *126* இலட்சம் சதுர மீட்டர், *1978-79*-ல் *135* இலட்சம் சதுர மீட்டர் துணி உற்பத்தி செய்யப்பட்டு, மத்திய அரசு நிர்ணயித்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மேலும், கைத்தறியில் விசேட சிறப்புத் தயாரிப்பான கைத்தறி பாலியஸ்டர் சட்டைத் துணிக்கு நல்ல சந்தை இருப்பதால், இந்த



வகை பாலியஸ்டர் சட்டைத் துணிகளின் உற்பத்தி தொய்வில்லாமல் தொடர்ந்து உருவாக எல்லா ஏற்பாடுகளும் செய்யப் பட்டுள்ளன. இதனால் கைத்தறி நெசவாளியின் வருமானம் கணிசமான அளவுக்கு உயர்ந்திரு: பது எல்லாருக்கும் மகிழ்ச்சியளிக் கக்கூடியதாகும்.

மற்றும் கைத்தறி பாலியஸ்டர் சேலைகளும், சூட்டிங் துணி களும் உருவாவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டு, பரீட்சார்த்த நிலையில் இந்த வகைத் துணிகள் விற் பனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. கைத்தறியில் புதுமாதிரியாகப் பாலியஸ்டர் பட்டுத் துணி உற் பத்தியும் துவங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

புதுப்புது ரகங்கள் உருவாக, ரகமாற்றங்களை மேற்கொள்ள அதற்கென்று தறிகள் 77-78-ல் 290 தறிகளும், 78-79ல் 660 தறிகளும் ஒதுக்கப்பட்டு, அதன் விளைவாக 1977-78-ஆம் ஆண் டில் 171 புது மாதிரிகளும், 1978-79ல் 232 புது மாதிரிகளும் அறி முகப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் புதுமாதிரிகள் வரும் ஆண்டு களில் மேலும் அதிகரிக்கப்படும்.

கைத்தறி ஏற்றுமதியில் நல்ல கணிசமான முன்னேற்றம் கண் டுள்ளது ஊக்கம் தருவதாக உள் ளது. 1977-78-ல் ரூ. 156 இலட் சத்திற்கும், 1978-79-ல் ரூபாய் 243 இலட்சத்திற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. அண்மை யில் அமெரிக்காவிலிருந்து ரூபாய் 25 இலட்சம் மதிப்புள்ள 3 இலட்சம் மீட்டர் துணிகளுக்கான ஆர்டர்கள் கிடைத்துள்ளன என் பது மகிழ்ச்சியுடன் குறிப்பிடத் தக்கதாகும்.

கோ-ஆப்டெக்ஸ் மேற்கொண்ட திட்டமிட்ட பணிகளின் விளை வால் 1977-78-ல் ரூ.18 கோடிக்கு மேலும், 1978-79-ல் ரூ. 27 கோடிக்கு மேலும் கைத்தறித் துணிகள் கொள்முதல் செய்யப் பட்டன.

அதே போன்று விற்பனையும் கீழ்க்கண்டவாறு உயர்ந்துள்ளது:

| | | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1976—77 | ... | 1924 |
| 1977—78 | ... | 2300 |
| 1978—79 | ... | 3451 |

மேற்கண்ட புள்ளி விவரங்கள் மூலம் நாட்டு மக்கள் கைத்தறித் துணிகளின்பால் எவ்வளவு ஈடு பாடும், நம்பிக்கையும் கொண்டுள் ளார்கள் என்பதை அறியலாம்.

மக்களின் அந்த நம்பிக்கையே கோ-ஆப்டெக்ஸின் பெரும் மூல தனம.

''எந்நாட்டிலும் தென்னாட்டுக்
கைத்தறித் தொழில்—திசை
எட்டும் பரப்பியது தன்
பேரெழில்—நம்
தென்னாட்டுக் கைத்தறித்
தொழில் ஓங்க—ஓங்கச்
செல்வநிலை யுங் கலையும்
ழைத்தோங்கும்.''

—இது புரட்சிக் கவிஞரின் வாய்மொழியாகும். இதனை எண்ணத்திற் கொண்டு, கைத் தறியைப் போற்றுங்கள், கை வண்ணத்தைக் காத்திடுங்கள்.





# தமிழ் நாட்டில் கதர் கிராமத் தொழில்கள்

**டாக்டர் சத்ரசால்சிங் ஐ.ஏ.எஸ்.,**
**தலைமைச் செயல் அலுவலர்,**
**தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்**

கதர் கிராமத் தொழில் திட்டம் மூன்று அடிப்படை நோக்கங்களுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. முதலாவதாக, கிராமங்களில் வேலை வாய்ப்பற்ற நிலைமையை மாற்றி, போதிய வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தித் தருவது. இரண்டாவதாக, கிராமங்களிலுள்ள வேளாண்மைக் குடிமக்கள், தங்களது ஓய்வு நேரங்களைப் பயனுள்ள வகையில் நூல் நூற்பது போன்றவகைகளில் ஈடுபட்டு தங்களது குறைந்த வருவாயைக் கூட்டிக் கொள்ள வழி செய்வது. மூன்றாவதாக, கிராம மக்கள் தங்கள் தேவைக்கு வேண்டிய பொருட்களை, மற்றவர்களை நம்பியிராமல் தன்னிறைவு கொண்டவர்களாகத் தங்களையே ஆக்கிக் கொள்வதற்குத் தக்க உதவி செய்வது.

துவக்க காலத்தில் கைராட்டைகள் அதிக அளவில் புகுத்தப்பட்டன. கைராட்டை நூலின் தரத்தை உயர்த்தவும் நூற்போரின் வருவாயைப் பெருக்கவும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் விளைவாக நான்கு கதிர், ஆறு கதிர் அம்பர் இராட்டைகள் 1956ல் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும், நூற்போரின் உற்பத்தித் திறனை அதிகரித்து நூற்போரின் வருவாயை அதிகரிக்க முற்றிலும் உலோகத்தால் அமைக்கப்பட்ட ராட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதன் விளைவாக ஒரு நூற்பாளர் தற்போது நாளொன்றுக்கு மூன்று ரூபாயிலிருந்து நான்கு ரூபாய் வரை ஊதியம் பெறுகின்றனர். இத்தகைய இராட்டைகள் 328 இடங்களில் வைத்து கிராமிய நூற்புக் கூடங்கள் மூலம் கதர் கிராமத்தொழில் வாரியத்தின் நேரடிப் பார்வையின் கீழ் இயங்கி வருகின்றன.

இந்நிலையம் ஒன்று நிறுவிட முப்பதினாயிரம் ரூபாய் தேவைப்படுகிறது. இவை ஒவ்வொன்றி



லும் முப்பத்திரண்டு நபர்களுக்குப் பெரும்பாலும் பெண்களுக்கு நிலையான பணி கிடைக்கின்றது. இந்தக் குறைந்த மூலதனத்தில் இத்தகையோருக்கு வேறு எந்தத் தொழிலும் வேலை வாய்ப்பு அளிக்க இயலாது. திக்கற்ற பெண்களுக்கும் விதவைகளுக்கும் மறுவாழ்வு அளிக்க இம்மாதிரி ராட்டைகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாரியத்தின் கீழ் 26756 நூற்பாளர்கள் உள்ளனர். இவர்கள் கடந்த ஆண்டில் 227.08 இலட்சம் சிட்டை நூலை உற்பத்தி செய்து ரூ. 47.37 இலட்சம் ரூபாய் ஊதியமாகப் பெற்றனர். இவ்வாண்டில் மேலும், பல கிராமிய நூற்புக் கூடங்கள் புதியதாகத் துவக்க திட்டமிடப்பட்டுள்ளது.

1978-79ஆம் ஆண்டு 6283 நெசவாளர்கள் மூலம் 506.99 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள துணி உற்பத்தி செய்யப்பட்டது. நெசவாளர்கள் ரூ. 113.96 இலட்சம் ஊதியமாகப் பெற்றனர். நூல் உற்பத்திக்கு ஏற்றவாறு துணி உற்பத்தி செய்வதற்கும், நெசவாளர்களின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கும் கிராமப்புறங்களில் படித்து வேலை வாய்ப்பு



கிராமிய நூற்புக் கூடம்

அற்ற இளைஞர்களை நெசவுத் தொழிலை எளிதில் ஏற்று நடத்தவும் வசதியாக உள்ள நேபாள மாதிரித் தறிகளை தமிழ்நாட்டில் புகுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

நூற்பு மற்றும் நெசவு அனைத்தும் மின் விசையின் மூலம் இயங்கும் கிராமிய நெசவியல் நிலையங்கள் ஐந்தினைத் துவக்க வாரியம் திட்டமிட்டது. இதில் நான்கு நிலையங்கள் தற்போது இயங்கி வருகின்றது. ஒரு நிலையம் நிறுவ சுமார் ரூ. 7. இலட்சம் தேவைப் படுகிறது. இந்நிலையம் ஒன்றில் 68 நபர்கள் வேலை வாய்ப்பு பெறுகின்றனர். ஒரு நபருக்கு மூன்றரை ரூபாயிலிருந்து ஐந்து ரூபாய் வரை தினமொன்றுக்கு ஊதியம் கிடைக்கிறது. இந்நிலையம் ஒன்று மாதம் ஒன்றுக்கு ஒரு ஷிப்டிற்கு 6000 மீட்டர் துணி உற்பத்தி செய்யும் திறன் கொண்டவையாகும்.

வாரியத்தின் கீழ் சென்னை குறளகத்திலுள்ள பேரங்காடி உட்பட 155 கதர் அங்காடிகள் இயங்கி வருகின்றன. இவைகள் மூலம் கதர் கிராமக் கைவினைப் பொருட்கள் விற்பனை செய்யப் படுகின்றன. 1978-79-ல் ரூ. 613.88 இலட்சம் மதிப்புள்ள கதர் துணி விற்பனையாகிறது.

கிராம ஏழ்மை நிலையைப் போக்கவும், உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருள்களை ஆட்களையும் கொண்டு கிராமிய நுகர்வோரது தேவைக்கேற்றபொருட்களை உற்பத்தி செய்ய ஏதுவாக பல கிராமத் தொழில்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பின்வரும் கிராமத்தொழில்களை கதர் கிராமத் தொழில் வாரியம் ஏற்று நடத்தி வருகிறது.

பனை வெல்லம் கைக் குத்தல் அரிசி (தானியங்களையும் பருப்பு வகைகளையும் பதப்படுத்துதல் உட்பட), நாட்டுச் செக்கு மற்றும் விசைச் செக்கு எண்ணெய், நாட்டுத்தோல், மட்பாண்டங்கள், செங்கல்கள், முதலியன, சுண்ணாம்பு, தேனீ வளர்த்தல், தச்சு க்ருமார்த் தொழில், பழங்கள் பதப்படுத்துதலும் பாதுகாத்தலும், கையால் செய்யப்பட்ட காகிதம், வெல்லம், கந்தசாரி சர்க்கரை, சமையலுக்கு உதவாத எண்ணெய், சோப்பு, நார்த் தொழில், பிரம்பு, மூங்கில் இவற்றைத் தவிர பின் வரும் தொழில்களைக் கிராமத் தொழில்களெனத் தமிழ்க அரசு வகைப்படுத்தியுள்ளது: அகர் பத்தி, சிகைக் காய்த் தூள், பற்பொடி, நீலகிரித் தைலம்.

கிராமத் தொழில்களை வாரிய அலகுகள் மூலமும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் செயல்படுத்தப்படுகின்றன. கிராமத்


தமிழரசு
அடுத்த இதழ் முதல்

வாசகப் பெருமக்கள், 'தமிழரசு' ஏடு பற்றிய தங்களது எண்ணங்களை எழுதியனுப்பலாம். அவை இடம் பெறத் துவக்கப் படும் புதிய பகுதி:

பார்த்தோம் படித்தோம்!

தொழில்களில் பனைத் தொழில் மிகவும் ஓங்கி வளர்ந்துள்ளது. தமிழகத்தில் ஏறத்தாழ நான்கு கோடி பனை மரங்கள் உள்ளன. அவற்றில் 2½ கோடி பனைமரங்கள் பயன்தரக்கூடியவை. இவற்றிலிருந்து பதநீர், பனஞ்சீனி, பனந்தும்பு, பனை ஓலைப் பொருட்கள் என பலவகைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றில் பனந்தும்பு, பிரசுகள் முதலியவை பெருமளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அதன் மூலம் கணிசமான அந்நியச் செலாவணி பெறப்படுகின்றது.

பனஞ்சீனியிலிருந்து தயாரிக்கும் பாம்கோலா குளிர்பானம் அதற்கென தனி இடத்தை ஏற்கெனவே ஏற்படுத்திக் கொண்டது. இவ்வகைப் பானம் தயாரிக்க தமிழகத்தில் நான்கு அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இன்னமும் இரண்டு அலகுகள் தமிழகத்திலும், டெல்லியில் ஒன்றும் துவங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் கருப்பட்டிப் பாகு அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்தது மற்றுமோர் புதிய சாதனையாகும்.

நாட்டுச் செக்கு எண்ணெய்த் தொழில் மேம்பாட்டிற்கென நிதியுதவி அளிக்கப்பட்டு வந்தது. அண்மையில் மின்விசை பொருத்தப்பட்ட செக்குகள் அறிமுகப்படுத்தப்பட்டது, இத்தொழிலை நம்பியிருப்போருக்குப் புத்துணர்ச்சியூட்டியுள்ளது. இதனால் உற்பத்தி திறன் கூடுகிறது. மாடுகளை இனி நம்பியிருக்க வேண்டியதில்லை. படித்து வேலையில்லாத இளைஞர்கள் இத்தொழிலை விரும்பி மேற்கொள்கின்றனர். இவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நபர் ஒன்றுக்கு ரூ. 1500-மான்யமாக வழங்க ஆணையிட்டுள்ளது.

மட்பாண்டத் தொழிலில் மின்விசையுடன் இயங்கும் ''சீலா சக்கரங்கள்'' புகுத்தப்பட்டதன் விளைவாக இதனை நம்பியிருப்பவர்களுக்குக் கூடுதலான வருவாய் கிடைக்கும்.

விவசாயப் பெருங்குடியினருக்கு ஓய்வு நேரங்களில் தேனீ வளர்ப்பதன் மூலம் ஓரளவு வருவாய் பெருக்க பல்லாயிரக் கணக்கான தேன் கூடுகளைக் குறைந்த விலையில் விநியோகிக்கப்பட்டன. கிராமத் தொழில்களில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கான கைவினைஞர்களுக்குத் தச்சு, கொல்லர், தோல் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள், பனைமரத் தொழில்

தொழிலாளர்களுக்கு, நிதி உதவிகளை வாரியம் வழங்கியுள்ளது. இவ்வாறு வாரியம் ஏடுத்துவரும் சிறப்பு முயற்சிகளின் மூலம், கிராமத் தொழில்கள் பெரிதும் வளர்ந்துள்ளன என்பதனைப் பின்வரும் புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.





| | கிராமத் தொழில் அலகுகள்(கூட்டுறவுச் சங்கங்கள்) | உற்பத்தி | விற்பனை | ஈடுபட்டுள்ளவர் எண்ணிக்கை | ஊதியம் பெற்றவர் (தொகை |
|---|---|---|---|---|---|
| | | (விவரங்கள் ரூ. இலட்சத்தில்) | | | (ரூ. இலட்சத்தில்) |
| 1960-61 | 1853 | 277.81 | 304.74 | 1.99 | 128.13 |
| 1978-79 | 3288 | 2462.79 | 2594.05 | 3.22 | 876.49 |



**நெசவாளி 'ஜக்கார்டு' தறியில் நெய்யும் காட்சி**

கதர் உள்ளிட்ட கிராமத் தொழில்கள் மூலம் ஏறத்தாழ மூன்றரை இலட்சம் கிராம மக்கள் இன்று தமிழகத்தில் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கின்றனர். இத்தொழில்கள் மூலம் பல இலட்சம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இயந்திர முன்னேற்றத்தினாலும், நகர்ப்புற நாகரிகத்தினாலும் கவரப்பட்டு கிராம மக்கள் மெல்ல மெல்ல நகரங்கட்கு குடியேறுவதைத் தடுத்து, அவர்கட்குக் கிராமங்களிலேயே வேலை வாய்ப்பு உண்டு, வாழ்வு உண்டு, வளமும் உண்டு என்று கதர் கிராமத் தொழில்களை ஊக்குவிப்பதன் மூலம் எடுத்துக் காட்டி கிராமியப் பொருளாதாரத்தைச் சீர்குலையாமல் காத்து வளர்த்து வரும் பெரும் பொறுப்பைத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஏற்று நடத்தி வருகின்றது.

# சோழவரம் ஒன்றியத்தின் மேலான வளர்ச்சி

சென்னையிலிருந்து நெல்லூர் செல்லுகிற தேசிய நெடுஞ்சாலையில் உள்ளது சோழவரம் ஊராட்சி ஒன்றியம்.

இந்த ஒன்றியத்தின் மக்கட்தொகை சற்றேறக்குறைய 70,936 ஆகும். மொத்தப் பரப்பளவு 184.32 சதுர கிலோ மீட்டர்.

39 ஊராட்சிகளும், ஒரு பேரூராட்சியும் அடங்கியுள்ள சோழவரம் ஒன்றியத்தில்—77 ரெவின்யு கிராமங்கள், 58 உட்கிடைக் கிராமங்கள், 63 அரிசனக் குடியிருப்புகள் ஆகியவைகள் இருக்கின்றன.

2.10.1961ல் அமைக்கப்பட்ட இந்த ஒன்றியத்தில் – குடிநீர், மின்விளக்கு,சாலைவசதி,போன்ற அதிமுக்கியப் பணிகள் செம்மையுற நிறைவேற்றப்பட்டு வருகின்றன. வேறு பல வளர்ச்சித் திட்டங்களும் இந்த நிதியாண்டிலே (1979-80) சிறப்பாக உருப்பெற்று வருகின்றன.

சோழவரம் என்றாலே உடனே நமக்கு 'கார் ரேஸ்.' நடப்பது தான் நினைவு வரும்.

ஆனால், இந்த ஒன்றியமானது அதற்கு மட்டும் பிரசித்தி பெற்றது அல்ல; சோழவளநாடு,சோறுடைத்து' என்று சோழநாட்டைப் புகழ்வது, இந்தப் பல்லவ நாட்டுச் சோழவரத்துக்கும் பொருந்தும் என்பதுபோல,. நீர்வளமும், நில வளமும் பொருந்தி இயற்கைச் செழுமை கொஞ்ச பசுமையாகக் காட்சியளிக்கிறது இந்தப் பகுதி.

இந்த ஒன்றியப் பகுதி அந்தக் காலத்தில் சோழர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது என்று கூறினர் சிலர். அது மெய்யோ பொய்யோ— சோழவளநாட்டுக் கிராமங்கள் சிலவற்றின் பெயரைப் பெற்றிருக்கின்றன இந்த ஒன்றியக் கிராமங்கள் சில!

அதனால்தானோ என்னவோ- இந்த ஒன்றியத்தின் பெயர் ''சோழவரம் அல்ல; சோழபுரம் தான் என்றும் சொல்கிறார்கள்.

தஞ்சை மாவட்டம் குடந்தைக் கருகில் ஒரு 'சோழபுரம்' இருப்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

இப்பகுதி மண்வளம்—நெல், வாழை, தென்னை, நிலக்கடலை விளைச்சலுக்கு மிக ஏற்றதாக இருக்கின்றது. காய்கறிகள் எங்கு பார்த்தாலும் புது மெருகோடு காய்த்துக் குலுங்குகின்றன. அரசின் தீவிர சாகுபடித் திட்டத்தினைப் பின்பற்றி, இந்த ஒன்றியக் கிராமங்கள் அனைத்துமே பசுமைப்புரட்சி செய்து வருவது பிரமிக்கத் தக்கதாக இருக்கிறது.

கோழி, வாத்து போன்றவற்றில் மட்டுமின்றி - மாடு, ஆடு போன்ற கால்நடைப் பராமரிப்பிலும் இந்த ஒன்றிய மக்கள் கொண்டிருக்கிற ஈடுபாடு மகத்தானதாகும்.

**பெருவிவசாயி குறை**

ஸ்ரீராமுலு என்கிற பெருவிவசாயி ஒருவரிடம் வேளாண்மை வளர்ச்சி பற்றிக் கேட்டபோது கூறியதாவது:

''4-14 என்கிற ஆந்திரா நெல் ரகம் இந்த மண்ணில் நன்றாகப் பிடிக்கிறது. அரசு புதிதுபுதிதாகக் கண்டு பிடித்து அறிவிக்கும் பூசா கத்திரி (உருண்டையான உடம்போடு நீளமாக இருப்பது),நிலக்கடலை, கொடி ஏறிப் படராமல் செடியிலேயே கொத்துக் கொத்தாய்க் காய்க்கிற அவரை, ஈரோட்டு வாழை, கே.1 குண்டூர் மிளகாய், சர்க்கரை வள்ளிக் கிழங்கு புதுரகம், 7 மாதத்தில் பயன் தரும் மொந்தவாழை, டி.டி 2-தென்னை ரகம் போன்ற எல்லாவகைப் பயிர்ச் செலவும் செய்து வருகிறேன்.

''சோழவரம் ஏரி இங்கே இருந்தும், அதன் நீர் சென்னைக்குக் குடிநீராகக் கொண்டு போகப்பட்டு விடுவதால் ஆழ்குழாய்க் கிணற்று நீரை நம்பியே விவசாயம் பண்ண வேண்டியயிருக்கிறது. அதிலும் மின்தட்டுப்பாடு வேறு தற்சமயம் கொஞ்சம் எங்களைச் சிரமப்படுத்துகிறது. தண்ணீர்த் தட்டுப்பாடு மட்டும்







இல்லாதிருந்தால் தஞ்சை விவ சாயிகளுக்கு மேல் எங்களால் கண்டு முதல் காட்டமுடியும்!''

**கால்நடை வளர்ச்சி**

சோழவரம் ஒன்றிய மையத்தில் ஒரு கால்நடை மருத்துவ மனையும் 10 கால்நடைத் துணை கேந்திரங்களும் செயல்பட்டுவருகின்றன.

இவற்றின் மூலம் நாள்தோறும் 250 , 300 கால்நடைகள் வரை நோய்த்தடுப்பு செய்யப்படுகிறது. மருந்தளிப்பு, சிகிச்சை, பராமரிப்பு முறை ஆகியவை அளிக்கப்படுகின்றன.

**கல்விப் பணி**

இந்த ஒன்றியத்தில் 52 தொடக்கப்பள்ளிகளும், 8 உயர் தொடக்கப்பள்ளிகளும், 3 நிதியுதவிப் பெறும் தொடக்கப்பள்ளிகளும், 3 அரிசன நலத்துறை தொடக்கப்பள்ளிகளும் இருக்கின்றன.

கட்டாயக் கல்வித் திட்டம் இந்த ஒன்றியத்தில் செயல்படுத்தப்பட்டு மொத்தம் 11,665 மாணவ மாணவிகள் கல்வி கற்று வருகிறார்கள்.

3,516 பேருக்குச் சோழவரம் மத்திய சமையல் கூடத்திலிருந்து மதிய உணவு தயாரித்து வழங்கப்பட்டு வருகிறது.

இங்கு சமூகக் கல்வி நிலையங்கள் மட்டுமே 39 இருக்கின்றன.

**மகளிர் நலம்**

சோழவரம் ஒன்றியத்தில் உள்ள மகளிர் நலம் பெரிதும் பேணிக் காக்கப்பட்டு வருகிறது.

ஒன்றியத்தைச் சேர்ந்த 30 மகளிர் மன்றங்களும் சிறப்புறச் செயல்பட்டு வருகின்றன. மன்ற உறுப்பினர்களின் குழந்தைகள் கண்காட்சி, மகளிர் சுற்றுலா, மன்றங்களுக்குப் புத்தகங்கள் எல்லாவற்றுக்கும் ஒன்றிய அலுவலகம் நிதியுதவி வருகிறது.

**வேலைகரு உணவு**

வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் இந்த ஒன்றியத்தில் 114 வேலைகள் தேர்வு செய்யப்பட்டன. அவற்றில் நான்கே நான்கு பணிகள்தான் மீதமிருக்கின்றன.

இவ்வகையில் செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க பணி பெரவல்லூர் ஆண்டர்ர் குப்பம் சாலை அமைக்கப்பெற்றதாகும். இந்தச் சாலை அமைப்பில் ஏராள இன்னல்கள் சோதனைகள் இருந்து அதை வெற்றிகரமாக முடித்ததாகச் சொல்கிறார்கள் அக்கிராம வாசிகள்.

**ஊட்டச் சத்துணவு**

ஊட்டச் சத்துமிக்க உணவு வகைகளை வீட்டுத் தோட்டத்திலேயே பயிரிடவும், குழந்தைகள் அவற்றைப் பெற்று நோயற்ற நல்வாழ்வு வாழவும் உதவுவது ஊட்டச் சத்துணவுத் திட்டமாகும்.

சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 30 குழந்தைகள் காப்பகப் பிள்ளைகளுக்கும் இந்த ஊட்டச் சத்துணவு ரீதியில் உணவு வழங்கப்பட்டு வருகிறது. இக் காப்பகங்களில் காய்கறிகள் மட்டுமின்றி வாரம் இரண்டு முறை முட்டையும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 16 பள்ளிகளில் ஊட்டச் சத்துணவு, காய்கறிகள், கனிவகைகள் உற்பத்தி செய்யப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இப்படி எல்லாவகையிலும் ஏற்றம் பெற்று, சிறப்புற்று விளங்குகிறது சோழவரம் ஊராட்சி ஒன்றியம்!

—பி.எல்.ஆர்.



# முதுமை ஒரு சுமை அல்ல!

—பெ. நா. அப்புஸ்வாமி

**வ**யது சற்றே அதிகமான நிலையை 'முதுமை' என்று கூறி மதித்தும், 'மூப்பு' என்று கூறி இகழ்ந்தும், வரக்காண்கிறோம். ஷேக்ஸ்பியர் பாடியதாக வழங்கும் ஒரு பாடலில் மூப்பும் இளமையும் ஒன்றோடொன்று ஒப்பிடப்படுகின்றன. இளமை பலவாறாகப் புகழப்படுகிறது. மூப்பு பலவாறாக ஏசப்படுகிறது. 'கடுகடுப்பே உருவாகிய மூப்பும், இனிமையே, உருவாகிய இளமையும் ஒன்றாக வாழ முடியாது', என்றும் 'இளமையே, உன்னுடைய நலங்கள் பல, உன்னைப் பாராட்டுகிறேன், முதுமையே! உன்னுடைய குறைபாடுகள் பல. உன்னை வெறுக்கிறேன்', என்றும், அந்தப் பாடல் அமைந்திருக்கிறது. இது உணர்ச்சி வசப்பட்டுப் பாடிய பாடல். இந்தப் பாட்டில் கூறப்பட்டிருப்பது உண்மைதானா?

தாவர இயலைச் சற்றே பார்ப்போம். வாழைப்பூ சற்றே கசப்பாக இருக்கிறது. சற்றே முதிர்ந்துள்ள வாழைக்காய் துவர்ப்பாக இருக்கிறது, நன்றாக முதிர்ந்த கனிந்த, வாழைப்பழம் இனிப்பாக, சுவை உள்ளதாக இருக்கிறது. மாமரத்தின் பூ நற்சுவை உடையதன்று. அதை யாரும் நாடுவதில்லை. மாங்காய் புளிக்கிறது, மாம்பழம் நறுமணம் வீசுகிறது, இனிப்பாக இருக்கிறது. இளைய தேக்கு, பனைமரம் முதலியவற்றின தண்டினால் பயன் இல்லை. முதிர்ந்த மரங்கள் வீடு கட்டி வாழப் பயன்படுகின்றன. இளைய சந்தன மரத்தால் பயன் இல்லை. முதிர்ந்த சந்தன மரமே நறுமணம் வீசுகிறது. விலங்கினங்களில் வேறுவகையான நிலை போல் காண்கிறது.

மனித இனத்தில், வயதானால், அழகு குறைகிறது. திறமைகள் குன்றுகின்றன. கண்ணின்பார்வை மழுங்குகிறது, காது நன்றாகக் கேட்பதில்லை, தலைமயிர், நரைக்கிறது, தலையில் வழுக்கை விழுகிறது. பற்கள் உதிர்கின்றன. உச்சந்தலை முதல் உள்ளங்கால்கள் வரை தோலில் சுருக்கங்கள் விழுகின்றன. கால்கள் தள்ளாடுகின்றன. பேச்சு குழகுழக்கிறது. ஆனால் என்ன? எல்லாவற்றுக்கும் மறுபுறம் இருப்பதைப் போல், இவற்றுக்கெல்லாம் மறுபுறங்கள் உள்ளன அல்லவா?

அனுபவம் முதிர்கிறது. புத்தி கூர்மையாகிறது. சிந்தனைத் திறன் மிகுகிறது. வாழ்க்கைச் சூழலில் அதிகம் அகப்பட்டுக் கொள்ளாமல், ஒதுங்கியிருப்பதால், பற்பல விஷயங்களையும், ஆற அமரச் சீர்தூக்கிப் பார்க்க முடிகிறது. முன்னைவிட அதிகமாகப் படிக்க நேரமும், ஆர்வமும் இருக்கிறது. படித்ததைப் புரிந்து கொள்ளும் திறனம மிகுகிறது. பயன்படுத்த, அதிக நேரமும் வாய்ப்புக்களும் கிடைக்கின்றன. இளமை என்பது வாழ்க்கையினகாலை. முதுமை அதன் மாலை. ஒன்று கிழக்கு, மற்றது மேற்கு. 'காலை வேளையில் கிழக்குச் சாளரங்களின் வழியே நல்லொளி வருகிறது என்று மட்டும் எண்ண வேண்டாம். அதோ மேற்கே பாருங்கள், நிலம்அனைத்தும் சோதி மயமாக விளங்குகிறதே!' என்று ஓர் ஆங்கிலம் கவி பாடுகிறார். முதுமையிலும் ஒளி உண்டு, மகிழ்ச்சி உண்டு. இவ்விரண்டும் தூய்மை மிக்கவை. முதுமை என்பது வாழ்க்கையின் முடிவு அன்று, பேரின்ப அமரத்துவ வாழ்க்கையின் குழந்தைப் பருவமே அது!

ராபெர்ட் ப்ரௌனிங் என்னும் ஆங்கில மகாகவி அனைத்திலும் நன்மையையே காண முயலும் இன்மனச் செவ்வியர். முதுமையின் நன்மை நலங்களில் தாம் ஈடுபட்டு, அவற்றை நாமும் அனுபவிக்குமாறு நம்மை அழைக்கிறார்.

'நாம் அனைவரும் ஒன்றாகவே வளர்ந்து, முதுமையை அடைந்திடுவோம். இனிவர இருக்கும்

காலமே யாவற்றுக்கும் மேலான சிறப்புடைய காலம். வாழ்க்கையின் இறுதிக் காலமே பெருமகிழ்ச்சி அளிக்கவல்ல காலம். அதை நாம் அடைவதற்கான முதலாவது படியாகவே இளமை என்னும் படி அமைக்கப்பட்டுள்ளது என்று பாடுகிறார்.

நம் நாடும் முதுமையையும், முதியோரையும் மிக நெடுங்காலமாகப் பாராட்டி வந்துள்ள நாடு. அறிவும், அன்பும், அமைதியும், நிரம்பி பலருக்கும் மகிழ்ச்சி அளிக்கும் காலமாகவே முதுமை பாராட்டப்பட்டது. சங்க காலத்தில், பாண்டிய நாட்டில், பிசிராந்தையார் என்னும் கவி ஒருவர் இருந்தார். அவர் வயது பல ஆகியும், இளமைத் தோற்றம் மாறாதவராகக் காணப்பட்டார். அவருடைய தலையில் ஒரு மயிர் கூட நரைக்கவில்லை. ஏனெனில் அவர் மனம் மகிழ வாழ்ந்தார். அவ்வாறு தாம் வாழ்ந்ததற்குக் காரணங்கள் என்ன என்று அவரே கூறுகிறார்.

அவருடைய சிறந்த மனைவியும், மக்களும் நன்றாகக் கற்றும், கேட்டும், அறிவைப் பெற்றவர்கள். அவருடைய வேலைக்காரர்கள் அவர் எவ்வாறு எண்ணுகிறாரோ அந்தப்படியே அவருடைய காரியங்களைச் செய்து வருகிறார்கள். அந்த நாட்டு அரசன் தவறான செயல்களையோ, பயன் இல்லாச் செயல்களையோ செய்வதில்லை. தன் நாட்டு மக்களை நன்றாகப் பாதுகாக்கிறான். இவற்றுக்கு எல்லாம் மேலாக, அவர் வாழ்ந்து வந்த ஊரில், நற்குணங்கள் நிரம்பியோரும், தன்னடக்கம், பணிவு முதலியவற்றை உடையோரும், ஐந்து நண்பர்களோடும் அவர் பேசிப்பழகி, உறவாடி வந்தார். இத்தகைய சூழ்நிலையும், அந்தச் சூழ்நிலையால் ஏற்பட்ட நற்பழக்கங்களும், அவருக்கு முதுமைக் காலத்திலும், முதுமையால் எத்தகைய குறைபாடும் நேராமல், அவர் மனம் மகிழ வாழ்ந்திருக்க உதவின.

இவ்வாறான வாழ்க்கையை நாமும் நடத்தி வந்தால், நாமும் இனிதாக மன அமைதியோடு வாழலாம். நம்மாலும், பிசிராந்தையாரைப் போல, மனமகிழ வாழ முடியும். இந்தத் தத்துவம் அறிவியல் துறையில், உளவியல் துறையைச் சார்ந்தது. 'வாழ்க்கை என்பது எண்ணங்களால் அமைந்தது. ஆகவே, இளமையும் நானும் கைநெகிழா நண்பர்கள் என்று ஒருவன் எண்ணி வருவானானால் அவன் மாறாத இளமையோடு, மனம் மகிழ வாழ்வான் என்பது உறுதி' என்பது ஓர் ஆங்கில முதுமொழி.

ஆயினும், உடலின் செயல்கள் முதலியவற்றின் மீது மனம் எவ்வளவு ஆட்சி செலுத்தி வந்தாலுமே, உடலின் செயல்கள், உடலில் நிகழும் விளைவுகள் ஆகியவற்றின்மீது உடலியல் செயல்களும் தங்களுடைய ஆட்சியைச் செலுத்தி வருகின்றன என்பதை மறவாமல், அத்துணையிலும் உரிய செயல்களைச் செய்து வர வேண்டும். இதுவும் முக்கியம். நாள்தோறும், முறையாக, மிதமான உடற்பயிற்சி செய்து, மிதமாக நல்லுறவைக் கலகலப்பாக உறவினரோடு உண்டு, ஒருவருக்கும் தீங்கைச் செய்யாமல், தீங்கு எண்ணாமல், யாவர் மீதும் அன்பு பூண்டு, கற்றும், கற்றதைத் தக்கோருக்குக் கற்பித்தும் வாழ முயலுவோமேயானால், முதுமையிலும் மனமகிழ்ந்தும், மனங்களை மகிழ்வித்தும் வாழமுடியும். முயன்று பாருங்களேன்!

(நன்றி : திருச்சி வானொலி)

## பணிபுரியும் பெண்களுக்கான விடுதி கட்ட அரசு நிதி உதவி!





நாட்டில் ஏற்பட்டு வரும் பொருளாதார மாறுபாட்டுச் சூழ்நிலைகள் காரணமாக, மேலும் பெண்கள் தங்கள் சொந்தச் சூழ்நிலையிலிருந்து விடுபட்டு, வெளிநகரங்களுக்கு வேலை தேடி வருகிறார்கள்.

நல்ல சுற்றுப்புறச் சூழ்நிலையும், சுகாதாரம், பாதுகாப்பு நிறைந்த இடங்கள்-இருப்பிடங்கள் பெண்களுக்கு நகரங்களில் அமையாதது பெருங்குறையாகும். அக்குறைபாடுகளை நீக்கி பெண்களுக்கென்று தங்கும் விடுதிகள் அமைக்கத் தனியார் நிறுவனங்கள் இந்திய அரசை நிதி உதவிக்காக அணுகுகின்றன.

இந்திய அரசு, பெண்களுக்குத் தங்கும் இடவசதி பற்றிய குறைபாடுகளை நீக்க, தனியார் நிறுவனங்களுக்கு, பெண்கள் தங்கும் இடவசதி உண்டாக்கவும், ஏற்கெனவே இருக்கும் கட்டடங்களை விரிவுபடுத்தவும், அல்லது புதிய கட்டடங்களைக் கட்டிக் கொள்ளவும் நிதி உதவி அளிக்கும் திட்டம் அமல்படுத்த முன் வந்திருக்கிறது.

இதற்கான தனியார் நிறுவனங்களுக்கு மத்திய அரசு கட்டடம் கட்டுவதற்கான மதிப்பீட்டில் 75 சதவீகிதத்தை மான்யம் அளிக்கிறது. மேற்படி விடுதிகள், தங்கும் பெண்களின் மாத வருமானம் ரூ. 800க்கு மேல் இருத்தல் கூடாது.

மானியம் அளிப்பதற்குத் தனியார் நிறுவனங்கள், இந்தியன் சொசைட்டி பதிவு விதிப்படி (1860) பதிவு செய்து இருக்கவேண்டும். தனியார் நிறுவனங்களின் வேலைகள் மாநில அரசுக்கு ஒத்துக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். மேலும், மானியம் பெறுவதற்கு ஐந்தாண்டுக் காலத்துக்கு முன்பிருந்தே, பெண்களின் நலத்திற்கான வேலைகளில் நிறுவனம் பங்கு கொண்டிருக்க வேண்டும்.

கட்டடம் கட்டுவதில பல வசதிகளைச் செய்து தர முன் வரவும், முன் அனுபவம் இருத்தல் வேண்டும். அதிகமான இலாபத்தை எதிர்பார்க்கக் கூடாது. கட்டடம் கட்டுவதற்காக முன் கூட்டியே நகராட்சிக் கார்ப்பரேஷனிடமிருந்து அனுமதிபெற்று இருத்தல் வேண்டும். எந்த நகரத்தில் கட்டடம் கட்ட வேண்டுமோ, அந்த இடத்தில் கணிசமான அளவு பணிபுரியும் பெண்கள் இருக்க வேண்டும். மத்திய அரசின் உதவிக்குக் கூடுதலாக இத்திட்டத்திற்காக தமிழக அரசும் மதிப்பீட்டில் 15 சதவிகிதம் அல்லது ரூ 35,000 இதில் எது குறைவோ அத்தொகையைத் தனியார் நிறுவனங்கட்கு மானியமாக அளிக்கிறது.

இந்த நிதி உதவிக்கான விண்ணப்பத்தை, சமூகநல இயக்குநர் மூலம் அரசுக்கு அனுப்புதல் வேண்டும். இத்திட்டம் குறித்த மேல் விவரங்களுக்கு, சமூகநல இயக்குநர், சென்னை-600035 என்ற முகவரியில் தொடர் கொள்ளுதல் வேண்டும்.

# நீலப்பச்சைப் பாசி

என். வி. கிருஷ்ணமூர்த்தி,
மாவட்ட வேளாண்மை அலுவலர்,
(தகவல்)
சென்னை

நீலப்பச்சைப் பாசி என்பது நெல் வயல்களிலும், குளங்களிலும் மற்றும் குட்டைகளிலும் சாதாரணமாக இயற்கையிலேயே காணப்படும் பலவகை நுண்ணுயிர் நீர் தாவரங்களில் மிக முக்கியமானது.

நீலப்பச்சைப் பாசிகள் சூரியனின் சக்தியால் காற்றில் இருக்கும் தழைச்சத்தைக் கிரகித்து நெற்பயிருக்கு அளிக்கக் கூடியதாகும்.

நெற்பயிருக்குத் தழைச்சத்து மிகமிக அவசியம். மேற்படி சத்து கிடைக்க நெல் வயல்களுக்கு இரசாயன உரங்கள் இடுகிறோம். எனினும், இயற்கையாலேயே நெல் வயல்களில் இருக்கக்கூடிய நுண்நீர் உயிரினத் தாவரங்களை வளரக்கூடிய சூழ்நிலையைச் செய்கையாக உருவாக்கி, அதன் மூலம் கிடைக்கும் தழைச்சத்தை நெற்பயிருக்குக்கிடைக்கச்செய்து, ''குறைந்த செலவில்'' மகசூலைப் பெருக்கும் புதிய முறை தற்பொழுது விவசாயத் துறையினரால் விவசாயிகளுக்குச் சிபாரிசு செய்யப்படுகிறது.

நீலப் பச்சைப்பாசி என்பது குறைந்த செலவில் தழைச்சத்து அளிக்கக்கூடியதாகும்.

நீலப்பச்சைப் பாசியை ஒரு ஏக்கருக்கு 4 கிலோ வீதம் நட்ட 10 முதல் 15 நாட்களுக்குள் நடவு வயலில் இடுவதன் மூலம் சுமார் 10 கிலோ தழைச்சத்து நெல் வயலில் சேர்க்கப்படுகிறது.

**நீலப்பச்சைப் பாசி தயாரிப்பது எப்படி :**

நீலப்பச்சை பாசியை மூன்று முறைகளாகத் தயாரிக்கலாம்:

1. குழிமுறை
2. சிமெண்டு தொட்டி முறை
3. பெருமளவில் வயலில் தயாரிக்கும் முறை,

மேற்கண்டவற்றில் விவசாயிகளுக்கு ஏற்ற, சுலபமான, மலிவான முறையாகிய ''வயலில் தயாரிக்கும் முறையை''ப் பற்றித் தெரிந்து கொள்வோமா?

**பெருமளவில் நெல் வயலில் நீலப் பச்சைப் பாசி தயாரிக்கும் முறை:**

நல்ல சூரிய வெளிச்சம் கிடைக்கக்கூடிய வயல்களைக் கிணற்றின் அருகாமையிலேயே இதற்காகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

வயலில் நன்றாக நீர்விட்டு, உழுது நன்கு தயாரித்து சமப்படுத்தி, ஒவ்வொரு சென்டு பாத்திகளாக அமைக்க வேண்டும். இந்தப் பாத்திகளைச் சுற்றி சுமார் 15 செ.மீ. உயரமுள்ள வரப்பை அமைத்து அதை நன்றாகச் சேற்றினால் மெழுகி, வயலில் தண்ணீர் வெளியே கசிந்து வராமல் செய்யவும்.

2.5 செ.மீ. அளவு தண்ணீர் எப்போதும் வயலில் தேங்கச் செய்ய வேண்டும். இப்பாத்தியால் 50 கிராம் காப்பர் ஆக்ஸிகுளோரைடு போட்டு 12 மணி நேரம் விட வேண்டும். பச்சைப் பாசியில் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி, நீலப்பச்சைப் பாசியை மட்டும் வளர்ப்பதற்காக காப்பர் ஆஸிகுளோரைடு போடப்படுகிறது.

ஒரு சென்ட் பாத்திக்கு சூப்பர் பாஸ்பேட் 2 கிலோ, சுண்ணாம்பு 100 கிராம், கார்போப்யூரான் 200 கிராம், சோடியம் மாலிபிடேம் 2 கிராம் ஆகியவைகளைப் போட்டு தண்ணீரை நன்கு கலக்கிவிட்டு, தண்ணீர் தெளிந்த பிறகு 5 கிலோ நீலப்பச்சைப் பாசியை இட வேண்டும்.

சூப்பர் பாஸ்பேட் இடுவதால், நீலப்பச்சைப் பாசியின் வளர்ச்சிக்குத் தேவையான மாவுச் சத்தை அளித்து அதன் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.

சுண்ணாம்பு வயலில் அமிலத் தன்மையை நடுநிலைக்குக் கொண்டு வருவதற்காக இடப்படுகிறது.

நீலப்பச்சைப் பாசியை உணவாகக் கொண்டு, பாசியின் வளர்ச்சியையும் மகசூலையும் பாதிக்கும், சில பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்காகக் கார்போபியூரான் இடப்படுகிறது.

சோடியம் மாலிபிடேம் இடுவதன் மூலம் நீலப்பச்சைப்பாசியில் இருக்கும் "நைட்ரானேஸ்'' என்ற என்சைம்ஸ் பெருக்கத்தை ஊக்குவித்து பாசியின் வளர்ச்சியையும், மகசூலையும் பெருக்குகிறது.

இந்தப் பாத்திகளிலிருந்து 21 நாட்களுக்குப்பிறகு நீலப்பச்சைப் பாசி முதல் அறுவடையும், பிறகு 15 நாட்களுக்கு ஒரு முறையும் மகசூல் எடுக்கலாம்.

பாசி வளர்ந்த பிறகு தண்ணீரை வடிகட்டி வெயிலில் காயவிட வேண்டும். வயலின் மேற்பரப்பில் படர்ந்து இருக்கும் பாசிகள் அடை அடையாகக் காய்ந்து பெயர்ந்து வரும். அவைகளைச் சேகரித்து பாலித்தீன் பைகளில் அல்லது சாக்குகளில் சேமித்து வைக்கலாம்.

ஒரு சென்டு பாத்தியில் இருந்து ஒவ்வொரு முறையும் சுமார் 15 முதல் 20 கிலோ வரை பாசி கிடைக்கும்.

முதல் அறுவடைக்குப் பிறகு ஒவ்வொரு தடவையும் 2 கிலோ சூப்பர் பாஸ்பேட்டை முன்பு போல் போட வேண்டும். 2.5 செ.மீ. அளவு தண்ணீர் பாத்திகளில் எப்போதும் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். மறுபடியும் நீலப்பச்சைப் பாசி போடத் தேவையில்லை.

லப்பச்சைப்பாசியின் முக்கிய வகைகள்:

1. இலோசிரா 2. அனாபினா 3. நாஸ்டாக் 4. டாலிபோதரிக்ஸ் 5. கேலோபாதரிக்ஸ் 6. டைட்டோ நிமோ. 7. பிளக்டோநிமோ 8. அபினேதிசியா 9. மைக்ரோசிஸ்டிஸ் 10. சிலின்ட்லோஸ் போரியம்.

**நீலப்பச்சைப் பாசியின் நன்மைகள்:**

1. காற்றில் உள்ள தழைச் சத்தைக் கிரகித்து நெல் பயிருக்குக் கொடுக்கிறது.
2. நீலப்பச்சைப்பாசி வளரும்போது சில வளர்ச்சிப் பொருட்கள் உயிர்ச்சத்துக்கள் வெளிவருவதை நெற்பயிர் எடுத்துக் கொண்டு நன்றாக வளருகிறது.
3. மண்வளத்தை அதிகரித்து கன்றுகளுக்கு ஒருங்கிணைந்த தன்மையைக் கொடுக்கிறது.
4. பாசி மக்கி, வயல்களில் வளத்தை அதிகரிக்கிறது.
5. சில குறிப்பிட்ட நீலப் பச்சைப்பாசிகள் வளர்வதன்மூலம், நிலத்தின் காரத் தன்மையை மாற்றுகிறது.
6. சில வயல்களில் அதிகமாக இருக்கும் இரும்பு, கந்தகம் போன்ற சத்துக்கள் தேங்கி இருப்பதை நீலப்பச்சைப் பாசிகள் மாற்றி நிலத்தை வளப்படுத்துகிறது.
7. பாசிகள் நெல் வயல்களில் வளர்வதன் மூலம், வாயு மாற்றம் அதிகரித்து நெற்பயிரின் வேர்கள் எளிதில் காற்றைக் கிரகிக்க ஏதுவாக இருக்கிறது.
8. நீலப்பச்சைப்பாசியை எளிமையாக எல்லா விவசாயிகளும் அவர்கள் வயலிலேயே பெருக்கி நெல் பயிருக்குப் போடலாம்.
9. தொடர்ந்து நீலப்பச்சைப் பாசியை நெல் வயல்களுக்கு மூன்று பருவங்களுக்கு இடுவதால், அதிக மகசூலையும், அதை அடுத்து வரும் பயிருக்கு ஆகும் இரசாயன உரச் செலவையும் குறைக்கலாம்.

# புரதச் சத்து மிகுந்த பாசிப் பயறு

பயறுவகைகளில் புரதச்சத்து அபரிமிதமாக உள்ளது. பயறு வகைகளை நம் நாட்டில் பயிர் செய்ய தற்பொழுது நல்ல வாய்ப்புள்ளது.

நமது நாட்டு சீதோஷ்ண நிலை ஆண்டு முழுவதும் பயறு வகைப் பயிர்களைப் பயிர் செய்ய ஏதுவாக உள்ளது. ஆராய்ச்சியின் பயனும், ஆண்டில் ஆறு பயிர் எடுக்கக்கூடிய பாசிப் பயறுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், தற்பொழுது உள்ள கீழ்க்கண்ட சில தடங்கல்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பாதகமாக உள்ளன.

1. பயறுவகைப் பயிர்கள் மிகவும் சத்துக்குறைவான நிலங்களிலேயே பயிர்செய்யப்பட்டு வருகிறது.
2. நீர் தட்டுப்பாடாக உள்ள நிலங்களிலேயே பெரும்பாலும் பயிர் செய்யப்பட்டு வருகிறது.
3. தேவைக்குக் குறைவான பயிர்களின எண்ணிக்கை பயிர் செய்யப்பட்டு வருகிறபடியால்—
4. பயிர்களுக்கு வரும் பூச்சி பூஞ்சாணங்களைத் தகுந்த நேரத்தில் கட்டுப்படுத்தாமல் இருத்தல்.
5. உரிய காலத்தில் தகுந்த உயர்விளைச்சல் தரக்கூடிய ரகங்களைப் பயிர் செய்யாமல் மகசூல் குறைவாகத் தரக்கூடிய அதிக வயதுடைய நாட்டு ரகங்களைப் பயிர் செய்வது.

தற்பொழுது தமிழ்நாட்டிற்கு கந்த அமோக விளைச்சல் தரக்கூடிய கே.எம்.1, கே.எம்.2., எஸ். 8 ஆகிய பாசிப்பயறுகள் உகந்தவையே. இந்த ரகங்கள் ஊடுபயிராகவும், தனிப்பயிராகவும் பயிர் செய்யலாம். சோளம், கம்பு ஆகிய பயிர்களில் ஊடுபயிராகப் பயிர் செய்ய புதியரகங்கள் கண்டுபிடிப்பு ஆராய்ச்சியில் இருந்து வருகிறது.

தற்பொழுது விவசாயிகள் மிக்க குறைந்த விதை அளவு உபயோகித்து வருகிறார்கள். ஆகையால் பயிர்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவு. அதே சமயம் இடைவெளியும் அதிகமாக உள்ளது. தனிப்பயிருக்கு 30X10 செ.மீ. இடைவெளியே உகந்ததாகும் நடுத்தர பருமன் உள்ள விதைகளுக்கு 20-25 கிலோ-எக்டருக்கும் பருமன் அதிகமாக உள்ள விதைகளுக்கு 25-30 கிலோ-எக்டர் தேவைப்படும். தேவையான அளவு பயிர்களின் எண்ணிக்கை மட்டுமே மகசூல் அதிகம் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

விதைத்த பின் 10-15 தினங்களில் பயிர்களைத் தகுந்த அளவு இடைவெளி விட்டு கலப்பித்தல் மிகவும் முக்கியமான வேலையாகும். மேலும், பயிர்கள் களையில் இருந்து காப்பாற்றுவதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

பயறுவகைப் பயிர்கள் காற்றில் உள்ள தழைச்சத்தை தானாகவே கிரகித்துச் சேமித்து வைக்கும் சக்தி இருந்ததாலும் தழை, மணிச்சத்து இடுவதால் அதிக மகசூல் கிடைக்க வாய்ப்பு உள்ளது. மேலும், விதைகளைவிதைப்பதற்கு முன்னாள் நுண்ணுயிர் கலந்து விதைப்பதே சாலச் சிறந்தது.

பாசிப்பயறுகளுக்குப் பரந்த ஆழமானவேர்ப்பாகங்கள்இருப்பதால் வரட்சியைத் தாங்கும் சக்தியுள்ளது. ஆயினும் இறவைப் பயிருக்குத் தண்ணீர் தட்டுப்பாடு சிற்சில பருவங்களில் ஏற்படாமல் கவனித்துக் கொள்ள வேண்டும். பூக்கும் பருவமும், காய்ப் பருவமும் தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் கவனித்துக் கொள்ள வேண்டும். ஆனால், தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

சிற்சில இடங்களில் தண்டு ஈயின் தாக்குதல் ஏற்படலாம். அதற்குத் தகுந்த பயிர் பாதுகாப்பு முறைகளை எடுத்துக் கட்டுப்படுத்தி விடலாம். நச்சுயிரி நோயான மஞ்சள் இலை நோயை தாக்குதல் பாசிப்பயிரில் பரவலாகத் தென்படுகிறது. இதற்கு நோய்த் தாக்காத ரகங்களைப் பயிர்செய்யலாம் இதைப் பரப்பும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவது மூலம் மேலும் பரவாமல் செய்யலாம்.

பாசிப்பயிரை அதிக இடைவெளியில் உள்ள மற்றும் ஆரம்பத்தில் மிகவும் மெதுவாக வளரக்கூடிய பயிர்களில் ஊடுபயிராகப் பயிர் செய்யலாம்.

குறைந்த செலவில் குறுகிய காலத்தில் அமோக விளைச்சல் பெற்றிட பாசிப்பயிரைப் பயிரிடுவோம்!

# இன்னிசை வளர்ந்து வரும் சென்னைப் பல்கலைக் கழகம்



**கா**லை 11 மணி இருக்கலாம். அண்ணா சதுக்கத்திற்கு எதிரே-பல்கலைக் கழகத்தையொட்டிக் காணப்படும் ஆதம்ஸ் தெருவில் சென்று கொண்டிருந்தேன்.

''வேலவரே உமைத்தேடி
ஒரு மடந்தை
விடியும் வரையும் காத்திருக்கும்
வகையென்ன?''

என்ற பைரவி ராகப் பாடல் காற்றோடு கலந்து வெளிவந்து என் காதுகளைத் தொட்டது. சற்று, முன்னோக்கி நடந்தேன்.

''ராமா நின் நம்மினே'' என்ற மோகன ராகப் பாடல் வரி, வீணை ஒலியில் கேட்டுக் கொண்டிருந்தது. மேலும் சில அடிகள் நகர்ந்தேன்.

''அருள் புரிவாய் கருணைக் கடலே' என்ற அம்சத்வனி ராகப் பாடலை, வயலின் வழங்கிக் கொண்டிருந்தது.

மனித நடமாட்டம் அதிகம் இல்லாத அந்தத் தெருவில் இசை முழக்கம் எப்படி உருவாயிற்று என்று வியந்தேன். சில வினாடிகளில் விவரம் புரிந்து விட்டது, சென்னைப் பல்கலைக் கழகத்தின் இசைத்துறையில் பயின்று வரும் எம்.ஏ., வகுப்பு மாணவியர் தான் இசை மழையைப் பொழிகிறார்கள் என்ற செய்தி.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1931ஆம் ஆண்டில் துவக்கம் செய்யப்பட்ட இசைத்துறை ஐம்பதாண்டை எட்டிக் கொண்டிருக்கிறது. இசையில் டிப்ளமா வகுப்புகளும் முதுகலை வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. புகழ் பெற்ற டைகர் வரதாச்சாரியார், சங்கீத கலாநிதி பொன்னையா பிள்ளை, பேராசிரியர் சாம்பமூர்த்தி, டாக்டர் விசுவநாதன், டாக்டர் ஐசக் அம்மையார் ஆகியோர் இந்தத் துறையின் தலைவர்களாகப் பணி புரிந்திருக்கிறார்கள். தற்போது துறைத் தலைவியாக இருப்பவர் டாக்டர் எஸ். சீதா ஆவார்.

இந்தியாவில் மைசூர், பெனாரஸ், டெல்லி, திருவனந்தபுரம், அண்ணாமலை நகர், சென்னை போன்ற 46 பல்கலைக் கழகங்களில் இசைத்துறை செயலாற்றி வருகிறது. அவற்றில் 16 பல்கலைக் கழகங்களில்தான் முதுகலை இசை வகுப்பு உள்ளது. மதுரைப் பல்கலைக் கழகத்தில் சென்ற ஆண்டு தான் (1979) துவக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்தியப் பல்கலைக் கழகத்தில் முதன் முதலாக இசைத்துறையைத் துவக்கம் செய்தது சென்னைப் பல்கலைக் கழகம் தான் என்பது சிறப்புக்குரிய செய்தி.

ஆண்டுதோறும் ஜூன் மாதத்தில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். டிப்ளமா வகுப்பும் முதுகலை வகுப்பும் நடத்தப்படுகின்றன. டிப்ளமா வகுப்புக்கு ஆண்டொன்றிற்கு 75 ரூபாய் பயிற்சிக் கட்டணம் ஆகும். பயிற்சிக் காலம் இரண்டு ஆண்டுகள்.

வாய்ப்பாட்டு - வீணை - வயலின் ஆகியவை இங்குக் கற்றுத் தரப்படுகின்றன. மூன்று பிரிவிலும் தனித்தனி டிப்ளமா வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இதில் சேர்வதற்கு, பள்ளி இறுதி வகுப்பு-அல்லது மேல்நிலைப் பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். டிப்ளமா வகுப்பு 1931ல் இருந்தே நடத்தப்பெற்று வருகிறது.

ஞாயிற்றுக் கிழமையும்-மாதத்தின் இரண்டாம் சனிக்கிழமையும் தவிர-எல்லா நாட்களிலும் பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மூன்று மொழிகளைச் சேர்ந்த 50 பாடல்கள் கற்றுத் தரப்படுகின்றன. படிப்பு வகுப்பு (Theory Class), செயல்முறை வகுப்பு ( Pratical Class ) என இரு வகுப்புகள் உள்ளன. தினந்தோறும் இரு வகுப்பிலும் மாணவர்கள் பங்கு பெறவேண்டும். இந்த இரண்டு பிரிவு, தேர்விலும் உண்டு. இங்கு ஆங்கிலம் பயிற்சி மொழியாக உள்ளது.

டிப்ளமா வகுப்பில் ஆடவரும் பெண்களும் பயின்று வருகிறார்

கள். என்றாலும் ஆடவர்கள், பெண்களைப் போல வகுப்புகளுக்குத் தொடர்ந்து வருவதில்லை. ஆடவர்களுக்கு இயல்பாகவே பல நேரங்களில் ஏற்படுகின்ற ஆர்வக் குறைவு ஒரு காரணம். பெண்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் ஆண்களுக்கு ஏற்படுகின்ற சங்கோஜம் மற்றொரு காரணம்.

1958ஆம் ஆண்டு முதல் 1970 ஆம் ஆண்டு வரை ஸ்டெல்லா மேரி கல்லூரியின் துணையுடன் அங்கேயே முதுகலை இசை வகுப்புகள் நடத்தப்பட்டு வந்தன. ஸ்டெல்லாமேரி கல்லூரியில் செய்முறைப் பயிற்சியும் பல்கலைக் கழகத்தில் பாட வகுப்பும் நடைபெற்று வந்தன. 1976ஆம் ஆண்டு முதல், சென்னைப் பல்கலைக் கழகத்திலேயே முழுக்க முழுக்க வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. காலை 10 மணிக்கே வகுப்பு தொடங்கிவிடுகிறது. இசைத் துறையில் இளங்கலை (பி.ஏ.,) பட்டம் பெற்றவர்கள் முதுகலை வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இதுவும் இரண்டாண்டுக் காலப் பயிற்சியாகும்; பயிற்சிக் கட்டணம் ஆண்டொன்றிற்கு 300 ரூபாய்.

சென்னை நகரைப் பொறுத்த அளவில் பெண்கள் பயிலும் ராணிமேரிக் கல்லூரியில் தான் இளங்கலை இசை வகுப்பு உள்ளது. ஆண்கள் கல்லூரி எதிலும் இசைவகுப்பு இல்லாததனால்- பல்கலைக் கழக முதுகலை வகுப்பில் ஆடவர் இடம் பெறுவது அரிதாக உள்ளது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்-மைசூர் பல்கலைக் கழகம் போன்றவற்றில் இளங்கலை தேர்வுபெற்ற ஆடவர்கள் தான் இங்கே வர முடிகிறது.

வெளிநாட்டவர்களும் அவ்வப்போது இந்தப் பல்கலைக் கழகத்தில் வந்து பயில்கின்றனர். அப்படிப் பயின்றவர்களில் புகழ் பெற்றவர் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஜான் ஹிக்கின்ஸ் பாகவதர் ஆவார். வெளிநாட்டவரும் பயில்வதற்காகத்தான் ஆங்கிலம் பயிற்சி மொழியாக்கப்பட்டுள்ளது.

முதுகலை மாணவர்கள் படிப்பு முறையில் 8 தாள்களும்-செயல் முறையில் 8 தாள்களும் எழுத வேண்டும்.

முதுகலை பயில்பவர்கள் தேர்வுக்கு இசைக்கச்சேரி செய்ய வேண்டும். வெளியூரிலிருந்து தேர்வாளர்கள் வருவர். பொது மக்களும் பார்வையாளர்களாக இடம் பெறுவார்கள். தேர்வாளர்களும் அமர்ந்திருப்பர். கச்சேரி நிகழ்ச்சியைக் கவனித்துக் கொண்டே மாணவர்களின் இசைத் திறமை- இசைப்புலமை- ஆகியவற்றிற்குரிய மதிப்பெண்களை கணித்துக் கொள்வார்கள். இது ஒருவகையில் சிறப்பான தேர்வு என்றுதான் குறிப்பிட வேண்டும். காரணம், பொது மக்களின் ரசனையும் தேர்வாளர்களுக்கு ஒரு தூண்டுகோலாக அமையும்.

இந்தச் செயல்முறைத் தேர்வுடன் ஒவ்வொரு மாணவரும் இசைத்துறை குறித்து (Desertation) என்று சொல்லப்படும் சிறப்பு ஆய்வுக் கட்டுரையையும் வழங்க வேண்டும்.

ஆராய்ச்சிப் பட்டப் படிப்பு என்று சொல்லப்படும் பிஎச்டி வகுப்பும் இங்கே உண்டு. தற்சமயம் மூவர் இங்கே முழு நேர ஆய்வு நடத்துகின்றனர்.



வீணை வகுப்பு

'ஹரிகதை' குறித்து ஒரு மாணவியும் - 'திருப்புகழில் வரும் சந்தங்களும் தாளங்களும்' என்பது குறித்து ஒரு மாணவியும், 'தென்னிந்திய-கர்நாடக - இந்துஸ்தானி ராகங்கள்' என்பது குறித்து ஒரு மாணவியும் ஆய்வு செய்து வருகின்றனர்.

இசையின் பெருமை குறித்தும் இசைக் கருவிகள் குறித்தும் புகழ் பெற்ற அறிஞர்களை அவ்வப்போது வரவழைத்து விரிவுரைகள் நடத்தப்படுகினறன. அவை மாணவர்களுக்கு மிகுந்த பயனளிக்கின்றன.

பல்கலைக் கழக மானியக்குழு உருவாக்கியுள்ள கலாச்சார விருதுத் திட்டத்தின் கீழ்- சென்ற ஆண்டு திருமுருக கிருபானந்த



வாரியார், வீணைவித்துவான் திரு எஸ். பாலச்சந்தர், திரு.சீர்காழி கோவிந்தராஜன் ஆகியோர் அவ்வப்போது இங்கு வந்து இசைத்துறை மாணவர்களுக்குத் தேவையான நிகழ்ச்சிகளை நடத்தி விளக்கவுரையாற்றியிருக்கிறார்கள். அனுபவம் நிறைந்த அவர்களின் விளக்க உரைகளிலிருந்து இசை நுணுக்கம் -இசையின் ஆற்றல் ஆகியவற்றை மாணவர்கள் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது.



துறைத் தலைவி
டாக்டர் எஸ்.சீதா.

சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள், ''பக்தி இசைப் பரம்பரை' என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்றினையும் படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக் கழக மானியக்குழுவின் உதவியுடன் 1979 அக்டோபர் திங்களில் அகில இந்திய அளவில் மூன்று நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. கடந்த 49 ஆண்டு வரலாற்றில் - இதுதான் முதன் முறையாக உருவாக்கப்பட்ட கருத்தரங்கம் ஆகும். டெல்லி, மைசூர், பம்பாய் ஆகிய மாநிலங்களிலிருந்தும் இசைப் பேரறிஞர்கள் வந்து, விரிவுரைகளும் - ஆய்வுக் கட்டுரைகளும் வழங்கினர். அவை அனைத்தையும் நூல்வடிவில் வெளியிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

'அருணகிரிநாதரின் திருப்புகழ் குறித்துக் கருத்தரங்கம் ஒன்று - நகர அளவில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. ஆய்வியல் மாணவர்களுக்கு இந்தக் கருத்தரங்கம் மிகவும் பயனுள்ளதாக இருப்பது உறுதி.

பல்கலைக் கழகத்தில் நடைபெறும் பொதுவிழாக்கள் எல்லாவற்றிலும் இசைத்துறை மாணவியர் பங்கு பெறுகிறார்கள். தமிழிசைச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் பண் ஆராய்ச்சி மாநாட்டிலும் இவர்கள் கலந்து கொள்கிறார்கள். 1978ல் நடைபெற்ற 'வள்ளி திருமணம்' என்னும் இசை நாடகத்தில் - பல்கலைக் கழக இசைத்துறை மாணவியர் கலந்து கொண்டு-சிறப்புப் பெற்றார்கள். வானொலி நிலையம் - தொலைக்காட்சி நிலையம் ஆகியவற்றின் இசை நிகழ்ச்சிகளிலும் அவ்வப்போது பங்கு பெறுகிறார்கள். 1976ஆம் ஆண்டு குடியரசுத் திருநாள் விழாவினை ஒட்டி மைசூரில் இசைநிகழ்ச்சி நடத்தியிருக்கிறார்கள்.

ஆண்டுதோறும் அக்டோபர் திங்களில் உலகநாடுகள் இசை வாரம் கொண்டாடப்பட வேண்டும் என்று யுனெஸ்கோவில் 1976 ஆம் ஆண்டில் தீர்மானம் செய்யப்பட்டதை ஏற்று- சென்னைப் பல்கலைக் கழகத்தின் இசைத் துறை அவ்விழாவை ஆண்டு தோறும் அக்டோபர் முதல் வாரத்தில் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது. புகழ்பெற்ற பாடகர்களின் இசை நிகழ்ச்சிகள் இவ் விழாவையொட்டி செனட் கூடத்தில் நடத்தப் பெறுகின்றன.

தியாகராஜர் ஆராதனையும் இந்தத் துறையில் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் நாள்முழுவதும் இசையை மழையெனப் பொழிகிறது இந்தத்துறை.

இசைத் துறையின் வளர்ச்சிக்குத் தக்க வகையில் தொண்டு புரியும் இந்தப் பல்கலைக் கழகத்தின் இசைத் துறையில் தாள லயம் கற்றுத் தரப்படவில்லை- ஆமாம்! இங்கே, வீணை கற்றுத் தரப்படுகிறது-வயலின் இசை கற்றுத் தரப்படுகிறது. ஆனால் மிருதங்கம் கற்றுத் தரப்படுவதில்லை. ராகத்திற்கு அடுத்தபடியாக -தாளம் முக்கியமானது. எனவே தாளவாத்தியப் பயிற்சியும் கற்றுத்தரப்படுதல் அவசியம். பல்கலைக் கழகத்தின் பரிபூரண ஆதரவு இந்தத் துறைக்கு இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இசை நூலகம் ஒன்றும் இங்குள்ளது. புகழ்பெற்ற இசைக்கலைஞர்களான எஸ்.ஜி. கிட்டப்பா, எம்.கே. தியாகராஜபாகவதர் ஆகியோரின் பாடல்கள் இடம்பெற்ற இசைத் தட்டுகள் 200 -பழைய இசைநாடக இசைத்தட்டுகள் 120—பல்வேறு இசைநிகழ்ச்சிகளின் பதிவு நாடாக்கள் 125—அமெரிக்க செய்தி நிலையத்திலிருந்து தவணை முறையிலும்அன்பளிப்பாகவும் பெறப்பட்டுள்ள ஆங்கில நாட்டுப்புறப் பாடல்கள் உள்ள இசைத்தட்டுகள்—238க்கும் மேலான புராதன இசைக் கருவிகள் ஆகியவை இந்த நூலகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. இசைத்துறையில் பயன்படும் வகையில் புதிது புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் இசைக்கருவிகளும் சேகரித்துவைக்கப்படுகின்றன.

இசைத் துறை குறித்து அரிய-முக்கியமான 1500 நூல்கள் இங்கே சேகரித்து வைக்கப்பெற்றுள்ளன. இசைக்கலை குறித்த சொற்களைத் (Musical Terms) தொகுத்து ஓர் அகராதி



வாய்ப்பாட்டு வகுப்பு



வயலின் வகுப்பு

வெளியிட எண்ணிவரும் இசைத் துறை, இதுவரை அ,ஆ,இ என்ற எழுத்துக்களில் உள்ள சொற்களைத் தொகுத்து வைத்திருக்கிறது. பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த முயற்சி எதிர்காலத்தில் இந்த இசைத் துறைக்கு மாபெரும்பெருமையை ஏற்படுத்துவது திண்ணம்.

இந்த இசைத்துறை• தென்னிந்திய இசையில் - குறிப்பாக 'தமிழிசையில் முற்போக்கு ஆராய்ச்சிக் கூடமாக' (Advance Centre for Music) மாற்றப்பட வேண்டும்.

இசை சம்பந்தமான ஓலைச் சுவடி சேகரிக்கப்பட வேண்டும். நல்லதொரு இசையரங்கு பல்கலைக் கழகத்திலேயே அமைக்கப்படல் வேண்டும். - இசைக் கருவிகளின் காட்சி அரங்கு ஒன்று உருவாக்கப்படல் வேண்டும் -இவை எல்லாம் துறைத் தலைவியின் குறிக்கோள்கள்.

''இசைக் கலை சுலபமான-எளிய முறையில் மாணவர்களுக்குச் சொல்லித் தரப்பட வேண்டும். சரிகமபதநிஸவைச் சொல்லி-ரிகரி ரிகரி, ஸரிக ஸரிக என்று சுரங்களை எல்லாம் அள்ளிவீசும் போது ஆர்வம் உள்ளவர்கள் கூட அச்சத்துக்கு ஆளாகிறார்கள். எனவே இசைத்துறையின் பயிற்சியினை - எளிய முறையில் அறிமுகம் செய்தால் பெரும்பான்மையோர் இசை கற்க முன் வருவார்கள்.

''மேல்நாட்டிலே இசையைப் பொழுதுபோக்காகக் கருதுகிறார்கள். நமது நாட்டில் அது பொழுதுபோக்கு மட்டுமல்ல-கருத்தம்சமும் அதில் உண்டு. பலர் நினைப்பது போல் (Extracurricular) அல்ல அது முழுக்க முழுக்க கல்விமுறையும் (Academic) ஆகும்.

''இசைக்கலையை எல்லாப் பள்ளிகளிலும் கட்டாயப் பாடமாக வைக்கவேண்டும். இசையின் உதவியால் கலை உணர்வு பெருகுகிறது-இறை உணர்வு தோன்றுகிறது''

—இவ்வாறு குறிப்பிடுகிறார் இந்தத் துறையின் தலைவி டாக்டர் எஸ்.சீதா.

மேல்நிலைப் பள்ளிகளில் இசைக் கலையும் பாடமாக இடம் பெறுவதால் எதிர்காலத்தில் இசை ஆசிரியர்கள் அதிகம் தேவைப்படுவார்கள். சென்னைப் பல்கலைக் கழகம் இசைத்துறையில் பயிற்சி பெற்ற சிறந்த மாணவர்களை உருவாக்குவதன் வாயிலாக சிறந்த ஆசிரியர்களை உருவாக்கி வருகிறது - மேல்நிலைப் பள்ளிகளின் தேவையைப் பூர்த்தி செய்யஉதவுகிறது.

**—தமிழ்ப்பித்தன்.**

## உள்ளாட்சி நிறுவனப் பகுதிகளில் தெரு விளக்குகள் பராமரிப்பு

உள்ளாட்சி நிறுவனப் பகுதிகளில் உள்ள தெரு விளக்குகள் தற்போது அங்கங்குள்ள உள்ளாட்சி நிறுவனங்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. உள்ளாட்சி நிறுவனங்களுக்குத் தேவையான பல்புகளையும், குழல் விளக்குகளையும் அந்தந்த நிறுவனங்களே வாங்கி இருப்பில் வைத்துக்கொள்கின்ற முறை தற்போது இருந்து வருகிறது.

திறன் இழந்த பல்புகளையும் குழல் விளக்குகளையும் மாற்றும் பொறுப்பு தமிழ்நாடு மின்வாரியத்தைச் சார்ந்ததாகும். உள்ளாட்சி நிறுவனங்கள், மின்வாரியம் இவற்றிற்கு இடையே பொறுப்புகள் பிரிவுபட்டதால் எரியாத தெரு விளக்குகள் பற்றிப் புகார்கள் வந்துள்ளன. இந்நிலைமையைச் சீரமைக்க, சென்னை மதுரை மாநகராட்சிகள், மற்றும் பொள்ளாச்சி, கோயம்புத்தூர், கரூர், தஞ்சாவூர் ஆகிய நகராட்சிப் பகுதிகள் நீங்கலாக மற்ற இடங்களுக்கான தெரு விளக்குகளைப் பராமரிக்கும் பொறுப்பை மின்வாரியத்திடம் மாற்றி ஒப்படைத்து விடுவது என தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது

மாற்றி அமைக்கப்பட்ட இம்முறைப்படி, தெரு விளக்கு சம்பந்தமான பல்புகள், சோக்குகள், ஸ்டார்ட்டர்கள் போன்ற உதிரி பாகங்களை மாற்றி அமைத்து விளக்கு எரியச் செய்யும் பணி மின்வாரியத்தைச் சாரும். ஒவ்வொரு மாதமும் செலவாகின்ற மின்சாரத்திற்கான கட்டணப் பட்டியலோடு இந்தச் செலவுத் தொகைகள் உள்ளாட்சி நிறுவனங்களின் கணக்கில் சேர்க்கப்படும்.

## வக்ஃபு வாரியப் பணியாளர்களுக்கு மருத்துவச் சலுகைகள்

தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் பரிந்துரைகளின் மேல், மாநில அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மருத்துவச் சலுகைகளைத் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் பணியாளர்களுக்கும் நீட்டிப்பதெனத் தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது. இச்சலுகைகள் 1.4.80லிருந்து அமலுக்கு வரும்.



# இறவை நிலக்கடலையில் இரட்டிப்பு மகசூல் பெற..

எண்ணெய் வித்துப் பயிர்களில் சிறப்பான இடத்தைப் பெற்றிருப்பது நிலக்கடலைப் பயிராகும். நிலக்கடலை விவசாயிகளுக்கு நல்ல வருமானம் தரக்கூடிய ஒரு பணப் பயிராகும்.

நிலக்கடலைச் சாகுபடியில் இந்தியா உலக நாடுகளில் முதலிடம் வகிக்கிறது. தமிழ்நாட்டில் மட்டும் கடலைப் பயிர் பரப்பு ஏறத்தாழ 27 இலட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டு 12.7 இலட்சம் டன் உற்பத்தி செய்யப்படுகிறது.

கடலைப் பயிர் சாகுபடி செய்யப்படும் மொத்த பரப்பில் 20-25 சதம் பாசன பயிராகப் பயிரிடப்படுகிறது. ஒரு ஏக்கரின் சராசரி மகசூல் சுமார் 455கிலோ. ஆனால், நிலக்கடலைப் பயிர் சாகுபடியாகும் நைஜீரியா, உகண்டா, அமெரிக்கா போன்ற நாடுகளில் சராசரி ஏக்கர் மகசூல் ஒரு டன்னுக்கும் அதிகமாகும். அதாவது, நமது தமிழ்நாட்டு மகசூலை விட இரட்டிப்பு மகசூலாகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் பயிரிட வாய்ப்புள்ள எல்லா நிலங்களையும் சாகுபடிக்குக் கொண்டு வந்து விட்டால் மேலும், பயிரிட பரப்பை விரிவுபடுத்த இனி வாய்ப்பில்லை. எனவே, விஞ்ஞான யுக்திகளைக் கடைப்பிடித்து ஏக்கர் உற்பத்தி திறனை அதிகப்படுத்தி கடலை உற்பத்தியைப் பெருக்க வேண்டிய நிர்பந்தத்தில் உள்ளோம்.

நம் நாட்டின் குறைந்த விளைச்சலுக்கான காரணங்களில் மிக முக்கியமானதாக நான்கைக் குறிப்பிடலாம்:

1. பொறுக்கு வித்துக்களைப் பயன்படுத்தாதது.
2. செய் நேர்த்தி முறைகளில் போதிய கவனம் செலுத்தாதது.
3. தேவையான அளவு உரமிடாதது
4. காலத்தில் பயிர்ப் பாதுகாப்பு மேற்கொள்ளாதது.

மேற்சொல்லிய காரணங்களை நன்கு உணர்ந்து கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகளைக் கடைப்பிடித்தால் நிலக்கடலையில் இரட்டிப்பு விளைச்சல் பெற்று கணிசமான அளவிற்கு இலாபம் பெறுவதோடு மட்டுமல்லாமல் பற்றாக்குறை என்பதை அறவே நீக்கிவிட முடியுமன்றோ?

நிலக்கடலைச் சாகுபடிக்கு இருமண் பாகுள்ள மணற்பாங்கான ஈரம் காக்க கூடிய நிலமே உகந்ததாகும். களிமண், கார அமில நிலம் ஏற்றதல்ல.

இறவையில் கொத்து ரகத்தை ஜனவரி மாதம் கடைசிக்குள் விதைத்துவிட வேண்டும்.

**உயர் ரகப் பொறுக்கு வித்துக்கள்:**

இறவையில் பயிரிடுவதற்கு ஏற்றது. குறுகிய காலக் கொத்து ரகங்களாகும். இந்த ரக வித்துக்களை ஜனவரி மாதம் இறுதிக்குள் விதைத்துவிட வேண்டும். திண்டிவனம் மற்றும் பொள்ளாச்சி நிலக்கடலை ஆராய்ச்சிப் பண்ணைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கொத்துரகங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நாட்டு ரகங்களைக் காட்டிலும் 15 முதல் 20 சதவீதம் வரை அதிக மகசூல் பெறலாம்

**திண்டிவனம்:7**

ரகம் இறவைக்கு ஏற்றது.105 நாள் வயது. பெரிய கனபரிமானம் கொண்ட கடலைப் பருப்புகள். திண்டிவனம் 2 ரகத்தை விட 23 சதவிகித அதிக விளைச்சல் கொண்டது. எல்லா மாவட்டங்களிலும் பயிரிடலாம்.

**திண்டிவனம்-9:**

105 நாள் வயது. இறவை பயிராகப் பயிரிட ஏற்றது. அதிக விளைச்சலையும், அதிக எண்ணெய் சதவிகிதத்தையும் கொண்டது.

பொள்ளாச்சி-2 ரகம் கோவை மாவட்டத்திற்கு ஏற்றது. இறவைக்கு மிகச் சிறந்தது. இறவையில் அதிக மகசூல் கொடுக்கும் பொள்ளாச்சி ரகத்தைவிட அதிக விளைச்சலும் எண்ணெய்ச் சத்தும், பருப்புச் சத்தும் கொண்டது.

பொறுக்கு ரக வித்துக்களைப் பயன்படுத்துவது மூலம் கூடுதல் விளைச்சல் பெறலாம்.

**செய் நேர்த்தி:**

நிலம் நன்றாகப் புழுதியாகும்படி உழுதல் வேண்டும். ஆழமாக உழுதல் கூடாது. சுமார் 6 அங்

குல ஆழத்திற்கு மண்ணைப் புழுதியாகும்படி செய்வது மிக அவசியம். இப்பணியில் அதிக காய்கள் பிடிக்க வழி வகுக்கும். நீர் பாய்ச்ச வசதியாக நிலத்தை மட்ட நிலையிலும் தக்க அளவில் பாத்திகள் அமைக்கப்பட வேண்டும். நன்றாகத் தேர்ந்த முற்றிய விதைப் பருப்பைப் பொறுக்கி விதைக்கு உபயோகிக்கவேண்டும்.

ஏக்கருக்கு 45—50 கிலோ விதைப் பருப்புத் தேவை. வரிசைக்கு வரிசை 30 செ.மீ. வரிசையில் 15 செ.மீ. இடைவெளி விட்டு 4 செ.மீ. ஆழத்திற்கு மேற் போகாமல் குழிக்கு ஒரு விதையாக ஊன்றப்பட வேண்டும். விதைத்து 8-10 நாட்களில் விதை சரியாக முளைக்காத பகுதிகளில் மறுபடியும் விதை ஊன்ற வேண்டும். ஒரு ஏக்கரில் உள்ள செடிகள்தான் மகசூலை நிர்ணயிக்கின்றன. 1 சதுர மீட்டரில் பரப்பில் குறைந்தது 22 செடிகள் இருத்தல் வேண்டும்.

அடுத்து, நிலக்கடலைப் பயிருடன் போட்டியிட்டு வளரும் களைகள் நிலக்கடலைப் பயிரின் வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும். எனவே, நிலக்கடலை விதைத்த 45 நாட்கள் வரை களைகளால்ஏற்படும் பாதிப்பைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகும். ஆரம்பத்தில் முளைத்திடும் களைகளைக் கட்டுப்படுத்த நிலக்கடலை விதைத்த 3-வது நாள் வயலில் தக்க ஈரப்பதம் உள்ள நிலையில் ஏக்கருக்கு 1.5 லிட்டர் லாசோ களைக்கொல்லி மருந்தை 200 லிட்டர் நீரில் கலந்து கைத் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். லாசோ களைக்கொல்லி இடாவிட்டால் விதைத்து 20-25 நாட்களுக்குள் முதல் களை, களைக்கொத்திக் கொண்டு எடுக்க வேண்டும்.

பின்னர் 40-45 நாட்களுக்குள் கைக்களை எடுத்து, கொத்தி விட்டு ஒவ்வொரு பயிரிலும் நன்றாக மண் அணைக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் செடியிலிருந்து கம்பிகள்இலகுவாக இறங்கி அதிக்க் காய்கள் பருமனுடன் பிடிக்க வழி வகுக்கும். விதைத்த 45 நாட்களுக்குப் பிறகு கொத்துவதைக் கண்டிப்பாகத் தவிர்க்கப் பட வேண்டும்.

விதைத்த உடன் நீர் பாய்ச்சவும். விதை நட்ட மூன்றாவது நாள் பாய்ச்சுதல் வேண்டும். பிறகு தேவைப்படும்போது அதாவது செடி வாடவிடாமல் நீர் அளிக்க வேண்டும். கம்பி இறங்க ஆரம்பிக்கும் வரையில் நீர்ப்பாசனத்தைக் கட்டுப்படுத்துவதால் செடிகளில் தழை மண்டி விடாமல் தடுப்பதுடன், அதிகப்பூ எடுத்து பெரும் அளவில் காய் பிடிக்க வழி ஏற்படுகிறது. கம்பி இறங்கும் பருவம் முதல் அறுவடை வரையில் மண்ணின் ஈரத் தன்மைக்கு ஏற்றவாறு 10 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும்.

**தேவையான அளவு உரமிடல்:**

நிலக்கடலையில் அதிக விளைச்சல் கிடைக்காததற்கு முக்கிய காரணம் தேவையான உரத்தைப் போதுமான அளவில் போடாதது ஆகும்.

மற்ற பயிர்களைப்போல நிலக்கடலைப் பயிருக்கும் தழைச் சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்துக்கள் தேவைதான். ஆனால், இம் மூன்று சத்துக்களில் அதிகம் தேவைப்படுவது சாம்பல் சத்தாகும்.

நிலக்கடலைப் பயிருக்கு மண் பரிசோதனை நிலையத்திலிருந்து பெறப்பட்ட உர சிபாரிசு இருந்தால் அதன்படி உரங்கள் இடப்பட வேண்டும். அப்படி உர சிபாரிசு இல்லை எனில், பொது சிபாரிசுப்படி இறவையின் பயிருக்கு ஏக்கருக்கு 10 வண்டி

# வட்டாரக் கால்நடைக் காட்சி தமிழ்நாட்டுக் கோழிக்குப் பரிசு!



மகாராஷ்டிராவில் நாசிக் என்னும் ஊரிலுள்ள பஞ்சவதி கால்நடைக் காப்பகத்தைச் சேர்ந்த ஒரு பசுவும், ஆந்திரப் பிரதேசம் பிரகாசம் மாவட்டத்திலுள்ள வரிபாலம் என்னும் ஊரைச் சேர்ந்த திரு. அன்னபோட்லா என்பவருக்குச் சொந்தமான ஒரு காளையும், தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. எம். வி. ராஜசேகரனுக்குச் சொந்தமான வெள்ளைக்கோழி ஆகியவற்றுக்குத் தென்பிராந்தியக் கால்நடை மற்றும் கோழிக் கண்காட்சியில் பரிசுகள் கிடைத்திருக்கிறது. இக்கண்காட்சி மார்ச் 10-ந் தேதியன்று ஹுப்ளியில் முடிவடைந்தது. வெற்றிப் பெற்ற காளையின் சொந்தக்காரருக்கு 1,700 ரூபாய் ரொக்கப்பரிசு கிடைத்திருக்கிறது.பசுவின் சொந்தக்காரருக்கு 1,650 ரூபாய் கிடைத்திருக்கிறது.

பம்பாயிலுள்ள ''கோ ரக்ஷக மண்டலி'' என்ற பசு காப்பகத்தைச் சேர்ந்த கலப்பினப் பசு அதிகபட்ச பால் கொடுக்கும் பசுவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்தப் பசு 24 மணிநேரத்தில் 26.33 கிலோகிராம் பாலை வழங்குகிறது. இந்தப் பசுவிற்கு 1,025 ரூபாய் ரொக்கப் பரிசும், ''தீப் நாராயண் சின்ஹா கேடயமும்'' வழங்கப்பட்டது.

கோழி வளர்ப்பில் தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. ராஜசேகரனின் வெள்ளை கார்னிஷ் கோழிக்கு 350 ரூபாய் ரொக்கப்பரிசுக் கிடைத்திருக்கிறது.

வட்டாரக் கால்நடை மற்றும் கோழி வளர்ப்புக் கண்காட்சி மார்ச் 5-ந்தேதியன்று துவக்கப்பட்டது. 9-ந்தேதி வரை பொது மக்களுக்குத் திறந்து வைக்கப்பட்டிருந்தது. தென் மாநிலங்களைச் சேர்ந்த கால்நடைகளும், கோழிகளும் இக்கண்காட்சியில் கலந்து கொண்டன.

தொழு உரம் அல்லது கம்போஸ்ட் உரம் கடைசி உழவிற்கு முன்போட வேண்டும்.

இரசாயன உரம் ஏக்கருக்கு 7 கிலோ தழைச்சத்து, 14 கிலோ மணிச்சத்து, 21 கிலோ சாம்பல் சத்து அடி உரமாக இடவேண்டும். இந்த அளவு சத்துக்கள் கிடைக்க ஏக்கருக்கு 35 கிலோ டை அமோனியம் பாஸ்பேட் உரமும், 35 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரமும் இட வேண்டும்.

கடலைப் பயிருக்கு நுண்மூலகங்கள் சிறிய அளவுதான் தேவையென்றாலும், பயிர் வளர்ச்சிக்கு மிக முக்கியமானது. வேளாண்மைத் துறையினரால் தயாரிக்கப்பட்ட கடலை நுண்ணூட்டச் சத்துக் கலவை 5 கிலோவை 15 கிலோ மணலுடன் விதைத்த உடன் தூவ வேண்டும். இந்நுண்ணூட்டச் சத்துக் கலவையை நிலத்தின் மேலாக இட வேண்டும் என்பதை மறக்கக் கூடாது. நுண்ணூட்டச்சத்துக்கலவைஇடுவதன் மூலமாக 8-10 சதம் கூடுதல் மகசூல் கிடைக்கின்றது. 1 கிலோ கடலை நுண்ணூட்டச் சத்து கலவையின் விலை ரூ. 3.




நாடு முழுவதும் 1979-80-ஆம் ஆண்டிற்கான சிறுசேமிப்பு வசூலில் இந்த ஆண்டுக்கான குறியளவைவிட 275 கோடி ரூபாய் அதிகமாக வசூலிக்கப்படும். இந்த நிதியாண்டில் சிறுசேமிப்பு வசூல் மூலம் 625 கோடி ரூபாய் வசூலிக்கப்பட வேண்டும் என்று மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், இந்த நிதியாண்டிற்குள் இந்த வசூல் 925 கோடி ரூபாயாக இருக்கும். மத்திய நிதியமைச்சர் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த 1980-81-ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டில் அடுத்த நிதியாண்டிற்கான சிறுசேமிப்பு வசூல் 1,000 கோடி ரூபாய் வரை செல்லும் என்று கூறியுள்ளார்.

இதற்கு அடுத்தபடியாக, நிலக்கடலைக்குச் சுண்ணாம்பு, கந்தகம் தேவைப்படுகிறது. சுண்ணாம்புச் சத்துக் குறைவான நிலங்களில் கிடைக்கும் விதைகளை உரித்தால் உள்ளே இருக்கு முளைக் குருத்து இருக்கும். இதனால், விதை முளைக்கும் தன்மையை இழந்துவிடும். அந்தக் குறை விதை வெளித் தோற்றத்தில் தெரிவதில்லை. சில சமயம் செடியில் அதிக வெம்பிய காய்களும், பிஞ்சுகளும் பருப்புகளை வளர்ச்சி பெறாமல் சுருங்கிய சவளைகள் அதிக அளவில் காணப்படும்.

காய்கள் நன்றாக வளர்ச்சி அடைந்து முற்றி பருப்புகள் பருமனாக உண்டாகச் சுண்ணாம்புச் சத்து மிகவும் அவசியம். இந்தச்சத்து மண்ணில் கம்பி இறங்கும் பகுதிகளில் தேவைப்படுகிறது. செடிக்குச் சுண்ணாம்புச் சத்து கம்பி இறங்கிக் காய்கள் முற்றி வளர்ச்சியுறும் காலத்தில் அதிகஅளவில் தேவைப்படுகிறது. மேலும், நிலக்கடலைக் கம்பியும் காயின் தோலும் வேர் போல் உணவுச் சத்துக்களைக் கிரகித்துக் கொள்ளும் சக்தி உள்ளவை. ஆகையால், சுண்ணாம்புச் சத்தை நிலக் கடலைக்கு 40-45 வது நாளில் இரண்டாவது களையெடுக்கும்போது இடுவது சாலச் சிறந்தது. கந்தகம் கடலை மகசூலை அதிகரிக்கும். கந்தகம் புரதச்சத்து தயாரிப்பதற்கு உதவுகிறது. 23 சதம் சுண்ணாம்புச் சத்தும், 18 சதம் கந்தகச் சத்து உள்ளதும் மலிவாகக் கிடைக்கக் கூடியதுமான ஜிப்சம் போடுவது மிக முக்கியம்.

எனவே, கடலை விதைத்த 40-45வது நாட்களில் ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சத்தை மேலுரமாக இட்டு மண்ணுடன் கலக்க வேண்டும்.

விதை மூலம் பரவும் வேர் அழுகல் நோய், துரு நோய் போன்ற தாக்குதலை தவிர்க்க விதைப்பதற்கு ஒருநாள் முன்னதாகவே ஒரு கிலோ விதைப் பருப்பிற்கு 2 கிராம் அக்ரசான், அல்லது 4 கிராம் கேப்டான் அல்லது 5கிராம் திராம் கலந்து விதைக்க வேண்டும்.

கடலைப் பயிர் விதைப்பிலிருந்து அறுவடை வரை பூச்சி நோய்களால் தாக்கப்பட்டு இதன் காரணமாக மகசூலில் பாதிப்பு ஏற்படலாம்.

சுருள்பூச்சி, அசுவணி, தத்துப்பூச்சி, இலைப்பேன், காய் துளைப்பான் போன்ற பூச்சிகளால் நிலக்கடலைப்பயிர்பல்வேறுவளர்ச்சிப் பருவங்களில் தாக்கப்படுகிறது.

இது தவிர 'டிக்கா' இலைப்புள்ளி நோய், துருநோய் போன்ற நோய்களால் இலைகளில் கருப்புப் புள்ளிகள் தோன்றி வளர்ச்சி பாதித்து மகசூல் குறையும்.

எனவே, பூச்சி நோய் ஏற்படா வண்ணம் தடுப்பு நடவடிக்கையாகப் பயிர்வளர்ச்சிக் காலத்தில் முதல் தடவையாக விதைத்த 30வது நாளிலும், இரண்டாவது 50-வது நாளிலும், முறைப்படி தெளிக்க வேண்டும்.

பூச்சிக் கொல்லி மருந்து ஒன்றுடன் ஒரு பூஞ்சாளக் கொல்லி மருந்தையும் விசைத் தெளிப்பானால் 60 லிட்டர் நீரிலும், கைத் தெளிப்பானுக்கு 200 லிட்டர் தண்ணீருடன், கலந்து மருந்து தெளிக்கப்பட வேண்டும்.

எனவே, பொறுக்கு விதைகளைத் தேர்ந்தெடுத்தும், சரியான இடைவெளிவிட்டு விதைத்தும் வேளாண்மைததுறை மூலம் விநியோகம் செய்யப்படும் கடலை நுண்ணூட்டச் சத்துக் கலவைவய்யிட்டு தக்க அளவில் உரம், ஜிப்சம் இட்டு தடுப்புமுறையாகக் காலத்தேமருந்துதெளித்து கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகளைத் தவறாது கடைப்பிடித்து விவசாயிகள் நிலக்கடலைப் பயிரில் இரட்டிப்பு மகசூல் பெறலாம்!

## கெலவரப்பள்ளி நீர்த்தேக்கம்

ஓசூர் வட்டத்தில் பொன்னி ஆற்றின் குறுக்கே கெலவரப்பள்ளி கிராமத்தில் ரூ. 606.65இலட்சம் செலவில் நீர்த்தேக்க திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. இந்த நீர்த் தேக்கத்தில் இடதுபுறம் 22.58 கி.மீ. வலதுபுறம் 30.5 கி.மீ. நீளமுள்ள இரண்டு கால்வாய்கள் வெட்டப்படுகின்றது. இதில் வலதுபுறக் கால்வாய் மூலம் 2,082 ஏக்கர் நிலமும், இடதுபுறக்கால்வாய் மூலம் 5918 ஏக்கர் நிலமும் பாசன வசதி பெறும். ஆற்றின் போக்கில் அமைந்துள்ள மதகு வழியாக, இந்நீர்த்தேக்கத்தின் கீழ் அமைந்துள்ள 12 அணைகள் மூலமாக 1083 ஏக்கர் நிலங்களுக்கு மேம்பாடு செய்ய இருக்கின்றது.

வலதுபுறக் கால்வாய் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு முதற்பகுதி 13.7 கி.மீ. வரை 1118 ஏக்கர் நிலத்திற்கும் இரண்டாம் பகுதிக்கு 13.75 கி.மீ. முதல் 22.58 கி.மீ. வரை 964 ஏக்கர் நிலத்திற்கும் நீர்ப்பாசன வசதி செய்து தரப்பட உள்ளது.

இடதுபுறக் கால்வாய் இரண்டு பகுதியாக்கப்பட்டு முதல்பகுதி 23.80 கி.மீ. வரை 2960 ஏக்கர் நிலத்திற்கும், 23.80 கி.மீட்டருக்குப் பிறகு உள்ள நீளத்திற்கு 2985 ஏக்கர் நிலத்திற்கும் பாசன வசதி செய்து தரப்படும்.

கால்வாய்கள் வெட்டுவதற்காக ரூ. 282.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ. 59.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.



## மத்திய அரசின் கல்வி உதவித்தொகை : தமிழக மாணவர்களே அதிகம் !

அங்கீகரிக்கப்பட்ட தங்கும்-விடுதி வசதி உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கான தகுதி மற்றும் அவர்கள் வசதி அடிப்படையிலான உதவித் தொகை வழங்கும் திட்டம் ஒன்றை இந்திய அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த உதவித்தொகை பெறும் மாணவர்களின் பெற்றோரது மாத வருமானம் ரூ.500-க்கு மேல் இருக்கக்கூடாது. மேல் நிலை வகுப்பு (Higher Secondary) வரைதான் இந்த உதவித்தொகை வழங்கப்படும். இத்தொகை பெறுவதற்கான மாணவர்களை இந்திய அரசு தேர்வு ஒன்றின் மூலம் தேர்ந்தெடுக்கும். இந்திய அரசு நடத்தும் இத்தேர்வுக்கு, 11 வயது முதல் 12 வயது வரையிலான மாணவர்களை மாநில அரசு முதனிலைத் தேர்வு மூலம் தேர்ந்தெடுத்து அனுப்பும்.

1979ஆம் ஆண்டு அக்டோபர் 9,10 நாட்களில் நடத்தப்பட்ட தேர்வுகளின் முடிவினை மத்திய அரசின் கல்வி அமைச்சகம் தற்போது அறிவித்துள்ளது.

அதற்கேற்ப 1979-80ஆம் ஆண்டுக்குத் தமிழ்நாட்டிலிருந்து 27 மாணவர்கள் இவ்வுதவித் தொகையைப் பெறுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அசாம், குஜராத், மத்திய பிரதேசம், ஒரிசா, பஞ்சாப், இராஜஸ்தான் போன்ற மாநிலங்களை ஒப்பிடும்போது, இம்முறை தமிழக மாணவர்கள் அதிகம் பேர் இந்த உதவித் தொகையைப் பெற்றுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் தேர்வு பெற்ற மாணவர்களைத் தகுந்த அங்கீகாரம் பெற்ற தங்கும் வசதியுள்ள மேல் நிலைப் பள்ளிகளுக்கு அனுப்ப இந்திய அரசின் கல்வி அமைச்சகம் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்த உதவித்தொகைக்குள் பள்ளிக் கட்டணம், படிப்புக் கட்டணம், தங்கும் விடுதி வசதிக்கான கட்டணம், புத்தகங்கள் மற்ற உபகரணங்களின் செலவுத் தொகை, கைச்செலவுத் தொகை, பள்ளிச் சீருடை உள்ளிட்ட மற்ற துணி வகைகளுக்கான செலவுத் தொகை அடங்குவதுடன் போக்குவரத்துச் செலவுத் தொகையையும் இந்திய அரசு அளிக்கும்.

புத்திக் கூர்மை உள்ள மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் இத்திட்டத்தில், தமிழக மாணவர்கள் இவ்வாண்டு அதிகமான அளவில் வெற்றிபெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியது.



# கிராமங்களுக்கு குடிநீர்

நமது நாட்டில் மொத்தம் 4,51,623 கிராமங்கள் உள்ளன. இதில் 1,52,475 கிராமங்கள் பற்றாக்குறைப் பகுதிகளாகவோ அல்லது பிரச்னைக்குரிய கிராமங்களாகவோ உள்ளன. ஆண்டின் பெரும்பகுதியில் இந்தக் கிராமங்கள் முக்கியமாக யாரும் சென்றடைய முடியாத பகுதிகளாக உள்ளன. இதில் சில கிராமங்கள், கிராமப்பகுதிகளில் குடிநீர் வசதிக்கான வாய்ப்புக்கள் எதுவும் இல்லாத கிராமங்களாக உள்ளன.

கிராமப்புற குடிநீர் வினியோகத் திட்டங்களுக்கான செயல் முறைகள் நகர்ப்புற குடிநீர் வினியோகத்திட்டங்களுக்கான செயல் முறைகளிலிருந்து வேறுபட்டவையாக இருக்கவேண்டும் என்று திட்டம் வகுப்பவர்கள் சரியான முறையில் பரிந்துரை செய்து இருக்கிறார்கள். கிராமப்புறத் திட்டங்களின்பலவித தன்மைக்குச் சிறப்பான செயல் முறைகள் தேவைப்படுகின்றன.

## திட்டங்கள் வெற்றிபெற

குடிநீர் வினியோகத் திட்டங்கள் வெற்றிபெற வேண்டுமானால், அத்திட்டங்கள், சுகாதாரக் கல்வியுடன், திட்டமிடுதல், நிர்மாணம், செயல்படுத்துதல் பராமரிப்பு ஆகிய நிலைகளில் மக்களின் ஈடுபாட்டுடன் துவக்கப்படவேண்டும். சம்பந்தப்பட்ட திட்டங்களின் பலன்களை பற்றியும்,உயர்ந்த அம்சங்களைப் பற்றியும் மக்களுக்குக் கூறாமல் நவீனமயமான சில திட்டங்களை மக்களின்மீது திணித்ததற்கான சான்றுகள் பல உள்ளன.

## குடிநீர் அசுத்தக் கேட்டின் தீமை

தொழில் மயம் பெருகுவதன் காரணமாகக் குடிநீர் அசுத்தக் கேடு ஏற்படும் பிரச்னையும் உள்ளது. இது ஒரு சுகாதாரக் கேடாகவும் அமைந்துள்ளது. இது குடிநீர் வினியோகத் திட்டத்தின் அவசியத்தை மேலும் கூடுதலாக்கியுள்ளது. இது மட்டுமின்றி இரசாயனப் பொருட்கள் நீரில் கலந்திருப்பது தொழில்நுட்பத் தீர்வுகளைக் காணவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அசுத்தக் கேடான குடிநீர், தண்ணீர் சம்பந்தப்பட்ட நோய்களுக்கும், குடிநீரால் ஏற்படும் நோய்களுக்கும் முக்கியக் காரணமாக இருக்கிறது. காலரா நோய் பரவும் வேகம் பல மாநிலங்களில் தடுக்கப்படக்கூடியதாக இருப்பினும்கூட, குடிநீர் அசுத்தக்கேடு பயங்கரமான முறையில், மிக அதிகமாக இருக்கும் மாநிலங்களான பீகார்,மத்தியப்பிரதேசம், மேற்கு வங்காளம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் குறிப்பாக மிகமிக அதிகமாக இருக்கிறது.

கினியா புழு எனப்படும் தொற்று நோய்க்கிருமியினால் பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களின் எண்ணிக்கை மூவாயிரத்துக்கு மேல் இருக்கும் என்றும், இந்த நோய்க் கிருமியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கை 18 இலட்சத்து 40 ஆயிரத்துக்கு மேல் இருக்கும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. சுமார் இரண்டு கோடியே 19 இலட்சத்து 30 ஆயிரம் மக்கள் தொகைக் கொண்ட 25 ஆயிரம் கிராமங்களில், குடிநீரில், புளோரைடுகள், குளோரைடுகள், இரும்பு மங்கனீசு, தாதுப் பொருட்கள் ஆகியவை கலந்திருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது மட்டுமின்றி பெரும்பாலான கிராமப்புறப் பகுதிகளிலும் நகர்ப்புறப் பகுதிகளிலும் வயிற்றுப் போக்கு, டைபாயிடு ஜுரம், இளம் பிள்ளை வாதம், ஈரல் சம்பந்தமான தொற்றுநோய் போன்ற நோய்களும் காணப்படுகின்றன.

## மரணவிகிதம்

இந்தத் தொற்று நோய்களின் காரணமாக நகர்ப்புறப் பகுதிகளிலும் (9.6 சதம்)கிராமப்புறங்களிலும் (16.5 சதம்),மரண விகிதங்களில் காணப்படும் வித்தியாசம், நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் சுகாதார நிலைமையில் மறைத்துக் காணப்படும் வித்தியாசத்தையும், குடிநீர் வினியோக வசதி மற்றபொது சுகாதார வசதிகள் ஆகியவற்றில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளையும் பிரதிபலிக்கின்றது. இதன்படி நான்காவது திட்டம் துவங்கியதன் காரணமாக, கிராமப்புற குடிநீர் வினியோகத்துக்கான முக்கியத்துவம் ஒரு தீவிர மாறுதலைக் கண்டது. இதற்கு முந்தைய மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் ஒதுக்கப்பட்டதைக் காட்டிலும், அதிகமான தொகை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனால் கிராமப்புறக் குடிநீர் வினியோகத் திட்டம் ஓர் உத்வேகத்தைப் பெற்றது. குடிநீர் வினியோக வசதி பெற்றுள்ள நகரங்கள்கூட, ஓர் உத்வேகத்தைப் பெற்றது. குடிநீர், வினியோக வசதிக்கான சாதனங்களை மேம்படுத்துவதற்கும், புதுப்பிப்பதற்கும் ஊக்குவிக்கப்பட்டன.

## அதிக நிதி வசதி

ஐந்தாவது திட்டத்தில், நாடு முழுவதுமுள்ள இதுவரை எந்த வித சேவையும் பெறாத மக்களுக்கான, கிராமப்புறக் குடிநீர் வினியோகம் மற்றும் சுகாதார வசதிகளுக்கான ஆண்டு தனி நபர் செலவும் ஒரு ரூபாயிலிருந்து இரண்டு ரூபாய் 40 காசாக உயர்த்தப்பட்டது.

இவ்வளவு வசதிகள் செய்யப்பட்டிருந்தபோதிலும்கூட, நாட்டின் குடிநீர் வினியோகத் திட்டங்களுக்கு, முன்னுரிமை போதுமான நிதிவசதிகளை ஒதுக்கீடு செய்தல், திட்டமிடுதல், பற்றாக்குறைகளைத் தெரிந்தெடுப்பது, தகவல்களை ஒன்றுக்கொன்று ஒன்றிணைப்பது ஆகியவற்றுக்கான உரிய வழிமுறைகள் அவசியமாகின்றன. இந்தத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு, நகரங்கள்,கிராமங்கள் ஆகிய இரண்டிலும் தற்போதைய ஸ்தாபன நிர்வாக அமைப்பை ஆய்வு செய்துக் குறியளவை நிறைவேற்றுவதற்கான முன்னேற்றங்களைச் செய்வதற்காக இத்தகைய நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று தெரிந்தெடுப்பது மிகவும் அவசியம்.

## பயிற்சித் திட்டங்கள்

கடைசியாக, முறையான பயிற்சித் திட்டங்களின் மூலம், எல்லா மட்டங்களிலும்,தொழில் நுட்ப, நிர்வாக ஊழியர்களை அதிகரிப்பதற்கான வசதிகளும் செய்து தரப்பட வேண்டும்.

மத்திய அரசு அளவில் வினியோகம் மற்றும் சுகாதார வசதித் திட்டங்களை மத்திய பொதுச் சுகாதாரம் மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலை பொறியியல் நிறுவனம் நிர்வகித்து வருகிறது. அதே நேரத்தில், நாகபுரியிலுள்ள தேசிய சுற்றுப்புறச் சூழ்நிலை பொறியியல் ஆராய்ச்சிக் கழகம் குடிநீர் வினியோகம் மற்றும் சுகாதார வசதிகளுக்குத் தகுந்த தொழில்நுட்பத் தீர்வுகளைக் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சி வளர்ச்சித் திட்டங்களில் ஈடுபட்டு வருவதையும் குறிப்பிட வேண்டும்.

# வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
# உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
# அத்தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
# டான்சியின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—

தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!

டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 16 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

## டான்சி

### தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை–600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41–7496 TNSI



# தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி நிறுவனம்

**கே. கனகசுந்தரம்,**
**நிர்வாக இயக்குநர்,**
**தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி நிறுவனம்.**

தமிழ்நாட்டில் விவசாயத்திற்குப் பிறகு பெருமளவில் வேலை வாய்ப்பு அளிக்கும் தொழில் கைத்தறித் தொழிலேயாகும். நம் மாநிலத்தில் சுமார் 5.56 இலட்சம் தறிகள் உள்ளன. அதில் 10 இலட்சம் நெசவாளர்கள் வேலை செய்வதுடன் அதன் காரணமாக சுமார் 30 இலட்சம் மக்களுக்கு வாழ்வும் அளித்து வருகிறது. இவற்றில் 2.07 இலட்சம் கைத்தறிகள் கூட்டுறவுத் துறையிலும், மீதமுள்ள 3.49 இலட்சம் கைத்தறிகள் கூட்டுறவுத் துறைக்கு அப்பாற்பட்டும் இயங்கி வருகின்றன. இவ்வாறு பெருமளவில் கூட்டுறவுத் துறைக்கு வெளியில் செயல்பட்டு வரும் கைத்தறிகளின் வளர்ச்சிக்காகவும், அவற்றிற்குத் தேவையான நிதி உதவியை அளிக்க வகை செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் மாநில அரசின் ஆதரவுடன் 1964-ஆம் ஆண்டு இக்கழகம் ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனமாகப் பதிவு செய்பட்டு 1965 முதல் செயலாற்றத் துவங்கியது. முன்பு, தமிழ்நாடு கைத்தறி நிதி மற்றும் வர்த்தக நிறுவனம் என்ற பெயரில் செயல்பட்டு, வந்த இந்நிறுவனம், தற்சமயம் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி நிறுவனம் என்ற பெயரில் பணியாற்றி வருகிறது.

இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூபாய் ஒரு கோடியாகும். இதில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 81.54 இலட்சம் ஆகும். இவற்றில் தமிழக அரசின் முதலீடு ரூபாய் 35 இலட்சம். தமிழக அரசு இவ்வாறு பங்குத் தொகையில் முதலீடு செய்திருப்பதுடன் பொதுமக்களிடமிருந்து வைப்புத்தொகை பெறவும், வங்கியிடமிருந்து கடன் பெறவும், தேவையான பொறுப்புறுதியும் அளித்துள்ளனர். நடைமுறை மூலதனங்கள் மாநில அரசிடமிருந்து கடனாகவும், பொதுமக்களிடம் வைப்புத் தொகையாகவும், இந்திய மாநில வங்கியிடமிருந்து ரொக்கக் கடனாகவும் பெறப்பட்டு வருகிறது. இந்நிறுவனம் மேலும் சீரிய முறையில் விரிவாகச் செயல்படத் தேவையான நிதியை மாநில மற்றும் மத்திய அரசிடம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவர்கள் இந்நிறுவனத்தின் பங்குகளில் அதிக அளவு முதலீடு செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இது தவிர, நாம் வங்கியிடமிருந்து சலுகை வட்டியில் கடனுதவி பெறவும் முயற்சிசெய்யப்பட்டு வருகிறது. நம் முயற்சி பயனளித்தால் இந்நிறுவனம் பங்குதாரர்களுக்கு வழங்கும் கடன்பேரில் வட்டியைக் குறைக்க ஏதுவாகும்.

இந்நிறுவனத்தில் தற்சமயம் 7,010 பங்குதாரர்கள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் நம்மிடம் கடன் உதவி பெற்று தங்கள் தொழிலை வளர்த்து வருகின்றனர். நிறுவனம் துவக்கப்பட்டு இதுவரையில் ரூ. 1857.87 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. 1979-ஆம் ஆண்டில் மட்டும் ரூ. 206 இலட்சம் வரை கடனாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் ரூ. 250 இலட்சம் கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தின் கிளை அலுவலகங்கள் சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர், மற்றும் கும்பகோணம் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

தற்சமயம் இந்நிறுவனம் தனிப்பட்ட நெசவாளர்கள் மாஸ்டர் வீவர்கள், கூட்டு நிறுவனங்கள், மற்றும் நிர்வாகக்குழுவினரால் அனுமதிக்கப்படும் வியாபார நிறுவனங்களுக்குக் கைத்தறி மற்றும் விசைத்தறித் துணி உற்பத்தி செய்யவும், பக்குவப்படுத்தவும், விற்பனை செய்யவும் நூல் மற்றும் சாயப் பொருட்கள் விற்பனை செய்யவும் கடனுதவி அளித்து வருகிறது. இதுதவிர பின்னல் தொழிலுக்கும் கடன் வழங்கப்படுகிறது. கடனுதவி பெரும்பாலும் அசையாப் பொருட்களின் பிணையத்தின், பேரிலேயே அனுமதிக்கப்படுகிறது. இருப்பினும் சிறு கைத்தறி நெசவாளர்களின் நன்மைக்காக ரூ. 1,000 வரையில் தகுந்த தனி நபர் உறுதியின் பேரில் கடன் வசதி அளிக்கப்படுகிறது.

மேலும், சிறு நெசவாளர்களுக்கு வழங்கப்படும் ரூ. 1000 வரையிலான கடன்கள் பேரில் சலுகை வட்டியாக $15\frac{1}{2}$ சதவிகிதம் வசூலிக்கப்படுகிறது. இத்தகைய சலுகையினால் சிறு நெசவாளர்கள் அதிக அளவில் இந்நிறுவனத்தின் கடன் வசதி பெற்றுப் பயனடைகின்றனர். இக்கழகம் தனக்குத் தேவையான தொகையை வங்கியிடமிருந்து $16\frac{1}{2}$ சதவிகிதம் வட்டியின் பேரில் பெற்று சிறு நெசவாளர்களுக்கு $15\frac{1}{2}$ சதவிகிதம் வட்டிக்குக் கடனுதவி செய்வது குறிப்பிடத்தக்கதாகும். மற்ற வகைக் கடன்கள் பேரில் $18\frac{1}{2}$ சதவிகிதம் வட்டி வசூலிக்கப்படுகிறது. இந்நிறுவனம் வங்கியிடமிருந்து சலுகை வட்டியில் கடன் பெற எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகள் பயனடைந்தால் இப்பொழுது கடன் பேரில் வசூலிக்கப்பட்டுவரும் வட்டி விகிதத்தைக் கணிசமான அளவு குறைக்க வகை ஏற்படும்.

கடன் பெறுபவர் கடன் தொகையைத் தவணைப்படி திரும்பச் செலுத்திவிட்டு அத்தொகையை மீண்டும் கடனாகப் பெற வாய்ப்பு உண்டு. இதனால் தொழிலுக்குத் தேவையான நடைமுறை மூலதனம் தொடர்ந்து கிடைக்க வழி ஏற்படுகிறது. இவ்வாறு கோரப்படும் மறுகடன் விண்ணப்பங்கள் விரைவாகப் பரிசீலிக்கப்பட்டுக் காலத்தாமதமின்றிப் பட்டுவாடா செய்யப்படுகின்றன.

# திருபுவனம் பட்டுக் கைத்தறி

குடந்தைக்கு அருகேயுள்ள திருபுவனம் பட்டுக்கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு உற்பத்தி, விற்பனைச் சங்கம் கண்ணைப் பறிக்கும் வண்ணப் பட்டுக்களின் உற்பத்திக் கேந்திரங்களில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க பெருமையுடையது.

இச் சங்கத்தின் வெள்ளிவிழா வருகிற நவம்பர் திங்களில் நடைபெற விருக்கிறது!

இதன் வளர்ச்சியில் பெரும் அக்கறை காட்டிவருபவர், சங்கத் தலைவராகப் பொறுப்பேற்று 25 ஆண்டுக்காலமாக அரும்பணி ஆற்றிவரும் திரு எஸ். ராஜகோபாலன் எம்.ஏ., பி.எல். ஆவார்.

''800 உறுப்பினர்கள்கொண்ட இச்சங்கத்தில், நெசவுத்தொழில் தெரியாதவன் நான் ஒருவன் மட்டுமே'' என்று தன்னடக்கத்தோடு சொல்லிக் கொள்கிறார் இவர்.



1955ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது திருபுவனம் பட்டுக் கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு உற்பத்திச் சங்கம். ஐந்து லட்சம் ரூபாய் மூலதனத்தில் இயங்கிவருகின்ற இச்சங்கத்தின் ஆண்டு விற்பனை ஒன்றரைக் கோடி ரூபாய். குடந்தையில் நடந்த கைத்தறிக் கண்காட்சியான 'எக்ஸ்போ-80'ல் இருந்த திருபுவனம் பட்டுச் சேலைகள் விற்பனை அரங்கில் மாத்திரம் ஏறத்தாழ ஏழு லட்சம் ரூபாய்க்கு மேல் விற்பனையாகியிருக்கிறது.

இச் சங்கத் தயாரிப்புகளில் பிரசித்தி பெற்றவை ஜாங்ளா, டிஸ்யூ ரகப் புடவைகள்!

''400 ரூபாயிலிருந்து, 5,000 ஆயிரம் ரூபாய் வரை விலைமதிப்போடு இங்கே தயாரிக்கப்படும் புடவைகளை வாங்கிப் போய் காஞ்சிபுரத்தில் வாங்கியதாகப் பெருமை யடித்துக்கொள்வோரும் இருக்கிறார்கள்.

மான், மயில், புலி ஆகியவை சித்தரிக்கப்பட்டிருக்கும் வனசிங்காரம் புடவை ரகம் மிகவும் சிறப்பித்துப் பேசப்படுகிறது. இங்கு தயாராகும் இந்தப்புடவை ஒன்றின் விலை ரூ. 4,800 ஆகும்.

இதைத் தவிர - பவர்லூமில் தயாரிக்கப்பட்டது போல இருக்கும் ஜாட்காட் ரகங்களும் திருபுவனம் சொஸைடியில் தயாராகின்றன.

மத்தியத் தொழில் அமைச்சகத்தின் கைத்தறிப் பிரிவு இணை இயக்குநரான திரு என்.பி. சேஷாத்திரி மூலம் இங்கு தயாரிக்கப்பட்ட பட்டுப் புடவைகள் ருஷ்யத் தலைவரான திரு பிரஷ்னேவுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டிருக்கிறது. ''இவர் அதை ரஷ்யாவுக்குக் கொண்டுபோய்க் கொடுத்தபோது பிரஷ்னேவே வாயாரப் புகழ்ந்து பாராட்டியிருக்கிறார். அவ்வளவு சிறப்புடையவை எங்கள் தயாரிப்புகள்'' என்று பெருமையோடு சொன்னார் திரு இராசகோபாலன்.

இந்தச் சங்கத்தைச் சேர்ந்த நெசவாளர்களுக்கு வீட்டு வசதி செய்து தருவதற்கான திட்டமொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது

உறுப்பினர்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள விரும்பும் பட்சத்தில், ரூ. 50 பொது நல நிதியிலிருந்து தரப்படுகிறது. உறுப்பினர்களின் பிள்ளைகள் கல்லூரிவரை சென்று படிக்கவும் சங்கத்தின் மூலம் நிதியுதவி அளிக்கப்படுகிறது என்ற விவரங்களைத் தெரிவித்தார் சங்கத்தின் செயலாளரும், கைத்தறித் துறை துணை இயக்குநருமான திரு. எஸ்.எம். கனகரத்தினம்.

திருபுவனத்தின் முக்கியத் தொழிலேபட்டுநெசவுத் தொழிலாக இருப்பதால், இச்சங்கத்தில் வேறு ஊர்க்காரர்கள் உறுப்பினர்களாக இல்லை.

ஆனால், இந்தியாவின் பல வேறு மாநிலங்களில் இருந்தும் இங்கு பெருவிருப்பத்தோடு வந்து புடவைகள் வாங்கிச் செல்லப்படுகின்றன.

திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் சொந்தக் கட்டிடத்திலேதான் இயங்கி வருகிறது. என்றாலும் போதுமான இடவசதி இல்லை.

ஆகவே, வரும் நவம்பரில் இதன் வெள்ளிவிழா கொண்டாடப்படவிருப்பதன் நினைவாக இதே இடத்தில் பிரமாண்டமான கட்டிடமொன்று கட்டப்படவிருக்கிறது.

61 பேர் இச்சங்கத்தின் அலுவலகப் பணியாற்றி வருகிறார்கள்.

கட்டப்படவிருக்கும் கட்டிடம் இரண்டு மாடிகள் கொண்டதாக அமையும். இதன் திட்ட மதிப்பீடு மூன்று லட்சம் ரூபாய்.

''பட்டுப் புடவைகள் என்றாலே வயதானவர்கள் கட்டுவது என்கிற நிலை இருக்கிறதே, இளம் பெண்களும் கட்டும்படியான ரகங்களைத் தயாரிக்கக் கூடாதா?'' என்று சங்கத்தின் நிர்வாகி திரு. எம். நடராசனைக் கேட்டோம்.

''கல்லூரி மாணவிகள் கட்டிச் செல்லும்படியான அளவில் ஏர் இண்டியா டிசைன், டிஸ்யூவெல்லாம் கூட இங்கே தயாராகின்றன. ஆனால் நீங்கள் சொல்லுவதுபோல், பட்டுப்புடவை என்றாலே வயதானவர்கள் என்ற நினைப்பு வருவதாலோ என்னவோ அந்த ரகங்களுக்கு நாங்கள் எதிர்பார்க்கிற அளவுக்குக் கிராக்கி இல்லை'' என்று வருத்தத்தோடு தெரிவித்தார் அவர்.

'' ராஜகோபாலாச்சாரியார், பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியவர்களெல்லாம்இந்தக்கைத்தறித் தொழில் வளர மிகவும் பாடு பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நாங்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்''என்று நன்றியுணர்வுடன் கூறுகிறார் திரு. இராசகோபாலன்.

இச் சங்கத்தின் தயாரிப்பு அளவு இங்கே விற்பனையாகிற அளவுக்குப் போதுமானதாக இருப்பதால், வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதில்லை.

அப்படி ஏற்றுமதி செய்கிற அளவுக்கு விரைவில் இதன் உற்பத்தித் திறன் அதிகரிக்கும் என்று நிச்சயம் நாம் எதிர்பார்க்கலாம்!

—இராசேந்திரன்.

# அங்கத்திலே ஒரு குறையிருந்தாலும்....



பிறவிக் குறைவகளினாலும் பிறந்த பின், வரும் நோய்களினாலும் ஊனம் ஏற்படுகிறது. ஊனங்களின் மனித வாழ்க்கையையே ஊனமாக்கி விடுகின்றன என்று சொல்லலாம்.

ஊனமுற்றவரும் சமுதாயத்தின் ஓர் அங்கம் தான். ஊனமுற்றவனுக்கு ஊன்று கோலாக இருந்து அரசு எல்லா வகையிலும் உதவி கரத்தை நீட்டி வருகிறது.

இப்படி ஊனமுற்றவர்கள் பெரும்பாலோர் சமுதாயத்தில் பல துறைகளிலும் சிறந்து விளங்குகின்றனர் என்று கூறினால்அது மிகையாகாது. இவர்கள் பல துறைகளிலும் மேதைகளாக கூட விளங்குகிறார்கள்.

உலகமெங்கும் ஒவ்வொருஆண்டும் மார்ச் திங்கள் மூன்றாம் தேதி ''ஊனமுற்றோர் உலக நாள் விழா'' கொண்டாடப்படுகிறது.

முதன் முதலில் இத்தாலியில் 1960 மார்ச் 28ந் தேதியன்று ஒரு சர்வதேச நிறுவனத்தின் ஆதரவில் உடலில் குறையுள்ளவர்களுக்காக விழா கொண்டாடப்பட்டது. இது உலகில் உள்ள உடல் ஊனமுற்றவர்களுக்கு மறு வாழ்வு அளிப்பதற்காக மற்ற சர்வதேச நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் கொண்டாடப்பட்டது. இந்தியாவில் உடல் ஊன முற்றோர் 'உலக நாள் விழா' முதன் முதலில் 1964ல் கொண்டாடப்பட்டது.

ஊனமுற்றோர் உலக நாள் விழா கொண்டாடப்படுவதின் நோக்கம் என்ன? உடல் ஊன முற்றவர்களுக்கு மறு வாழ்வு அளிக்க வேண்டியதன் அவசியத்தை மக்களின் கவனத்திற்குக் கொண்டு வரவும் இதில் சமுதாயத்திற்குள்ள பங்கையும், கடமையையும் உணர்த்தவும், ஊன முற்றோர் 'உலகநாள் விழா கொண்டாடப்படுகிறது. உடல் ஊனமுற்றவர்களை மற்ற ஊன மற்ற மக்களுடன் ஒற்றுமைப் படுத்தவும் இந்த விழா பெரிதும் உதவிகரமாக இருந்து வருகிறது.

இந்த விழாவையொட்டி இவர்களுக்காகப் பல நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. ஊன மடைந்த குழந்தைகளுக்காக விளையாட்டுப் போட்டிகளும் அவர்களை மகிழ்ச்சிக் கடலில் மூழ்க அடிக்கவும் உற்சாகம் ஊக்கமும் அடையச் செய்வதற்காக பலவிதமான பொழுதுபோக்கு நிகழ்ச்சிக்களைக் கொண்ட கலாச்சார நிகழ்ச்சிகளை உடல் ஊனமுற்ற குழந்தைகளால் நடத்தப்படுகின்றன

சென்னையில் உடல் ஊன முற்றோர் உலக நாள் விழாஇந்த ஆண்டு மார்ச் 15-ந் தேதியன்று சமூக நலத் துறையினரால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதன் ஒரு பகுதியாக சென்னை எழும்பூரிலுள்ள ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் பலவிதமான விளையாட்டுப் போட்டிகள் நடந்தன. சென்னை நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள பல நிலையங்களிலிருந்து 1500 உடல் ஊனமடைந்த குழந்தைகள் இந்த விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கண் பார்வையற்றவர்கள், காது கேளாதவகள், கை-கால் ஊன மடைந்தவர்கள், பெருநோய் வியாதியால் பாதிக்கப்பட்டுகுண மடைந்தவர்கள், மற்றும் மூளை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் என்று ஒவ்வொரு பிரிவைச் சார்ந்தவர்களும் இந்த விளையாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

சிறப்பான நிலையங்களுக்கு கேடயங்களும் கோப்பைகளும் பரிசாக வழங்கப்பட்டன. விழாவைச் சமூக நலத்துறை கூடுதல் செயலாளர் திரு கே.எஸ்.இராம கிருஷ்ணன் ஐ.ஏ.எஸ். துவக்கி வைத்தார். தமிழ்நாடு காவல் துறை டைரக்டர் ஜெனரல் திரு கே.ஆர். செனாய், ஐ.பி.எஸ். பரிசுகளை வழங்கினார்.

போட்டியில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு ரொக்கப் பிரிசு, நினைவு விருதுகள் மற்றும் தகுதிச் சான்றிதழ்கள் அளிக்கப்பட்

டன. மார்ச் 16 ஆம் தேதியன்று சென்னை கலைவாணர் அரங்கில் உடல் ஊனமடைந்த குழந்தைகளால் இன்னிசை நடனம், நாடகம் மற்றும் பலவிதமான கலைநிகழ்ச்சிகள் மாலை 5 மணி முதல் இரவு 7 மணி வரை நடத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சிகளில் 200க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் பங்கேற்றனர். ஆயிரத்திற்கும் அதிகமான உடல் ஊனமுற்ற குழந்தைகள் இந்த நிகழ்ச்சிகளை கண்டு களித்தனர். தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு டி.என். லட்சுமிநாராயணன் ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையுரையாற்றினார்.

மாநில விருதுகள் -காது கேட்கும் கருவிகள் மூன்று சக்கர வண்டிகள் ஆகியவற்றை உடல் ஊனமுற்ற மாணவ மாணவியருக்கு வழங்கப்பட்டன. இந்த விழாவையொட்டி உடல் ஊனமுற்ற 1500 மாணவ மாணவியருக்கு இலவசமாக சிற்றுண்டியும் ஆடைகளும் வழங்கப்பட்டன. கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அனைத்து குழந்தைகளுக்கும் நினைவு விருதுகள் வழங்கப்பட்டன.

அதிக அளவில் உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்த அதிபர்களுக்கும், மிகவும் திறமையாகப் பணியாற்றிய உடல் ஊனமுற்றவர்களுக்கும் சிறப்பான முறையில் கல்வி மற்றும் பயிற்சி அளித்த ஆசிரியர்களுக்கும், பயிற்சி நிலையத்திற்கும் மாநில விருதுகள் தமிழக அரசு சார்பில் வழங்கப்பட்டன.

வேலை வாய்ப்பு வழங்கிய சிறப்பான அதிபர்களுக்கு தகுதிச் சான்றிதழ்களும், மிகவும் திறமையாகப் பணியாற்றிய ஊழியர்களுக்கு தலா ரூ. 150 ரொக்கப் பரிசும், தகுதிச் சான்றிதழும், உடல் ஊனமுற்றவர்களுக்கு சிறப்பாகக் கற்றுத் தந்த ஆசிரியருக்கு ரூ. 250 ரொக்கப்பரிசும், சான்றிதழும், சிறப்பான நிலையத்திற்கு வெள்ளியிலான சுழலும் கேடயமும், சான்றிதழும் வழங்கப்பட்டன.

கண்பார்வையிழந்த 3 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்ததற்காக தஞ்சாவூரிலுள்ள 'டான்சி பவுண்டரி' மற்றும் பொறியியல் நிறுவனத்திற்கும், தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமானவர் 44 பேர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதற்காக, தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் (ஆர்.எஸ்) சாக்கோட்டையில் தொழுநோய் ஒழிப்பு நிறுவனத்திற்கும் மாநில விருதுகளும், மிக அதிகமான ஊனமுற்றோருக்கு பயிற்சி அளிக்கும் மிகச் சிறந்த பயிற்சி நிலையமாக திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை பார்வையற்றோர் பள்ளிக்கு மாநிலவிருதுகளும் ''எழுதுபொருள் அச்சக இயக்குநருக்கு ஏ.எம்.எம்.முருகப்பச் செட்டியார் சுழல் கோப்பையும் வழங்கப்பட்டன.

திருவாரூர் அரசினர் கண்பார்வை இழந்தோர் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்து வரும் திரு கணேசன் கண்பார்வையிழந்தவர்களில் தலைசிறந்த ஆசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மாநில விருது வழங்கப்பட்டது. இதேபோல் பரனூர் தொழுநோய்ப்பாதுகாப்பு இல்லத்தில் பார்வையற்றோர் பள்ளியில் வேலை பார்க்கும் தலைசிறந்த ஆசிரியரான எம்.ஏ.தாமஸ் கிண்டி, உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுப் பயிற்சி நிலையம்



ஆசிரியர் ஏ.சந்திரன் தலைசிறந்த ஆசிரியர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மாநில விருதுகளை பெற்றனர். சென்னை பாலவிகார் பள்ளியில் ஆசிரியையாக இருக்கும். ஏ. சொர்ணம்பால் மனநோய் வாய்ப்பட்டவர்







களில் தலைசிறந்த ஆசிரியராக தேர்ந்தெடுக்கப்பட்டு மாநில விருதைப் பெற்றார்.

இந்தியாவிலேயே உடல் ஊன முற்றோருக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பளித்து திறமை யாகச் செயல்பட்டதற்காகவும், மிகவும் திறமையாக பணியாற்றி யதற்காகவும் சென்னை இராயப் பேட்டையில் உள்ள வருங்கால வைப்புநிதிஅலுவலகம், சென்னை பெரம்பூரில் உள்ள ரயில்பெட்டி இணைப்புத் தொழிற்சாலை, பெரம்பூரில் உள்ள பி அண்டு சி மில் ஆகியவை குடியரசுத் தலைவர் தேசீய விருதுகளைப் பெறுகின்றன.

தண்டையார்ப் பேட்டையில் உள்ள மெட்டல் பாக்ஸ் நிறுவ னத்தில் பணிபுரியும் இரண்டு கண் களையும் இழந்த திரு ஏஸ். கணே சன் என்ற ஊழியருக்கு குடியர சுத் தலைவர் தேசிய விருதுஇந்த ஆண்டு வழங்கப்படுகிறது.

இந்த வகைகளில் ஒவ்வொரு ஆண்டிலும் 36 தேசிய விருதுகள் குடியரசுத் தலைவர் வழங்கு றார். இந்த ஆண்டில் இவற்றில் 4 தேசீய விருதுகள் தமிழ்நாட் டுக்குக் கிடைத்துள்ளது என்ற பெருமை நமக்கெல்லாம் மகிழ்ச் சியைக் கொடுக்கிறது.

—ஆனந்தன்.





# ஊனமுற்றோருக்கு உதவும் எழுது பொருள் அச்சகத் துறை

எஸ். இராசரத்தினம்,
துணை இயக்குநர்,
எழுதுபொருள் அச்சகத்துறை.

ஊனமுற்றோரின் மறுவாழ்வு என்பது ஒரு சமூக பொருளாதாரப் பிரச்னையாகும். அரசு இப்பிரச்னையை ஊனமுற்றோர் உலக நாள் விழா கொண்டாடுவதின் மூலமாக மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, ஊனமுற்றோ ரும் சமுதாயத்தில் ஓர் அங்கம் என்பதையும் அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது அவசியம் என்பதையும் உணர்த்தி வருகிறது.

அவர்கள் சுய மரியாதையுடன் பொறுப்பு மிக்க குடிமக்களாக வாழ வழிசெய்ய அரசு பல திட்டங்களைத் தீட்டி வருகின்றது. அரசுத் துறையைச் சேர்ந்த எழுதுபொருள் அச்சுத் துறை ஊனமுற்றோர் வாழ்வு மேம்பாடு அடைய தனது பங்கைச் சிறப்பாக செய்து வருகின்றது. 1977-ஆம் ஆண்டு வரை படிப்படியாக சுமார் 140 ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பினை நல்கி, அதிக அளவில் வேலை வாய்ப்பினை அளித்த நிறுவனமாகத் திகழ்ந்து வருகின்றது. இதற்கான இந்திய குடியரசுத் தலைவரின் விருதினை, 1978-ஆம் ஆண்டில் பெற்று இத் துறை பெருமை பெற்றது. இவ்வாண்டும் (1980) ஊனமுற்றோர் உலக நாள் விழாவில் ஏ.எம்.எம். முருகப்பச் செட்டியார் சுழற்கேடயம் பரிசு இத்துறைக்குக் கிடைத்து உள்ளது.

இத்துறையின் நிர்வாகத்திலுள்ள அச்சகங் களில் ஊனமுற்றோர்கள் குறிப்பாக மத்திய அச்சகம், கிளை அச்சகங்கள், வட்டார அச்சகங் களிலும் பணியாற்றி வருகின்றார்கள்.

கை, கால் ஊனமுற்றோர், அச்சுக் கோக்கும் பிரிவிலும், கண்பார்வையற்றோர் புத்தகங்கட்டும் பிரிவிலும், உள்ள பணியான மடித்தல், சேகரித்தல், ஒட்டுதல், கவர் செய்தல் போன்ற பணிகளைச் செம்மையாகச் செய்து ஒரு சாதாரண தொழிலாளியைவிட சற்றும் தாங்கள் குறைந்தவர்களல்லர் என்பதனை நிரூபித்து வருகின்றார்கள். அவர்கள் அனைவரும் சக தொழிலாளர்களுடன், தாங்கள் ஊனமுற்றோர் என்பதனை மறந்து, சமுதாயத்தில் தாங்களும் ஓர் அங்கம் என்பதனை நிரூபித்து அவர்கள் தங்களது கடமைகளைச் செம்மையாக ஆற்றி வருகின்றார்கள். தற்பொழுது இத்துறையில் கண்பார்வையற்றோர்—14, காது கேளாதவர், ஊமை—32, கை, கால், ஊனமுற்றோர்—94 ஆக 140 பேர்கள் பணியாற்றி வருகிறார்கள். இவர்கள் வேலை தேடித்தரும் அலுவலகம் மூலமாக நிரந்தரத் தேர்வுக்குழுவால் தேர்ந் தெடுக்கப்பட்டு, பணியில் அமர்த்தப்படு கிறார்கள்.

ஊனமுற்றோரில் சிலரைப் பயிற்சியாள ராகவும், (Apprentices) இத்துறை நியமித்து, அவர்களின் வாழ்வு மலர வகை செய்து வரு கின்றது. ஊனமுற்றோரின் மறுவாழ்விற்காக இத்துறை மென்மேலும் இயன்ற பணியினை எடுத்து முடித்திட முயன்று வருகிறது.

# தமிழ்நாட்டின் முதல் தொழிற்பேட்டை



**கா**லை நேரம்!

சாரி சாரியாகத் தொழிலாளர்கள் சென்று கொண்டிருக்கின்றனர்.

ஆடவரும், மகளிரும் சுறு சுறுப்பாய் தம் தொழிற்கூடம் நோக்கி விரைகின்றனர்.

பரந்து விரிந்த அந்தத் தொழிற்பேட்டையில்தான் எத்தனைத் தொழிற்கூடங்கள்! எத்தனை வகையான தொழில்கள்!

ஆம். கிண்டித்தொழிற்பேட்டை, காலைக் கதிரவனின் ஒளிபட்டதும் துரித கதியில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

**ஒருமைப்பாட்டின் உயர்வு:**

அன்றாட அலுவல்களைக் கவனிக்க அங்கே செல்லும் உழைப்பாளர்களைக் காணுகிறபோது—சாதி, மதம், இனம், மொழிவேறுபாடின்றி 'எல்லாரும் சமம்' என்பதனை நினைப்பூட்டுகின்ற வகையில், ஒரே இடத்தில், ஒன்றாய்ப் பணிபுரிகின்ற காட்சியைப் பார்க்கும்போது, ஒருமைப்பாட்டின் உயர்வு தெரிகிறது; உள்ளம் மகிழ்கிறது.

சென்னைக் கிண்டித் தொழிற்பேட்டை, கிண்டி இரயில் நிலையத்துக்கு எதிரிலும், மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்திலும், சென்னைத் துறைமுகத்துக்கு 10 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

நகர, புறநகர்ப் பேருந்துகள் வசதியும் இருப்பதால், பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் தொழிலாளர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு இங்கே வரமுடிகிறது.

**வளரும் தொழில்கள்:**

கிண்டித் தொழிற்பேட்டை விசாலமான அளவில் 163.52 எக்டேர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. 148 தொழிற்கூடங்கள் (Units) இங்கு உள்ளன. ரூபாய் 2.25 கோடிச் செலவில் இந்தத் தொழிற்பேட்டை பிரம்மாண்டமான அளவில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தொழிற்பேட்டை ஏறக்குறைய ஆண்டுக்கு 1.75 கோடி ரூபாய் வருமானத்தைத் தேடித் தந்துள்ளது. போதுமான அளவு மூலப் பொருள்கள் விநியோகத்தையும் பெற்றிருக்கிறது.

1958-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில், இந்தத் தொழிற்பேட்டை துவக்கப்பட்டது. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அப்போது இதனைத் துவக்கி வைத்தார். அவ்வமயம் இங்கு 52 தொழிற்கூடங்களே இருந்தன. 1959-ஆம் ஆண்டு மேலும் 26 தொழிற்கூடங்கள் உருவாயின. இப்படி ஆண்டுக்காண்டு தொழிற்கூடங்கள் பெருகின. அதன் மூலம் தொழில்களும் வளர்ந்தன.

**நாட்டின் முதுகெலும்பு:**

மூலதனம் இருந்தும், தொழில் தொடங்குவதற்கு ஒரு நல்ல இடம் இல்லாமல் அவதிப்பட்ட



'மோபெட்' மோட்டார் சைக்கிள் உருவாகிறது.

தொழில் முனைவர்களுக்குத் தமிழக அரசு தக்க சமயத்தில் உதவி புரிய முன்வந்தது. அதன் விளைவுதான் இந்தத் தொழிற் பேட்டை. குறைந்த வாடகையில் நிறைந்த வசதியுள்ள இந்தத் தொழிற்கூட இடங்கள், அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்தன. தொழிலை வளர்க்கப் பெரிதும் உதவின. இங்கு 116 தனியார் தொழிற்கூடங்களும், 2 அரசு தொழிற்கூடங்களும், ஒரு அரசு சார்பு தொழிற்கூடமும் 2 தொழில் கூட்டுறவு நிறுவனங்களும் உள்ளன.

ஒரு நாட்டின் முதுகெலும்பாய் விளங்குவது தொழிலாகும். தொழில் வளமே-தொழிலாளர் நலமே நாட்டின் முன்னேற்றத்தையும், மதிப்பையும் உயர்த்தும். அந்த வகையில் பல்வேறு தொழில்களை வளர்க்கவும், அதன் மூலம் பல்லாயிரவர்க்கு வேலை வாய்ப்பினை அளிக்கவும் தமிழக அரசு இத்தகைய தொழிற்பேட்டைகளை (Industrial Estates) உருவாக்கியிருக்கின்றது. கிண்டித் தொழிற்பேட்டையில் மட்டும் 6,000 பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

**நிரந்தரப் பொருட்காட்சி:**

கிண்டித் தொழிற்பேட்டையில் முகப்பில், நிரந்தரப்பொருட்காட்சி ஒன்று உள்ளது.

இங்கு, சிறு தொழில் துறையில் தயாரிக்கப்படும் பொருட்கள் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பொருட்காட்சியில் இரும்பு, கண்ணாடி, தோல், மரம், துணி, காகிதம் முதலியவற்றினாலான பொருள்கள் உள்ளன. பல மாநிலத்தவர் இப்பொருட்காட்சியைப் பாராட்டியுள்ளனர்.

**தொழில்நுட்பத் தகவலகம்;**

தொழில் வளர்ச்சிக்குத் தேவையான தகவல்களை-யோசனைகளை-உதவிகளை வழங்குகிறது, 'தொழில் நுட்பத் தகவலகம்'. ஆர்வமுள்ள தொழிலதிபர்களுக்கும், தொழில் முனைவர்களுக்கும், தொழில் சம்பந்தப்பட்ட தகவல்களை அளித்து வரும் இத் தகவலகத்தின் சார்பில், 'தொழில் நுட்ப நூலகம்' ஒன்றும் இயங்கி வருகின்றது.

*1958*-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட இருந்த நூலகத்தில் அறி



'மோபெட்' மோட்டார் சைக்கிள்.

வியல், தொழில்நுட்பவியல் மற்றும் வேளாண்மை அறிவியல் சார்ந்த தொழில் நுட்ப நூல்கள், தொழிலியல் செய்தி இதழ்கள், மத்திய, மாநில அரசின் தொழில் கொள்கைகளை விவரிக்கின்ற செய்தி இதழ்கள், சிறுதொழில்கள் சம்பந்தமான தொகுப்புகள் முதயன உள்ளன.

இந்த அழகிய, அரிய நூலகத்தில் புதைந்து கிடக்கும் தொழில் நுட்பம் சம்பந்தமான கருவூலங்களை - நூல்களைத் தொழிலதிபர்கள்-பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றுகின்ற தொழில் நுட்பப்பணியாளர்கள் தக்கவாறு பயன்படுத்தி வருகின்றார்கள்.

இங்கு 4973 தொழில்நுட்ப நூல்கள் உள்ளன. 60 இதழ்கள் தருவிக்கப்படுகின்றன. நூலகத்தின் சார்பில் 'இன்ட்காம் நியூஸ் லெட்டர்' என்ற மாத வெளியீடு ஒன்றும் வெளியிடப்படுகிறது. இதுபோன்று நூலகங்கள் இணைந்த தொழில்நுட்பத் தகவலகங்கள் அம்பத்தூர், மதுரை, காட்பாடி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் உள்ளன.

இங்கு என்னென்ன தொழில்கள் உள்ளன? அவற்றுள் சிலவற்றைத், தெரிந்து கொள்வோமா?



கண்ணாடிக்கு 'சில்வர்' பூசப்படுகிறது.

**தமிழ்நாடு 'மோபெட்'**

தமிழ்நாடு 'மோபெட்' நிறுவனத்தின் சார்பில், நவீன வடிவமைப்புள்ள அழகிய மோட்டார் சைக்கிள்கள் தயாரிக்கப்படுகின்றன.

முழுவதும் சுதேசி பாகங்களை கொண்டே தயாரிக்கும் இந்த 'மோபெட்' ( MOPED ) மினி மோட்டார் சைக்கிள், ஆமத் நகர் ஆராய்ச்சி நிலையத்தின் கடும் சோதனைக்கு உட்பட்டு வெற்றி கண்டிருக்கிறது. இதற்கான வடிவமைப்பு ( Design ) இங்கேயே உருவாக்கப்பட்டதாகும். இதற்கான பாகங்கள் அனைத்தும் இங்கேயே தயாரிக்கப்படுகின்றன.

இந்த அழகிய நல்ல தரமான மோட்டார் சைக்கிளுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. வண்டி ஓடிக் கொண்டிருக்கும் போது பெட்ரோல் தீர்ந்து விட்டால், காலால் மிதித்து இதனை ஓட்டலாம். ஒரு லிட்டர் பெட்ரோலில் 60-65 கிலோமீட்டர் தூரம் வரை போக முடியும். இது எளிமையானது தான் என்றாலும், எஃகு போன்று உறுதியானது.

இந்தத் தொழிற்கூடத்தில் நவீனமான பெரிய இயந்திரங்கள் உள்ளன. இங்குத் தயாராகும் பாகங்களை ஆய்வு செய்வதற்கெனவே ஒரு தனிப் பிரிவு (Inspection) உள்ளது.

'டான்சி' யின் ஒரு அங்கமாக இயங்கி வந்த இது, 1977-ஆம் ஆண்டிலிருந்து தனிநிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது.

நிரந்தரப் பொருட்காட்சி!




**முகத்தின் அழகு கண்ணாடியில் தெரியும்:**

அன்றாட வாழ்க்கையில், கண்ணாடி மிக அத்தியாவசியமாகிறது. பெண்கள் மட்டுமல்ல, ஆண்கள் கூட இன்று கண்ணாடி முன் மணிக்கணக்காக நின்று



**கைத்தறித் துணிகள் வெட்டப்படுகின்றது.**

அழகு படுத்திக் கொள்வதைப் பார்க்கலாம்.

அழகிய, தரமான முகம் பார்க்கும் கண்ணாடிகளைத் தயாரித்து பேரும் புகழும் பெற்று வருகிறது 'பில்கோ மிர்ரர்' என்னும் நிறுவனம்.

முகம்பார்க்கும் கண்ணாடி மட்டுமின்றி, பீரோவில் பதிக்கும் கண்ணாடிகளும், அலுவலகங்கள், கட்டடங்களுக்குத் தேவையான கண்ணாடிகளும் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. தமிழக அரசு அலுவலகங்கள், ரயில் பெட்டித் தொழிற்சாலை போன்றவற்றுக்கு இந்தக் கண்ணாடிகள் பயன்படுகின்றன.

இங்குத் தயாராகும் கண்ணாடிகள் இந்தியாவின் பல மாநிலங்களுக்கும், இலங்கை, அரேபியா, மொரீசியஸ் போன்ற அயல்நாடுகளுக்கும்கூட அனுப்பப்படுகின்றன. இங்குள்ள ஒரு இயந்திரம் - கண்ணாடிகளுக்கு ரசம் பூசும் இயந்திரம், தென்னிந்தியாவிலேயே இங்கு மட்டும் தான் உள்ளது.

**பேசும் படம் :**

பொழுதுபோக்குச் சாதனங்களில் முக்கிய அங்கம் வகிப்பது திரைப்படம். அந்தத் திரைப்படத்துக்கு முக்கியக் கருவியாக விளங்குவது 'புரொஜெக்டர்'. இதனைத் தயாரிக்கிறது., 'தேவிசினி புரொஜக்டர் மனுஃபாக்சரிங் கம்பெனி'.

இந்தியாவிலேயே முதன் முதலில் துவக்கப்பட்ட இது, தென்னிந்தியாவில் முதலாவதாகத் திகழ்கிறது. 35 எம். எம்., 70 எம்.எம். புரொஜெக்டர்கள் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. இந்தப் படங்காட்டும் கருவிகள், இந்தியாவின் பல பாகங்களுக்கும் மட்டுமின்றி, பங்களாதேஷ், மற்றும் அரேபிய நாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றன. இங்குள்ள நவீன இயந்திரங்கள் பல எச்.எம்.டி. யின் தயாரிப்புகள். ஆண்டு தோறும் இங்குச் சுமார் 100 புரொஜெக்டர்கள் தயாராகின்றன. இது உலக அரங்கில் தரமானது என்ற முத்திரை பெற்றுள்ளது.

**தையலும் தையலரும் :**

'ஆள் பாதி ஆடைபாதி' என்பார்கள். அழகுக்கு அழகூட்டுவது ஆடைகளே. வண்ண வண்ண ஆடைகள்-காலத்துக்கேற்ற வகையில் கவர்ச்சிமிகு உடைகள் இன்று உலகெங்கும் வரவேற்கப்படுகின்றன.

இத்தொழிற்பேட்டையில், அத்தகைய அழகிய ஆடைகளைத் தைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. 'ஃபௌண்டேஷன் கார்மென்ட்ஸ்' என்ற ஒரு நிறுவனம் (Foundation Garments)

1974-ல் துவக்கப்பட்ட இத் தொழிற்கூடத்தில் பணியாற்றுகின்றவர்களில் 80 சதவிகிதத்தினர் பெண்கள்.

அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு, தமிழ் நாட்டுப் பெண்கள் தைக்கின்ற இந்த அழகிய ஆடைகள் ஏற்றுமதியாகின்றன. அனுப்பப்படும் ஆடைகளில் - சட்டை, கால் சட்டை, ரவிக்கைகளில் 75 சதவிகிதம் கைத்தறியாலான ஆடைகளாகும். ஓராண்டிற்குச் சுமார் ரூ. 25 இலட்சம் மதிப்புள்ள ஆடைகள் ஏற்றுமதியாகின்றன.

வெளிநாட்டிலிருந்து இங்கு வருபவர்கள், தங்களுக்குப்பிடித்தமான வண்ணத்தில், டிசைன்களைத் தேர்ந்தெடுத்துவிட்டுச் செல்கிறார்களாம்.

**நைலான் கயிறும், நவீன ரேடியோவும் :**

பிளாஸ்டிக், நைலான் ஆகியவற்றாலான கயிறுகளைத் தயாரிக்கிறது ஒரு நிறுவனம். 'தணிகை நைலான்ஸ்' என்னும் இத் தொழிற்கூடத்தில் உருவாகும் இந்தக் கயிறு, மீன் வலை தயாரிக்க உதவுகிறது. இவை ஆந்திரம், ஒரிசா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

'மெக்கோ டிரானிக்ஸ்' (Meco Tronics) என்பது ஒரு தொழிற்கூடம். இங்குப் பணியாற்றுகிறவர்களில் பாதிப் பேர் பெண்கள். டிரான்ஸிஸ்டர், கார் ரேடியோ, கணக்கிடும் கருவி முதலியன இங்கு உருவாக்கப்படுகின்றன. இந்தியாவின் பல பாகங்களுக்கும் இந்தக் கருவிகள் அனுப்பப்படுகின்றன.

கிரிக்கெட் போட்டி சமயங்களில், கைக்கு அடக்கமான மினி வானொலிப் பெட்டிகளைக் காதருகே வைத்துக் கொண்டு கேட்பதைப் பார்க்கிறோம். அந்த வானொலிப் பெட்டிகளைத் தயாரிக்கிறது. 'ரீசா ரேடியோ' என்னும் நிறுவனம். இங்கு நிறைய மகளிர்க்கும் வேலை வாய்ப்புத் தந்துள்ளனர்.

இங்குப் பெரிய, சிறிய வானொலிப் பெட்டிகள் தவிர, திரைப்படக் கருவிக்குரிய ஒலி பெருக்கிகள், மின் பகுப்பு மின் விசையேற்றிகள் (Electrolytic condensers) டேப் ரிகார்டர்கள் முதலியன தயாரிக்கப்படுகின்றன.

எழுதுவதற்கும், சித்திரங்கள் வரைவதற்கும் பென்சில் நமக்குப் பலவழிகளில் பயன்படுகின்றது. 'ஸ்டாண்டர்டு பென்சில்பாக்டரி' என்னும் நிறுவனம் 1960-லிருந்து பென்சில்கள், வண்ணப் பென்சில்கள், நெற்றிப் பொட்டு, புருவத்துக்கு மை இடும் பென்சில்கள் ஆகியவற்றைத் தயாரிக்கின்றது.

# தமிழ்நாட்டில் தொழிற்பேட்டைகள்!

தமிழகத்தின் பல பகுதிகளில் தொழிற் பேட்டைகள், உருவாக்கப்பட்டுள்ளன. தமிழக அரசின் சார்பில் நிருவகிக்கப்பட்டு வந்த இந்தத் தொழிற்பேட்டைகளும், அங்கு உள்ள தொழிற் கூடங்களும் இப்பொழுது சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (சிட்கோ) சார்பில் நிறுவகிக்கப் பட்டு வருகின்றன. அவை வருமாறு:

| | தொழிற்பேட்டைகள் | | அமைக்கப்பெற்றுள்ள தொழிற்கூடங்கள் |
|---|---|---|---|
| 1. | அம்பத்தூர் | .. | 245 |
| 2. | கிண்டி | .. | 148 |
| 3. | காஞ்சீபுரம் | .. | 4 |
| 4. | அரக்கோணம் | .. | 8 |
| 5 | கிருஷ்ணகிரி | .. | 12 |
| 6. | காட்பாடி | .. | 22 |
| 7. | மேட்டூர் | .. | 8 |
| 8. | சேலம் | .. | 14 |
| 9. | ஈரோடு | .. | 15 |
| 10. | தஞ்சாவூர் | .. | 12 |
| 11. | கும்பகோணம் | .. | 4 |
| 12. | புதுக்கோட்டை | .. | 18 |
| 13. | நாகப்பட்டினம் | .. | 4 |
| 14. | திருச்சி | .. | 33 |
| 15. | கரூர் | .. | 6 |
| 16. | திருவெறும்பூர் | .. | 10 |
| 17. | மதுரை | .. | 51 |
| 18. | திண்டுக்கல் | .. | 22 |
| 19. | தேனி | .. | 7 |
| 20. | பேட்டை | .. | 16 |
| 21. | கோவில்பட்டி | .. | 11 |
| 22. | விருதுநகர் | .. | 15 |
| 23. | காரைக்குடி | .. | 14 |
| 24. | சிவகங்கை | .. | 6 |
| 25. | நாகர்கோயில் | .. | 8 |
| 26. | மார்த்தாண்டம் | .. | 5 |
| 27. | வடலூர் | .. | 4 |
| 28. | கோயம்புத்தூர் (குறிச்சி) | .. | 7 |
| 29. | தர்மபுரி | .. | 4 |
| 30. | கடலூர் | .. | 6 |
| 31. | திருவண்ணாமலை | .. | 16 |
| 32. | மாதவரம் | .. | 24 |
| 33. | வத்தலகுண்டு | .. | 4 |

ஆக, மொத்தம் தமிழ்நாட்டில் 783 தொழிற்பேட்டைகள் உள்ளன.



'டிரான்சிஸ்டர்' தயாராகிறது!



கிண்டித் தொழிற்பேட்டையில் எல்லா வசதிகளும் உள்ளன. சிற்றுண்டி நிலையம், முதல் உதவி நிலையம், தொழிலாளர்களுக்கான ஓய்வு விடுதி, அஞ்சலகம், தொலைபேசித் தொடர்பகம், வங்கி, தீயணைப்பு நிலையம், பேருந்துபோக்குவரத்துவசதிகள், விளையாட்டுத் திடல், பொழுதுபோக்கு மையம், தொழிலாளர்களுக்கான குறைந்த வாடகையில் வீடுகள், பரிசோதனைக்கூடம், மரத் தொழிற்கூடம், விளையாட்டுச் சாமான்கள் தயாரிப்புக் கூடம், கண்ணாடியிலான விஞ்ஞானக் கருவிகள் உற்பத்திக் கூடம், அச்சகம் போன்றவை இங்கு உள்ளன. இங்குள்ள மத்திய அரசின் காலணி தயாரிப்புப் பயிற்சி நிலையம், பொறியியல் சம்பந்தமான தொழில்நுட்ப நிலையம் ஒன்றையும் விரைவில் துவக்கத் திட்டமிட்டுள்ளது.

**அரும்பு வேர்வை உதிர்த்து...**

இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவோரும், யந்திரங்கள் வகுத்திடுவோரும் நிறைந்துள்ள இந்தத் தொழிற்பேட்டையில், நாளும் வளர்கின்றது நல்ல பல தொழில்கள். 'அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல் ஆயிரந் தொழில் செய்திடுவீரே!' என்ற பாரதியின் வாக்கினை மெய்ப்பிக்கின்ற வகையில், மேதினியெங்கும் மேன்மை பெற்று வருகிறது கிண்டித் தொழிற்பேட்டை என்றால் அது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை!

—பி. வி. கிரி

# மீஞ்சூர் ஒன்றியத்தில் கிராம வீட்டு வசதி

அரிசன மக்களின் நலமாகட்டும், ஆதிவாசிகளின் நலமாகட்டும்; அரசு இதற்காகக் கொண்டிருக்கும் அக்கறை மகத்தானதாகும்.

உதாரணத்துக்கு ஒன்று சொல்வதானால், செங்கற்பட்டு மாவட்டம் மீஞ்சூர் ஒன்றியத்தில் நிறைவேற்றப் பட்டு வரும் கிராம வீட்டுவசதித் திட்டத்தைக் குறிப்பிடலாம்.

பொன்னேரியில் நிறைவேறி வரும் இத்திட்டத்திற்காக, சமூக நலத்துறையினால் இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. 31 குடும்பத்தாருக்காகப் பிரித்துத்தரப்பட்ட பட்டாக்களில், அவரவர்களுக்கான வீடுகளை உருவாக்கும் முயற்சியில் அந்தந்தக் குடும்பத்தினரே முழுமூச்சோடு ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்த இடம் ஒதுக்கப்பட்ட போது, இதை எதிர்த்து நீதிமன் சென்றவர்களும் உண்டு. ஆனாலும், சமுதாயத்தின் அடிமட்ட மக்களுக்குச் சாதகமாகவே தீர்ப்பு வழங்கப்பட்டது - நீதி அவர்கள் பக்கம் இருந்ததால்!

## தவணை முறை

இங்கு கட்டப்படும் வீடு ஒன்றுக்கு ரூ. 5,000 அரசால் தரப்படுகிறது. அதிலும் அவரவர் உழைப்பின் பங்கும் ஆயிரம் ரூபாய் அளவில் மதிப்பிடப்பட்டு மீதத்தொகை நான்காயிரமும் தவணை முறையில் தரப்படுகிறது.

இந்த அளவீட்டில் - முதல் தவணையாகக் கூட்டுறவுக் கடன் வழங்கு முறையில் ஆயிரம்ரூபாய் ஒவ்வொருவருக்கும் தரப்பட்டது.

இரண்டாவது தவணையாக ரூ. 1550.50 வழங்கப்பட்டது.

''மீதத்தொகையையும் சீக்கிரமே பெற்று, இந்த வீடுகளை அடுத்த மாதத்திற்குள்ளேயே கட்டிமுடித்து விடுவோம்'' என்றார் இத்திட்டத்தை முன்னின்று நிர்வகித்துவரும் ஆதிவாசிகள் முன்னேற்ற சங்கத் தலைவரான காஞ்சி வை. சுப்பிரமணியம். முன்னாள் டவுன் பஞ்சாயத்து உறுப்பினருமான அவர் - ஜனவரியில் துவங்கப்பட்ட இந்த வீட்டுவசதி கட்டுமான வேலை சிமெண்ட் தட்டுப்பாடு மட்டும் இல்லாதிருந்தால் பிப்ரவரி கடைசிக்குள்ளேயே முடிக்கப்பட்டிருக்கும் என்று ஆதங்கப்பட்டுக் கொண்டார்.



இரவுபகலாக நடந்து வரும் வீடுகட்டும் வேலை வேகத்தைப் பார்த்தால் அவர் சொல் ஆழ்ந்த நம்பிக்கையோடு பிறப்பதாகவே தெரிகிறது.

## வட்டியில்லாக் கடன்

அரசின் மூலம் இந்தக் கிராம வீட்டுவசதித் திட்டத்திற்காக அளிக்கப்படும் கடனானது, வட்டியின்றியே வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் வீட்டு வசதி பெறவிருக்கின்ற 31 வீட்டுக் காரர்களும் மிகக் குறைந்த வருவாய் உள்ளவர்கள் ஆவார்கள். ஆகவே, வாங்கும் கடனை அடைப்பதற்காக மாதம் ரூ.16 மட்டும் கட்ட ஆணையிடப்பட்டு கட்டி வருகிறார்கள். இதன்படி 50 ஆண்டுக்காலம் தொடர்ந்து கட்டி வந்தால் இந்தக் கடன் அடைகிறது.

உணவு, உடையோடு உறையுளும் அவசியம் என்பதறிந்து, அரசால் அங்கீகரிக்கப்பட்டு நடந்து வரும் இத்திட்டத்தை நிறைவேற்றுவதில், தொடர்புடையோரனைவரும் மகிழ்ச்சிகரமான உற்சாகத்தோடு ஈடுபட்டு அயராது பாடுபட்டு வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது!

—ராஜு







# நெருப்பும் பொறுப்பும்

**என். நியூட்டன் தேவசகாயம்,** ஐ.பி.எஸ்.
**இயக்குநர், தீயணைப்புத்துறை.**

தீயணைப்புத் தொண்டு நாள் விழா ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. 1944-ம்ஆண்டு ஏப்ரல் 14-ம் நாள் பம்பாய் துறைமுகத்தில் பெரும் தீவிபத்து ஒன்று ஏற்பட்டது. அத் தீ விபத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட தீயணைப்பு அலுவலர்களும், பணியாளர்களும் தீயணைப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும்போது உயிர் துறக்க நேரிட்டது. அவ்வாறு உயிர்துறந்த மாபெரும் செயல் வீரர்களுக்கு, வீர வணக்கமும், மரியாதையும் செலுத்தும் வகையில், ஆண்டு தோறும் ஏப்ரல் 14-ஆம் நாள் தீயணைப்புத் தொண்டு நாள் கொண்டாடப்படுகிறது.

**மனிதனின் கட்டுக்கோப்புக்குள்:**

இத் தீயணைப்புத் தொண்டு நாளில் மறைந்த மாபெரும் வீரர்களுக்கு நினைவு அஞ்சலி செலுத்துவது மட்டும் இதன் குறிக்கோள் அல்ல. அவ்வீரர்கள் இறக்கக் காரணமான தீயினை, எவ்வாறு மனிதனின் கட்டுக் கோப்புக்குள் கொண்டுவரவேண்டும் என்ற விபரமும், தீப்பற்றுவதற்குரிய காரணங்களை கண்டறிந்து, அவற்றினை எவ்வாறு தவிர்த்தல் வேண்டும் என்று பொது மக்களுக்கு எடுத்துக்கூறி உயிரையும் உடைமைகளையும் காக்கும் நாளாக இந்நாள் கொண்டாடப்படுகிறது.

**குடிசை மக்கள் எப்படி வாழ்கிறார்கள்?**

பெரும்பாலும் நகரங்களைக் காட்டிலும், கிராமங்கள் அதிகமாக கொண்டது நம் நாடு. கிராமங்களில் நாம் பலமாடிக் கட்டடங்களையோ, மாடமாளிகைகளையோ காண முடியாது. கிராம மக்கள், எளிதாக தீப்பற்றக் கூடிய பொருட்களைக் கொண்டுதான் இருக்குமிடம் அமைத்து இருக்கிறார்கள். மேலும், கிராம மக்களின் வாழ்க்கைத்தரமும், மிகக்குறைந்த நிலையில் உள்ளது. எனவே ஒரு குடிசை வீட்டினுள், ஒரு குடும்பமே வாழும் நிலையில் இருக்கின்றனர். அவ்வாறு ஒரே வீட்டினுள் வாழும் நிலை ஏற்பட்டால் பலவிதமான இடர்பாடுகள் ஏற்பட சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. மேலும் கூரைவீடுகள் மிகவும் உயரம் குறைந்த நிலையில் தாழ்வாக கூரை அமைத்து இருக்கிறார்கள். இப்படிப்பட்ட கூரை வீடுகளில் சமையல ஒரு பகுதியில் செய்யும் நிலையில் கிராம மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

**விழிப்புணர்ச்சியைத் தூண்டும் நாள்:**

அவ்வாறு சமையல் செய்யும் போது, அடுப்பிலிருந்துதீப்பொறி கிளம்பி, கூரைமீது பட்டு தீப்பற்றி ஊர்முழுதும் பாதிக்கும் நிலை கூட ஏற்பட்டுவிடுகிறது. இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையிலிருந்து ஏழைமக்கள் விடுபட, வழிதெரியாத நிலையில் இருந்து வருகின்றனர். இப்படிப்பட்ட கிராமங்களில்தான், தீயணைப்புத் துறையினரால் ஏப்ரல் 14-ம் நாள், தீயணைப்புத் தொண்டு நாள் எனக் கொண்டாடப்படுகிறது.

தமிழ்நாட்டில் தற்போது 108 தீயணைப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்தீயணைப்பு நிலையத்திலுள்ள அலுவலர்களும், பணியாளர்களும் ஆண்டுக்கொருமுறை, கிராமப் புறங்களுக்குச் சென்று பொது மக்களைத் திரட்டி, தீப்பற்றுவதற்குரிய காரணங்களையும், அதனை எவ்வாறு தவிர்த்தல் வேண்டும் என்ற விளக்கத்துடன் கூடிய செயல்முறைப் பயிற்சிகளையும் செய்து காண்பித்து பொது மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியைத் தூண்டும்நாளாக இந்நாள் கொண்டாடப்படுகிறது.

**தவிர்ப்பது எப்படி?**

பெரும்பாலான தீ விபத்துக்கள் மக்களின் கவனக்குறைவால் தான் ஏற்படுகின்றன. மேலும் எல்லாத் தீவிபத்துக்களும், ஆரம்பத்தில் சிறிய தீ விபத்தாகத் தான் ஆரம்பமாகிறது. இத் தீ

யினை ஆரம்ப காலத்திலேயே தடுத்து நிறுத்திவிட்டால், பெரும் தீ விபத்தினைத் தவிர்த்ததோடு அல்லாமல், உயிரையும் உடைமைகளையும் காத்து, நாட்டுக்கு நன்மை செய்தோராகக் கருதப்படுவீர். உதாரணமாக, வழிப்போக்கன் ஒருவன் புகைபிடித்து, இறுதி சிகரெட் துண்டினை தெருவில் எறிந்துவிட்டு செல்வதாக வைத்துக்கொள்வோம். அணைக்காது வீசப்பட்ட சிகரெட் துண்டு காற்றினால் தள்ளிச் செல்லப்பட்டு, அருகில் உள்ள எளிதில் தீப்பற்றும் பொருட்களோடு சேர்ந்தவுடன் தீப்பற்றத் தொடங்குகிறது. இத்தீயினை ஆரம்பத்திலேயே அணைக்கவில்லையானால், பெரும் தீ விபத்தாக மாறி இன்னல் பல ஏற்படக் காரணமாகிறது. இவைபோன்று மனிதரால் தீ விபத்தை மிக எளிதாகத் தவிர்க்கக்கூடிய காரியங்கள் உண்டு. ஒருவர் தூங்கச்செல்லும்முன் படுக்கையில் புகைப்பதுண்டு. அப்போது தூக்க நிலையில், புகைபிடிக்கும் பொருளிலிருந்து நெருப்பு மெத்தைகளில் விழுந்து, தீப்பற்றக்கூடும். இதனைத் தவிர்க்க புகைப்பிடிப்போர் படுக்கைக்குச் செல்லும் முன்பே வெளியில் புகைபிடித்து முடித்து விட்டு படுக்கைக்குச் செல்லுதல் வேண்டும்.





**உயிர்ச் சேதம் ஆகாமல் பாதுகாப்போம்:**

மேலும் நாம் அன்றாடம் செய்தித்தாளில் ஸ்டவ் வெடித்தோ, தீப்பற்றியோ மகளிர் பெருத்த தீக்காயங்களுடன் உயிர் இழந்து வருவதை படிக்க நேரிடுகிறது. இவற்றிற்கு காரணம் என்னவென்றால், ஸ்டவ் எரிந்து கொண்டிருக்கும்போதே, மண்ணெண்ணெய் ஊற்றுவதும், ஸ்டவ்வின் அருகில் கவனக்குறைவாக மிக நெருங்கிச் செல்லும் போதும், சேலைகளில் திடீரெனத் தீப்பற்றி உயிரிழக்க நேரிடுகிறது. இவற்றினைத் தவிர்க்க வேண்டுமானால், ஸ்டவ் எரியும் போது மண்ணெண்ணெய் ஊற்றக்கூடாது. ஸ்டவ் எரியும்போது, எளிதில்தீப்பற்றக்கூடிய நைலான் சேலை போன்றவைகளை உடுத்திக் கொண்டு, மிக அருகில் கவனக்குறைவாகச் செல்லக்கூடாது. இச்சிறிய காரணங்களைக் கவனத்தில் வைத்து மகளிர் செயல்பட்டால், உயிர் மற்றும் உடைமைகள் இழப்பதைத் தவிர்க்க முடியும். இவைபோன்று கூரை வீடுகளில் சிம்னி இல்லாத விளக்குகளை வைத்திருத்தல் கூடாது. கூரை வீடுகளில் சமையல் செய்யும் இடத்திற்கு மேலே உள்ள கூரையில், தீப்பற்றாத தகடு போன்ற பொருட்களால் அமைத்தல் வேண்டும். பெண்கள் அடுப்பினை எரியவிட்டுவிட்டு வெளியில் செல்லுதல் கூடாது. அடுப்பிலிருந்து எடுக்கப்பட்ட சுடு சாம்பலை உடனடியாக குப்பைகளில் கொட்டுதல் கூடாது. மேலும், எளிதில் தீப்பற்றக்கூடிய பெட்ரோல், மண்ணெண்ணெய், பட்டாசு போன்ற பொருட்களை சமையல் செய்யும் இடத்திற்கு அருகிலும், குழந்தைகள் எடுக்கும் உயரத்திலும் வைத்தல் கூடாது.







**தடுப்பு நடவடிக்கை:**

அலுவலகங்களில் பணிபுரிபவர்கள், அலுவலகத்தில் பணிபுரியும்போது புகைபிடித்தல்கூடாது. ஏனெனில், அலுவலகங்களில் எங்கு பார்த்தாலும் எளிதில் தீப்பற்றக்கூடிய காகிதம் போன்ற பொருட்கள் இருப்பதால், அலுவலகத்தில் புகைபிடித்தல் கண்டிப்பாகத் தவிர்த்தல் வேண்டும். அலுவலகங்களில் ஏற்படக்கூடிய தீவிபத்துக்களைத் தடுக்கவே, தீ வாளிகளில் மணலும், தண்ணீரும் வைக்கப்பட்டு, தடுப்பு நடவடிக்கை கையாளப்பட்டு வருகிறது.

**கவனக்குறைவுதானா?**

இவை போன்று, பெரும் தொழிற்சாலைகளில், கழிவுப் பொருட்களைத் தனியே தீப்பற்றாத இடத்தில் சேமித்துவைத்து அகற்ற வேண்டும். மேலும், தொழிற்சாலைகளில், இயந்திரங்களை சரியான முறைகளில் பராமரிக்கத் தவறினால் அதனிலிருந்து இயந்திரப் பொறிகள் கிளம்பி, தீப்பற்றக் காரணமாகிறது. அதோடு தொழிற்சாலைகளில், குறிப்பாக பஞ்சாலைகளில், அடிக்கடி சுத்தம் செய்து, தீ விபத்தினைத் தவிர்த்தல் வேண்டும். தொழிற்சாலைகளில் அளவுக்கு மீறிய மின் அழுத்தத்தைச் செலுத்தும்போது, ''Short Circuit'' ஏற்பட்டு தீப்பற்றக் காரணமாகிறது. குறிப்பிட்ட அளவிற்குமேல் மின் அழுத்தத்தைச் செலுத்தக்கூடாது.



**தீயணைப்பு வீரர்களின் தீரம்:**

தீயணைப்பு வேலைகளில் ஈடுபடுவது தீயணைப்புப் பணியாளர்களின் கடமை என்று பொது மக்கள் இருத்தல் கூடாது. தீயினை அணைப்பது மக்களாகிய நம் கடமையாகும். தீயணைப்புப் படையினர், தீயணைப்புப் பணியில் ஈடுபடும்பொழுது பொது மக்கள் தங்களாலாகிய உடல் உழைப்பினை நல்கி, தீயணைப்புப் பணி செம்மையாகச் செயல்பட உறுதுணையாக இருக்க வேண்டும். எவ்வாறு உதவி செய்வது என்ற சந்தேகம் எழக்கூடும். பொது மக்கள், தீயணைப்புப் படையினருக்கு தீ பற்றிய தகவல் கொடுக்கும்போது, தீ பற்றிய விபரம், தீ விபத்தின்தன்மை போன்ற விவரங்களுடன், சரியான முகவரி கொடுத்தல் வேண்டும். தகவல் கொடுத்த பின்னர், தீயணைப்பு வேலைகளுக்குவேண்டிய தண்ணீர் உள்ள இடத்தினை பாதுகாத்து தீயணைப்புப் படையினருக்குத் தெரிவித்தல் வேண்டும். தீயணைப்புப் படையினர் தீயணைப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும்போது, அவர்களுடன் சேர்ந்து, தீக்காயமுற்றோர், தீப்பிடித்த இடத்திலுள்ள தீப்பற்றாத பொருட்களைப் பாதுகாப்பான இடத்திற்கு அகற்ற உதவி புரிதல் வேண்டும். இவ்விதம் செய்தால் தீ எளிதில் அணைக்கப்பட்டு, உயிர்களும், உடைமைகளும் காக்கப்பட்டு, நாட்டிற்கும் நமக்கும் நன்மை செய்தவர்களாவோம்.

**வருமுன் காப்பதே நன்று**

''வருமுன் காப்பதே நன்று'' என்ற பழமொழிக்கிணங்க, தீ விபத்தினால் ஏற்படும் இழப்புகளைத் தடுக்கும் வகையில்தான் ஆண்டுதோறும் '' தீயணைப்புத் தொண்டு நாள்'' கொண்டாடப்பட்டு வருகிறது. தீயுடன் போராடுவதைத் தவிர்க்க வேண்டுமானால், மக்கள் கவனத்துடனிருந்து தீ விபத்துக்கள் ஏற்படாமலே தடுத்தால்தான் முடியும் என்ற விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதே இவ்வாண்டு தீயணைப்புத் தொண்டு நாளின் குறிக்கோளாகும்.

''தீயுடன் போராடுவதைத்
தவிர்க்க
தீ விபத்துக்களைத் தடுப்
போம்''

# ரூ. 400 கோடிக்கு இந்திய ஆடைகள் ஏற்றுமதி!

"இந்திய ஆடைகள் ஏற்றுமதி 1979-80ஆம் ஆண்டில் 400 கோடி ரூபாயை எட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1971-72ஆம் ஆண்டில் இது 14 கோடியே 46 இலட்சம் ரூபாய் அளவுக்குத்தான் இருந்தது. இந்திய ஆடைகள் ஏற்றுமதியை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் ஏராளமாக இருக்கின்றன. நாட்டில் இறக்குமதிகளுக்கும், ஏற்றுமதிகளுக்கும் இடையே உள்ள தற்போதைய இடைவெளி அபாய அறிவிப்பாக இருப்பதால், இத்தகைய ஒரு சூழ்நிலையில் ஏற்றுமதி அதிகரிக்க வேண்டியது அவசியமும் ஆகும்.''

ஆடைகள் ஏற்றுமதி ஊக்குவிப்புக் கவுன்சில் புதுடில்லியில் நடத்திய ஆடைகள். ஏற்றுமதி பற்றிய கருத்தரங்கில் பேசுகையில், மத்திய வர்த்தகம், சிவில் சப்ளை, எஃகு, சுரங்கங்கள் அமைச்சர் திரு பிரனாப் முகர்ஜி அவர்கள் இவ்வாறு கூறினார்.

இந்தக் கருத்தரங்கை நடத்துவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நேரம் மிகவும் பொருத்தமான ஒரு காலமாகும். ஆடை ஏற்றுமதி சங்கத்தின் இலையுதிர் காலம், குளிர்கால ஆடை அலங்காரக் காட்சிகள் நடத்தப்படும் சமயத்தில் இக் கருத்தரங்கு நடத்தப்படுவது மிகவும் பொருத்தமுடையதாகும்.

ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் கணிசமான அளவுக்கு இருக்கும் அதேநேரத்தில், கடுமையான போட்டி இறக்குமதி செய்யும் நாடுகளின் கட்டுப்பாட்டு நிலைகள், ஏற்கெனவே வழங்கப்பட்ட ஒப்பந்தங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற சிரமங்களையும் நாம் சமாளிக்க வேண்டியிருக்கிறது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

ஆடைகள் ஏற்றுமதியை அதிகரிக்கும் பொருட்டு ஆடைகள் ஏற்றுமதியாளர்கள் வியாபாரப் புத்திக் கூர்மையையும், புதிது புதிதாகத் தயாரிக்கும் ஆற்றலையும் இவை அனைத்துக்கும் மேலாக ஊக்குவிப்பு உத்திகளையும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் கூறினார். இதற்காக நன்றாகச் சிந்தித்து மேற்கொள்ளப்பட்ட, பல முனைப்பான செயல் திட்டங்களுடன், புத்தி சாதூர்யமான வியாபார முடிவுகளை மேற்கொள்ளவேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினார்.

# இந்தியாவில் வண்ணத் தொலைக்காட்சி!

புதிய தொழில் நுட்ப வளர்ச்சிகளின் காரணமாக இந்தியாவில் மின்சார வசதியுள்ள அனைத்துக் கிராமங்களிலும் தொலைக்காட்சிப் பெட்டிகளை வைத்துக் கொள்ளும் வசதி ஏற்பட்டிருக்கிறது என்று மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு வசந்த் சாத்தே அவர்கள் கூறியுள்ளார்.

ஒக்லா தொழிற்பேட்டையில் அமைந்துள்ள ஒரு சிறுதொழிற்பிரிவு தயாரித்துள்ள முதலாவது வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை வெளியிட்டுப் பேசுகையில், அவர் இவ்வாறு கூறினார்.

இன்ஸாட்-1 எனப்படும் செயற்கைக் கோள் தொலைக்காட்சி வசதியைப் பெரிய அளவில் விரிவாக்குவதற்கான வாய்ப்புக் களைத் தோற்றுவித்துள்ளது. நமது தயாரிப்பாளர்கள் வண்ணத் தொலைக்காட்சி தயாரிப்பதற்கான தொழில் நுட்ப அறிவைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறியும்போது, தாம் மிகவும் ஊக்குவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். வண்ணத் தொலைக்காட்சிகள் பெரும் அளவில் உற்பத்தி செய்யப்படும்போது, ஒரு வண்ணத் தொலைக்காட்சியின் விலை 5,500 ரூபாய் முதல் 6,000 ரூபாய்க்குள் அடங்கும் என்று அமைச்சர் கூறினார்.

வண்ணத் தொலைக்காட்சி ஒரு ஆடம்பரச் செலவு அல்ல என்றும், உலகத்தின் மற்ற பகுதிகளில் ஏற்பட்டுள்ள தொழில் நுட்ப வளர்ச்சிகளுடன் ஈடுகொடுத்து நாம் போக விரும்பினால், நாம் வண்ணத் தொலைக்காட்சித் தயாரிப்பில் ஈடுபட்டுத்தான் ஆகவேண்டும் என்றும் அவர் கருத்து தெரிவித்தார். தொலைக்காட்சி பொழுதுபோக்குக்காகப் பயன்படுவது மட்டுமின்றி கல்விக்கும் பயன்படக்கூடிய சிறந்த வாய்ப்புகள் உள்ளன. திரைப் படங்களைப் பதிவு செய்து தொலைக் காட்சியில் காட்டும் (வீடியோ டேப்) நிகழ்ச்சிகளைக் கல்வி நிலையங்களிலும், மருத்துவக் கல்லூரிகளிலும் பயன்படுத்தலாம் என்று அவர் கூறினார்.

ஒக்லா தொழிற்பேட்டையில் அமைந்துள்ள மற்ற சிறுதொழில் பிரிவுகள் பலவற்றை அமைச்சர் பார்வையிட்டார். அந்தத் தொழிற்பேட்டையில் அமைந்துள்ள சிறுதொழில் பிரிவுகளின் சாதனைகளை அவர் பெரிதும் வியந்தார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


எழில்மிகு
உங்கள்
மொழி வண்ணம்
கோ-ஆப்டெக்ஸ்
எழில் வண்ணம்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

